# சக்தி

13 MAR 1942
MADRAS



மலர் - 4 இதழ் - 4 விஷு - சித்திரை அணா நான்கு

# 'லிஸ்ஸன்' ரேடியோக்கள்

(பிரிட்டிஷ் மேக்)



5 VALVES
MODEL 'DOVER'
3 WAVE BANDS
Rs. 225/-

## நீங்கள் ஏன் 'லிஸ்ஸன்' ரேடியோவையே வாங்கவேண்டும் ?

☆ உத்திரவாதம் உள்ளவை.

☆ உயர்தரமான வேலைப்பாடுகளுடன் கூடியவை.
—'முல்லார்ட்' வால்வுகள் பிட்டப் செய்யப்பட்டுள்ளவை.

☆ அழகும் வனப்பும் வாய்ந்தவை.

☆ குறைந்த விலை உள்ளவை.

☆ A. C. மெயின்களிலும் 6 வால்ட் பேட்டரிகளிலும் வேலை செய்யப்படுபவை—'**WINDSOR**'

☆ போர்டபில் ட்ரை பேட்டரி மாடல்கள்—'**CARAVAN**'

☆ சிக்கன முடையவர்களுக்குக் குறைந்த விலை மாடல்கள்—'**DOVER**'

7 VALVES
MODEL 'KINGS GATE'
4 WAVE BANDS
Rs. 445/-



**Stockists & Sole Distributors for Madras Presidency including Native States:—**

**'ஜயபோன் கம்பெனி' — 1-8, பிராட்வே, மதராஸ்**

JAY-O PHONE COMPANY — 1-8, BROADWAY, MADRAS

# கொலம்பியா

## நக்ஷத்திர ஆர்டிஸ்டு

# ஸ்ரீமதி D. K. பட்டம்மாள் பாடியுள்ள

## ரிக்கார்டுகள்

B16

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 MAR 1942
MADRAS



| | | |
|---|---|---|
| G.E. 936 | பூங்குயில் கூவும் / வெண்ணிலா | — பின்னணி சங்கீதத்துடன் இணைந்தது |
| 924 | எப்போ வருவாரோ | — கமாஸ் |
| | ஸ்ரீ வேணுகோபாலா | — குறிஞ்சி |
| 920 | இன்பக்கனவு கண்டேன் | — ஹி. ட்யூன் |
| | குழலோசை கேட்டாயோ கிளியே | - ஹி. ட்யூன் |
| 909 | ஆடுராட்டே / நம் காந்தியை | — "மகாத்மா காந்தி" பிலிம் பாட்டுகள் |
| 897 | குனித்த புருவமும் பாகம் 1 & 2 | — ராகமாலிகை |
| 879 | பராமுகமேனய்யா | — காஹாப்ரியா |
| | பராத்பரா | — வாசஸ்பதி |
| 871 | மானஸ குருகுஹா பாகம் 1 & 2 | — ஆ. பைரவி |
| 867 | தேசசேவைசெய்ய வாரீர் / பந்தமகன்று & தாயின் மணிக்கொடி | |
| 866 | வைஷ்ணவ ஜனதோ | — ஸி. பைரவி |
| | பாரத புண்யபூமி | — கு. வராளி |
| 853 | ஸ்ரீ முருகனே / கோகுலம் | |
| 848 | சிவகங்கா / வள்ளி கணவன் | |
| G.E. 688 to 693 | கச்சேரி ஸெட் | |

SOLE DISTRIBUTORS :

# P. ORR & SONS, LIMITED

MOUNT ROAD, MADRAS

With 300 dealers throughout South India

## சந்தா விகிதம்

உள் நாடு

| | | | |
|---|---|---|---|
| வருடச் சந்தா | ... | ரூ. | 3 0 0 |
| 6 மாதம் | ... | ,, | 2 0 0 |
| தனிப்பிரதி | ... | ,, | 0 4 0 |

| | பர்மா | மலேயா |
|---|---|---|
| வருடச் சந்தா | ரூ. 4 0 0 | ரூ. 5 0 0 |
| 6 மாதம் | ,, 2 4 0 | ,, 2 12 0 |

சிலோன் 25 சதம்

மாதிரிப் பிரதி வேண்டுவோர் தபாற் செலவு சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

---

### "சக்தி" மாத வெளியீடு

### விளம்பர விகிதம்

அட்டை

| | | | |
|---|---|---|---|
| 2 வது பக்கம் | ... | ரூ. | 30 |
| 3 ,, | ... | ,, | 30 |
| 4 ,, | ... | ,, | 50 |

(அட்டை நாலாவது பக்கம் இரண்டு வர்ணத்தில் இருக்கலாம். இரண்டுக்கு மேற்பட்ட வர்ணங்களுக்கு வர்ணம் ஒன்றுக்கு 10 ரூபாய் கூடுதலாகும்.)

உள் பக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கம் | ... | ரூ. | 25 |
| ½ ,, | ... | ,, | 15 |
| ¼ ,, | ... | ,, | 8 |

ஒப்பந்தம் முதலிய மற்ற விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர், 'சக்தி',
46, முத்துமாரி செட்டித் தெரு;
சென்னை.

---

## ஆசிரியர் அறிவிப்பு

'சக்தி'க்குக் கதை, கட்டுரை, கவிகள் அனுப்புவோர், காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்ப வேண்டுகிறோம்.

கதை, கட்டுரை, கவிகளைத் திருத்தவோ, கூட்டவோ, குறைக்கவோ, மாற்றவோ ஆசிரியருக்குப் பூரண உரிமையுண்டு.

பிரசுரிக்கப்படாத கதை, கட்டுரை, கவிகளைச் சாத்தியமான மட்டில்தான் திருப்பி அனுப்பப்படும். உறுதி கூற முடியாது. அப்படித் திருப்பிப் பெற விரும்புவோரும், தங்கள் விஷயத்தை அனுப்பும்போது கூடவே போதிய தபால் தலை வைத்து அனுப்பவேண்டும்.

ஆசிரியர்,
'சக்தி'

# பொருளடக்கம்


வெற்றிச் சங்கு
சுவாமி சுத்தானந்த பாரதியார் ... 145
காலச் சுழல் ... 146
காந்தி வாக்கு ... 148
'சமரஸ மந்திரி' சார்லி ஆண்ட்ரூஸ்
'ஸ்ரவி' ... 149
காளமேக கவியின் நகைச்சுவை
'ஆனந்தன்' ... 151
போர் வீரர்கள் தங்கும் பெரிய கிளப் ... 153
ஜகத் கீதம்
சங்கு ஸுப்ரஹ்மண்யன் ... 154
கல்லெறி நடுவில் வளர்ந்த சேனை ... 157
மருந்தாய் மாறிய அன்பு
எஸ். விசாலாக்ஷி ... 158
நல்ல வீடு
ந. பிச்சமூர்த்தி ... 160
சொத்துரிமை
லியோ டால்ஸ்டாய் ... 163
செஞ்சிப் பிரயாணம்
காசிநாதன் ... 164
சோர்ந்து போன ஜூகோ நாடு ... 167
குப்பையிலிருந்து செல்வம்
பெ. நா. அப்புஸ்வாமி ... 171
கவியும் உருவமும்
வே. நாராயணன் ... 174
வானவில்
'ஒளிவைரம்' ... 176
மதத்தின் கொடைகள்
தி. ஜ. ர. ... 177
இதுவும் ஒரு ஐந்து
'மு' ... 178
பிரார்த்தனையே சக்தி ... 179
சிந்தனைத் தீபம்
வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ. ... 181
கனவு சிருஷ்டிகன்
ஆர். திருஞானசம்பந்தம் ... 182
காலத்தேர்
சுவாமி சுத்தானந்த பாரதியார் ... 185
பறித்த பூக்கள் ... 189
புத்தக உலகம் ... 190
உடம்பும் மருந்தும் ... 191
பாலர் கதை : வேலையும் கூலியும்
'மாமி' ... 192
,, பாட்டு : கோழி
வண்ணை நெ. வை. செல்லையா ... 193

MADRAS


கச்ச தேவயானி
(மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன் தயாரிப்பு)
டாக்கி பாடல்கள்
கோத்தமங்கலம் சுப்பு
வித்வான் சீனிவாசன்
டி.ஆர்.ராஜகுமாரி
பாடியது
ஓடியன்
ரிகார்டுகளில் கேளுங்கள்
G H RAO
SARASWATHI STORES, MADRAS.



வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி,
வைத்திய ஆசிரியர் & R. I. M. P. என்ற பட்டங்களும்,
அநேக தங்க மெடல்களும், நற்சாக்ஷிப் பத்திரங்களும் பரிசுபெற்றவருமான
திருச்சி டாக்டர் T. C. சிங்காரம் அவர்களின்

# "சித்தாமிர்தம்" (ரெஜிஸ்டர்டு)

(மிகுந்த பலத்திற்கும் வீரிய விருத்திக்கும் நிகரற்றது)

கைகால் அசதி, இடுப்பு வலி, பலஹீனம், நரம்புத் தளர்ச்சி, ஆயாசம், சோகை, பாண்டு, நித்திரையின்மை, சோம்பல் முதலியவைகளை நீக்கி இரத்த விருத்தியையும் அபார தாது விருத்தியையும் உண்டாக்கும். ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை. பெரிய சைஸ் விலை: ரூ. 4-8-0. ஒரு சேர் விலை: ரூ. 2-8-0. அரைச் சேர் விலை: ரூ. 1-6-0.

# சூதக சஞ்சீவி எண்ணெய்

(ஸ்திரீகளுக்கு ஏற்றதோர் அபூர்வ சஞ்சீவி)

ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் சூதக சிக்கல் வியாதியினின்று விடுபட்டு ஷை மருந்தால் நற்சுகம் அடைந்திருக்கிறார்கள். சூதகம் காலந்தவறி வெளியாதல், அதுசமயம் ஏற்படும் பொறுக்கமுடியாத வயிற்றுவலி, இடுப்பு வலி, கைகால் குடைச்சல், பெரும்பாடு, கெர்ப்ப அழிவு முதலியவைகள் குணமாக கெர்ப்ப உற்பத்தியு முண்டாகும்.

பாட்டில் 1-க்கு விலை ரூ. **2-0-0** பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம்.

இவ்விடம் சகல வியாதிகளுக்கும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்
வெளியூர் ஆர்டர்களை கவனித்து அனுப்பப்படும்.

**மகா சந்தனாதித் தைலம்**—கண்களுக்கும் மூளைக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும் சிறந்த ஸ்நானத் தைலம். கண்ணாஸ்பத்திரி டாக்டர்களாலும் வக்கீல்களாலும், ஆயிரக்கணக்கான பள்ளிக்கூட மாணவர்களாலும் புகழ்ந்து போற்றிவரும்படியானது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். விலை: முழுடின் 24 அவுன்ஸ் ரூ. 4-0-0; 12 அவுன்ஸ் ரூ. 2-2-0; 6 அவுன்ஸ் ரூ. 1-2-0.

**டி. சி. சிங்காரம் அண்டு கோ.,**
சித்தானந்த பார்மசி, தெப்பக்குளம் P. O., திருச்சி.

---

கவனியுங்கள்! தக்க லாபம்!!

எங்களிடம் பலவிதமான கெடியாரங்கள்
குறைந்த விலைக்கு உத்திரவாதத்துடன் கிடைக்கும்



No. 1914

கெடியார ரிப்பேர்கள் தேர்ச்சி பெற்ற பேர்களைக்கொண்டு குறித்த காலத்தில் உத்திரவாதத்துடன் செய்து அனுப்பப்படும்.

No. 1914. சுபீரியர் ஸ்டேபிரைட் (Staybright Steel back) 15 ஜுவல்கள் உள்ளது. நீண்டகாலம் யாதொரு ரிப்பேர் அன்றி சரியான காலம் காட்டக்கூடியது. 2 வருஷம் உத்திரவாதம். லீவர் வாட்சு சதுர சையிஸ் உள்ளது. ரூ. 21-0-0.

No. 101. 10 வருஷம் உத்திரவாதமுள்ள ரோல்டு கோல்டு இலிசா (Elisa Lever) லீவர் ரெக்டாங்குலர் ரிஸ்டு 15 ஜுவல்கள் உள்ளதும் $7\frac{3}{4}$ சையிஸ் 5 வருஷம் உத்திரவாதமுள்ளது. ரூ. **31-0-0.**



Elisa
No. 101

No. 102. ஷை மாதிரி எவர் பிரைட் ஸ்டீல் ரூ. **29-0-0.**
No. 103. ரோல்டுகோல்டு காப்டன் (Captain Lever)
$7\frac{3}{4}$ சையிஸ் ரெக்டாங்குலர் 16 ஜுவல்கள் உள்ளது.
(West End Pattern) 5 வருஷம் உத்திரவாதமுள்ளது. ரூ. **41-0-0.**

வரவழைத்து திருப்தி யில்லாவிடில் ஒரு வாரத்தில் பணம் வாபஸ் செய்யப்படும். ஆர்டர் செய்வோர்களுக்கு அழகிய கிருஷ்ணன் போட்டோ கியாலண்டர் இனாமாக அனுப்பப்படும்.

மானேஜர்: **நியூ அமெரிக்கன் வாட்சு கம்பெனி,**
201, பெரிய கடைவீதி, திருச்சிராப்பள்ளி.

ஆர்டர் அனுப்பும்பொழுது "சக்தி" யில் கண்டது என்று குறிப்பிடவும்.

# சக்தி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

மலர் ௪ : இதழ் ௪ | விஷு—சித்திரை


புத்தாண்டு வாழ்த்து :

## வெற்றிச் சங்கு

(சுவாமி சுத்தானந்த பாரதியார்)

சங்கு முழக்கிடுவோம்—வெற்றிச்
சங்கு முழக்கிடுவோம்
பொங்கும் புதியநகை—பாரீர்
பூத்தது வானகத்தில்

பொன்னிளங் காலையிலே—சுதந்தரப்
புட்கள் இசைக்கையிலே
இன்னும் உறங்குவமோ—நாம்
ஏழைகளாய் உலகில்.

இரவி யெழுந்தபின்னும்—இருள்
ஏற்றம் பெறுவதுண்டோ?
உரிமை யுணர்ந்தபின்னும்—வெறும்
ஊமைக் கனவும் உண்டோ?

கோழைத்தனம் விடுவோம்—எதிர்
கூற்றினையுஞ் சுடுவோம்
வாழையடி வாழையாய்—வீர
வாழ்வினை வாழ்ந்திடுவோம்.

ஒற்றுமை பெற்றெழுந்தால்—உண்மை
உள்ளங் கொண்டெழுந்தால்
சுற்றும் பகைத்தலங்கள்—கதிர்
சுட்ட பனித்திரளாம்.

நெஞ்சில் உறுதிகொள்வோம்—மிக
நேர்மையாய் வார்த்தை சொல்வோம்
வஞ்சம் பொறாமையின்றி—ஊர்
வாழ நலம்புரிவோம்.

ஏழைகள் இப்புவியில்—இனி
இல்லை யெனப் புரிவோம்
தோழர்களே வருவீர்—நல்ல
தொழில்களை வளர்ப்போம்.

சச்சரவை யொழிப்போம்—சாதிமதச்
சண்டைகளை யொழிப்போம்
எச்சமயத்தினிலும்—நாட்டில்
எல்லார்க்கும் அன்புசெய்வோம்.

புண்ணியம் ஓங்குகவே—அருட்
புலவர் ஓங்குகவே என்றே
எண்ணித் தொழுதிடுவோம்—சக்தி
ஏற்றம் அளித்திடுவாள்.

## காலச் சூழல்

### அமெரியும் காந்தியும்

‘சத்யாக்கிரகத்தை நிறுத்துங்கள்’ என்று, ‘ஹிந்து’வும், பம்பாய் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’வும் செய்த வேண்டுகோள்களுக்கு, மகாத்மா காந்தி ஓர் அருமையான பதில் அளித்திருக்கிறார். அது பெருந்தன்மையும் கம்பீரமும் வாய்ந்த பதில்; அன்பு கனிந்த பதில். தமது ஜீவிய லட்சியமான அஹிம்சைக் கொள்கையை விட்டுவிடுமாறு எவரும் கேட்கலாமா என்று அவர் உருக்கமாகப் பதில் கேள்வி கேட்கிறார். ஆயினும், பிரிட்டன் மட்டில் இந்தியாவிடம் உண்மையாக நடந்து கொள்ளுமானால், சகல பிரச்னைகளும் திருப்திகரமாகத் தீர்ந்துவிடும் என்று உறுதி கூறுகிறார். இது காந்திஜியின் சமரஸ சமிஞ்ஞையாகும். ஆனால், இந்தியா மந்திரி அமெரி என்ன சொல்கிறார்? பார்லிமெண்டிலே இந்திய விவாதம் நடந்தது. கவர்னர்களின் எதேச்சாதிகாரத்தால், ஓட்டர்கள் கொந்தளிக்காததற்கு அமெரி மனம் பூரிக்கிறார். சாப்ரூ மகாநாட்டின் நிதான யோசனையையும் ஊதித் தள்ளிவிட்டார். பழைய ஆகஸ்டுப் பல்லவியையே திரும்பவும் ஒரு முறை அழுதுவிட்டார். சமரஸத்துக்கு வர மனமில்லாமல் யார் சண்டி செய்கிறார்கள் என்று இனியும் சந்தேகமா? மத்தியதரைக் கடல் நெருக்கடி வலுத்துவரும் இந்த நேரத்திலே கூட, இந்தியாவைத் திருப்தி செய்யப் பிரிட்டனுக்குச் சம்மதமில்லையானால், அது யாரிட்ட சாபமோ, எவர் செய்த தீவினையோ என்றுதான் நாம் வருந்த வேண்டியிருக்கிறது.

### ஜின்னாவுக்கு ராஜ்யம்—ஹமீதுக்கு?

ஜின்னா சாயபு சென்னைக்கு வந்தார். திருவிழாப் பார்க்க வருவது போல, ஏராளமான முஸ்லீம் சகோதரர்களும் சென்னைக்கு வந்தார்கள். லீக் மகாநாடு நடந்தது. ‘பாகிஸ்தான்’ பல்லவியை ஜின்னா சாயபு கொஞ்சம் அழுத்தமாகப் பாடினார்; காங்கிரஸையும் மிதவாதிகளையும் இதரரையும் தாக்கினார். ‘லீக்கின் லட்சியம் இந்தியாவை வெட்டிக் கூறு போடும் பாகிஸ்தானே’ என்று ஊர்ஜிதம் செய்துவிட்டுப் போனார்.

பாகிஸ்தான் யோசனை, போகாத ஊருக்குப் போக வழி தேடுவதாகும். வாதத்துக்காக, பாகிஸ்தான் திட்டம் நிறைவேறுவதாகவே வைத்துக்கொள்வோம். அதனால், வடநாட்டு ஜின்னா சாயபுவுக்கு ஒரு ராஜ்யம் கிடைக்கலாம். ஆனால், எங்கள் ஊர் ஹமீத்கான் சாயபுவுக்கும் ஜனாப் பா-தா. வுக்கும் என்ன கதி? இவர்களும் ஏன் அந்த வடநாட்டுச் சாயபுவோடு சேர்ந்து கூச்சல் போட்டார்கள்? அகில இந்தியாவிலே—ஹிந்துவுக்கும் முஸ்லீமுக்கும் சீக்கியனுக்கும் கிறிஸ்தவனுக்கும் பிறனுக்கும் பொதுவான சமுதாய இந்தியாவிலே—ஹிந்துக்களோடு ஒற்றுமையாய் முஸ்லீம்கள் வாழ முடியாதென்பதற்காகத்தானே பாகிஸ்தான்? அப்படியானால், வெட்டித் துண்டுபோட்டு ஹிந்துக்களின் பாகமான தென்னிந்தியாவிலே நண்பர் ஹமீத்கானும் ஜனாப் பா-தா.வும் எப்படி வாழமுடியும்! இதை அவர்கள் யோசித்தார்களா? இனியாவது யோசிப்பார்களோ?

### லாபமில்லை-சந்தோஷமே

இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் இடையே கடைசியாக ஓர் வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டது மகிழ்ச்சிக்குரியதாகும். இந்த ஒப்பந்தத்தின் முக்கிய ஷரத்துக்களைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

(1) இந்தியாவிலிருந்து பர்மாவுக்குச் செல்லும் பண்டங்களுக்குத் தீர்வை விதிக்கும் உரிமை இனிமேல் பர்மாவுக்கு உண்டு.

(2) இந்தியாவிலிருந்து பர்மாவுக்கு ஏற்றுமதியாகும் சில பொருள்களுக்குப் பர்மா தீர்வை விதிக்காது; மற்றப் பொருள்களுக்குத் தீர்வை விதிக்கும். ஆனால், 5 சத விகிதத்திலிருந்து 15-சத விகிதம் வரையில், அந்தத் தீர்வைகளில் இந்தியாவுக்குப் பர்மா சலுகை காட்டும்.

(3) பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு வரும் அரிசிக்கும் மரத்துக்கும் இந்தியா தீர்வை விதிக்காது; மற்றப் பொருள்களுக்குத்தான் தீர்வை விதிக்கும். அந்தத் தீர்வைகளில் இந்தியாவும் பதிலுக்குப் பதில் பர்மாவுக்குச் சலுகை காட்டும்.

பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் இதுவரை நடந்துவந்த தீர்வையற்ற சுதந்திர வியாபாரத்துக்கு, இந்த ஷரத்துக்களால் சாவுமணி அடித்தாகிவிட்டது. மேலும், இந்த ஒப்பந்தத்தால், இந்தியாவைவிடப் பர்மாவே அதிக வியாபார லாபம் அடையும் என்றே தோன்றுகிறது. ஆனால், இந்த ஒப்பந்தத்தால் இந்திய-பர்மியர் நேச உறவு வலுப்பட ஏதுவாகும் என்று நம்புகிறோம். பர்மாவில் வாழும் இந்தியரது அரசியல் உரிமைகளைப் பாதுகாக்கப் பர்மிய சர்க்கார் அக்கரையெடுத்துக்கொள்ளவேண்டும் என, இந்த ஒப்பந்தக் காலத்தில் இந்தியப் பிரதிநிதிகள் வற்புறுத்தியிருக்கிறார்கள். அந்த ஒரு நம்பிக்கையால்தான், இந்த ஒப்பந்தம் பூர்த்தியானதற்கு நாம் களிப்புறவேண்டியிருக்கிறது.

### தீனபந்து ஞாபகம்

தீனபந்து ஆண்ட்ரூஸ், இந்தியாவைத் தமது தாயகமாய் வரித்து, ஏழை எளிய இந்திய மக்களுக்கு ஸேவை புரிந்த ஓர் உத்தம ஆங்கிலேயர். அவர் காலமாகி இம்மாதந்தான் ஒரு வருஷம் பூர்த்தியாயிற்று. தீனபந்து படாடோபமாய் வாழ்ந்திருக்க முடியும். ஆனால், அவரது கிறிஸ்து பக்தி, அவரைப் பரம எளிமையுடன் வாழச் செய்தது. தேசத்தின் தவப்புதல்வர்களான காந்திஜியுடனும் ரவீந்திர நாதருடனும் அவர் நெருங்கி வாழ்ந்தார். தாகூரின் ஸ்ரீநிகேதன் ஆஸ்பத்திரியைப் பலப்படுத்தி, கிராமத்து ஏழை மக்களுக்கெல்லாம் உதவி புரியவேண்டுமென்று ஆண்ட்ரூஸின் ஆவல். ஏழைக் கிராம வாசிகளுக்குக் குடி தண்ணீர்க்கேணிகள் வெட்டி உதவ அவர் விரும்பினார். கிறிஸ்துவின் சமாதான உபதேசத்தைச் சர்வதேசப் பிரச்னைகளுக்குப் பரிகாரங் காண எப்படி உபயோகிப்பது என்று ஆராய ஒரு கழகம் நிறுவ அவர் ஆசை கொண்டிருந்தார். அவரது ஞாபகார்த்தமாக இந்த வேலைகளை நிறைவேற்றுவதற்கு ஓர் நிதி திரட்ட, மகாத்மா காந்தி முதலிய தலைவர்கள் பல மாதங்களுக்கு

முன் ஓர் வேண்டுகோள் விடுத்தார்கள். ஓர் உத்தமபுருஷனின் ஞாபகார்த்தம்; அதோடு, உத்தேசிக்கப்பட்ட காரியங்களோ மிக அருமையான ஸேவைகள். ஆதலால், பொதுஜனங்கள் தாராளமாய் உதவி, அவற்றை நிறைவேற்ற வேண்டியது அவர்களது கடமையாகும்.

## கம்பன் கழகம்

ஒரு தேசத்தின் ஆத்மா, அதன் இலக்கியமே யாகும். ஒரு நாட்டின் உன்னத இலக்கியத்தைச் சிருஷ்டித்த மகா கவிகள், அந்த நாட்டின் வாழ்வுச் சிற்பிகளாவர். நமது தமிழ்நாட்டின் அத்தகைய வாழ்வுச் சிற்பிகளிலெல்லாம் தலைசிறந்தவன் கம்பன். அவனது மகா காவியம் வானுற ஓங்கியதாகும்; அது உலகத்து அதிசயங்களில் ஒன்றாகும். அந்த மகா காவியத்தை, இன்று நாம் போதியபடி ரசிக்கவில்லை—என், அடியோடு மறந்துவிட்டோம் என்று கூடச் சொல்லலாம். மீண்டும் நாம் கம்பனைப் போற்றி அவனது காவிய அமிழ்தத்தைப் பருகச் செய்வதற்காக, காரைமாநகரில் சில இளைஞர்களின் ஊக்கங்கொண்ட முயற்சியால் கம்பன் விழாவொன்று ஆண்டுதோறும் நடைபெறுகிறது. இவ்வருஷமும் அது மிகச் சிறப்புடன் இனிது நடந்தது அறிந்து மகிழ்கிறோம். அதோடு, இவ்வாண்டில், ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியாரின் தலைமையில் கம்பன் கழகம் ஒன்றும் நிரந்தரமாய் வேலை செய்வதற்காக அமைக்கப்பட்டிருப்பது சாலப் பொருத்தமாகும். கழகத்தில் தமிழ் நாட்டின் பல அறிஞர்கள் ஸ்தானம் வகிக்கிறார்கள். கழகம் தமிழ்நாடு பூராவுக்கும் சொந்தமாகும். கழகம் சிறந்த தொண்டாற்றி, கம்பனது காவிய மணம் தமிழ்நாடெங்கும் வீசுமாறு செய்யுமென நாம் நிச்சயமாய் எதிர்பார்க்கலாம். வாழ்க கம்பன்! வாழ்க தமிழ்!

## கோவைக் குருகுலம்

கோவை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம் குருகுல முறையில் நடைபெறும் ஒரு ஹைஸ்கூல். இங்கே அழகிய இயற்கைக் காட்சிகளுக்கிடையே மாணவர்கள் வசித்துக் கல்வி பெறுகின்றனர். மேலும், தையல், நூற்றல் முதலிய தொழில்களும், சங்கீதமும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. குருகுலத்தில் அனைவரும் உயரிய லட்சியமுள்ள வாழ்க்கை நடத்துகின்றனர். ஒன்று முதல் ஐந்து பாரம் வரை மாணவர்கள் எடுத்துக்கொள்ளப் படுவார்கள். ஆறுவது பாரத்தில் மாணவர்கள் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப் படுவதில்லை. வித்யாலயம் மிக நல்ல சேவை புரிகிறது. இத்தகைய குருகுலங்களைப் பொதுமக்கள் ஆதரிப்பது அவர்களது கடமையாகும்; அது அவர்கள் நாட்டுக்கும் தங்களுக்குமே நன்மை புரிந்துகொள்வதாகும். முழு விவரங்களும் விண்ணப்ப பாரமும் வேண்டுவோர், 'காரியதரிசி, ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயம், கோயமுத்தூர் ஜில்லா' என்ற விலாசத்திற்கு ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

## யுத்தம் நீளுகிறது

போன மகா யுத்தம் பால்கனிலே ஆரம்பித்தது. இந்த மகா யுத்தம் இப்பொழுதுதான் பால்கனுக்கு வந்திருக்கிறது.

முஸலீனியுடன் கூட்டுச்சேர்ந்த ஹிட்லருக்கு, இப்போதுதான் உண்மை விளங்கியிருக்க வேண்டும். முஸலீனி உமி கொண்டுவந்த பேர்வழி; ஹிட்லரின் அவலுக்குத்தான் சேதம். "மத்திய தரைக்கடலை நான் ஒரு கை பார்த்துக் கொள்ளுகிறேன். பிரிட்டனின் கீழ்நாட்டு வழியை வெட்டிவிடுகிறேன்" என்று முஸலீனி ஏற்கனவே ஜம்பம் பேசியிருக்கக்கூடும். ஆனால் கிரேக்கப் போரில், அவரது ஜம்பம் சாயவில்லை. அபிஸீயப் போரிலோ, அடிஸ் அபாபா கூட நேசத் துருப்புகளின் கைக்கு வந்துவிட்டது. லிபியாவிலும் பிரிட்டனுக்குப் பெரும்பாலும் வெற்றிதான். இந் நிலையில், முஸலீனியின் கதி, உலையில் கால் மாட்டிக் கொண்டவன் நிலைமை யாகிவிட்டது. ஹிட்லர் ஓடிவந்தார்.

ஜுகோஸ்லாவியாவில் ஏதேதோ சூழ்ச்சிகள் செய்தார். அதெல்லாம் பலிக்கவில்லை. கடைசியில் மின்னல் போர் தொடுத்தார். வேறு பல சிறிய நாடுகளைப் போலவே, சுமார் பத்தே நாளில், அந்நாடும் கை சளைத்துவிட்டது. ஆப்பிரிக்காவிலே எகிப்தின் வாயிற்படியில் ஜெர்மன் துருப்புகள் வந்து குவிந்திருக்கின்றன. அல்பேனியாவிலிருந்து கிரீஸ் பின்வாங்கிவருகிறது; கிரீஸின்மீது ஜெர்மன் துருப்புகள் கடும்போர் தொடுத்திருப்பதே அதன் காரணம். ஜெர்மனியின் ராட்சஸத் தரைப் படைப் பலத்தால் கிரீஸும் விழுந்துவிட்டால், நாம் ஆச்சர்யப் படுவதற்கில்லை.

அடுத்தாற்போல், துருக்கிமீதும், இராக், இரான் எண்ணெய்க் கிணறுகளின் மீதும் ஹிட்லரின் கடாட்சம் திரும்பலாம். துருக்கி என்ன செய்யப் போகிறது? ஹிட்லரை எதிர்க்குமா? அல்லது வழி விட்டுவிடுமா?

துருக்கியும் ஹிட்லர் கைவசமானாலும்கூட, பிரிட்டனின் ஈடு இணையற்ற கப்பற்படைப் பலத்தால் மத்தியதரைக் கடல் பாதையைப் பிரிட்டன் காப்பாற்றிக் கொள்வது நிச்சயம்.

ஆனால், ஒன்றுதான் நமது சந்தேகம். ஏன் ஹிட்லர் தமது மின்னல் படையெடுப்பை இங்கிலாந்து மீது எடுத்து, இரண்டில் ஒன்று பார்க்கவில்லை? 'இதோ வருகிறேன்; அதோ வருகிறேன்' என்றாரே; அதெல்லாம் வறட்டு மிரட்டல்தானா? முடிவான பலாபலப் பரீட்சை செய்ய ஹிட்லர் ஏன் இன்னும் அஞ்சவேண்டும்? அட்லாண்டிக்கிலும் மத்தியதரைக் கடலிலும் புகுந்து, பிரிட்டனின் கடற் போக்குவரத்துக்களை முற்றுகை யிட ஏன் அவர் முயல வேண்டும்? இதெல்லாம் போர் நீளுவதையே காட்டுகிறது; அதோடு, எங்கே பிரிட்டன் கொல்லைப் புறமாக வந்து தங்களைத் தாக்கிவிடுமோ என்று ஹிட்லர் அஞ்சுவதையுந்தான் காட்டுகிறது.

---

வோட்டர்:—நீங்கள் சாட்சாத் பரமேசுவரனாயிருந்தாலும் சரிதான்; உங்களுக்கு நான் ஓட்டுப் போடமாட்டேன்.

அபேட்சகர்:—நான் பரமேசுவரனாயிருந்தால், உம்மால் எனக்கு ஓட்டுப் போட முடியாது. ஏனெனில், உம்மை நான் இந்த ஊரில் வைத்திருக்கவே மாட்டேன்.

---

# காந்தி வாக்கு

பழைய கட்டுரை—
பிரசங்கங்களிலிருந்து

இந்தியாவின் முடிவான தலைவிதி என்னவாயிருக்கும் என்று நாம் அறியோம். ஆனால், அது நம்மால்தான் ஆக்கப்பட்டு வருகிறது என்றும், இந்தியாவே கதியாய் வாழும் மக்களான நாம் ஒவ்வொருவரும் என்ன விரும்புகிறோமோ அதுவே அதன் தலைவிதியாகும் என்றும் மட்டும் அறிவோம்; இதற்கு மேல் நமக்கொன்றும் தெரியாது. ஏனெனில், ஹிந்துஸ்தானத்தின் பல கோடிக் கணக்கான ஜனங்களின் உள்ளங்களை ஆட்டிவைக்கும் சக்தி நமக்குக் கிடையாது. ஆனால், நாம் ஒவ்வொருவரும் நன்மையே விளையும் என்ற நம்பிக்கையுடையோர் ஆகவேண்டும். அப்படி யாவோமானால், மிகப் பிரகாசமான எதிர்காலம் இந்நாட்டுக்கு வந்தே தீரும். இன்று தினம் இந்நாட்டிலுள்ள ஒவ்வொருவனும் 'இந்த நாட்டுக்காகவே நான் வாழ்கிறேன். இந்த நாட்டுக்காகவே என் உயிரையும் விடுவேன்' என்று சொல்லிக் கொள்ளக் கூடியவன் ஆகவேண்டும்.

## அன்புடன் அழிக்கலாம்

ஒரு அழகான தூர திருஷ்டிக் கண்ணாடி விஷயத்தில் எனக்கும் எனதருமை சிநேகிதன் ஒருவனுக்கும் சதா சச்சரவு வந்ததால், அதை நான் கடலில் எறிந்துவிட்டது எனக்கு ஞாபகம் வருகிறது. முதலிலே அவன் தயங்கினான்; ஆனால், அழகியதும் விலை உயர்ந்ததுமான அந்தப் பொருளை—அது ஒரு நண்பன் அளித்த பரிசாயிருந்துங் கூட—அழித்தது நியாயமே என்று அவன் அறிந்து கொண்டான். உயர்ந்த நன் கொடைகளாகவேயிருந்தாலும், அவை ஒரு மனிதனின் ஒழுக்க முன்னேற்றத்துக்குத் தடை ஆகும்போது சற்றும் தயங்காமல் அவற்றை அடியோடு அழித்து விடுவதே நலமாகும். மதிப்பரிய பரம்பரைச் சொத்துக்களாயினும், 'பிளேக்' பூச்சி பீடிக்குமானால், அவற்றை நெருப்பிலே போட்டுத் தகிப்பதே நமது புனிதமான கடமையாகுமல்லவா? நான் வாலிபனாயிருக்கும்போது, என் அரிய மனைவி ஆசையோடணிந்திருந்த கைவளையல்கள் சம்பந்தமாக அவளுக்கும் எனக்கும் தகரார் வந்ததால், அவற்றை நான் உடைத்து விட்டது எனக்கு நினைவிருக்கிறது. அவை அவளுக்கு அவள் தாயார் அளித்த பரிசுகள் என்று ஞாபகம். குரோதத்தினால், அவற்றை நான் அழிக்கவில்லை; அன்பினாலேயே அழித்தேன்—ஆனால் அறியாமையோடு கூடிய அன்பு என்று, அனுபவ முதிர்ந்த இந்த வயதில் அது எனக்குத் தோன்றுகிறது. அந்த வளையல்களை அழித்ததால், எங்களுக்கு அநுகூல மேற்பட்டது; எங்களுக்குள் நேசம் வளர்ந்தது.

## நான் கவி இயற்றினால்—

எனக்குக் கவிகள் இயற்றும் சக்தி இருக்குமானால், நான் ராட்டினத்தைப் பற்றிப் பாடுவேன்; அழகும் பயனும் கவிதையும் சமய தர்மமும் அதில் பொதிந்திருப்பதைப்பற்றிப் பாடுவேன். நல்ல தருணத்திலே அதை ஆண்டவன் நமக்கு உதவியதற்காக, அவர் புகழையும் நான் பாடுவேன். ராட்டினத்தைக் கொண்டு, பசியும் அவமானமும் தங்கள் அருகே கூட அண்டாதபடி அவற்றை விரட்டுமாறு, எனது இந்திய சகோதரிகள் யாவரையும் என் பாட்டின் மூலம் நான் வேண்டிக் கொண்டிருப்பேன். ஆனால், எனக்குக் கவி இயற்றும் சக்தியில்லையே! எனினும், அந்தப் பாடலை என் ஆத்மா மட்டில் உள்ளுக்குள்ளே பாடிக்கொண்டுதான் இருக்கிறது. ஆதலால் நான் என்ன செய்ய முடியும்? ராட்டினத்தை நானே சுற்றி, பிறரும் அதைக் கைக்கொள்ளச் சொல்லுவதன் மூலம், ராட்டினம் தன்பாடலைத் தானே பாடுமாறு செய்து வருகிறேன்.

## பாலில் கலந்த விஷம்

பாலை ஒரு சொட்டு விஷம் கெடுத்துவிடுவது போல, ஹிந்து மதத்தைத் தீண்டாமை என்னும் விஷம் கெடுத்து வருகிறது. பாலின் குணத்தையும், உபயோகத்தையும், விஷத்தின் தன்மையையும் அறிந்த நாம், பால் குடத்தின் அருகே உட்கார்ந்த ஒருவன் அதிலுள்ள விஷத்தைக் கடுகு கடுகாய் அகற்றி விட முயல்வானாயின், அவனிடம் ஆத்திரமே கொள்வோம்; பாலைக் குடத்தோடு தான் கவிழ்ப்போம். அம்மாதிரியே, நான் ஓர் ஹிந்து என்ற முறையில் ஹிந்து மதம் என்ற பாலைத் தீண்டாமைச் சாபம் விஷப்படுத்தி வருகிறது என்றே கருதுகிறேன். ஆதலால், இத்தகைய தொரு விஷயத்தில் பொறுமையைக் கடைப்பிடித்தல் புண்ணியமல்ல என்று உணர்கிறேன். இதில் நமது ஆத்திரத்தை அடக்கிக்கொள்வது அசாத்திய மாகும்.



## ஏன் ஹிந்துவாய் இருக்கிறேன்?

ஹிந்து மதம் நம்மைப் பயத்தினின்றும் காப்பாற்றியுள்ளது. ஹிந்து மதம் எனக்கு அபயமளித்திராவிட்டால், நான் தற்கொலை புரிந்துகொண்டிருப்பேன். உலகத்தை வாழ யோக்கியமாய்ச் செய்திருக்கும் சுவை ஹிந்து மதம். அதனால்தான் நான் ஹிந்து மதத்திலேயே இருக்கிறேன். ஹிந்து மதத்திலிருந்தே புத்த மதம் பிறந்தது. தற்போது நாம் காண்பது தூய ஹிந்து மதம் அல்ல; ஹிந்து மதத்தின் உருக்குலைந்த கேலிக் கூத்தேயாகும். இல்லையானால், அதற்காக நான் இப்படிப் பரிந்து பேசவேண்டியிராது; அதுவே உங்களிடம் பேசியிருக்கும். நான் பரிசுத்தமாயிருந்தால், உங்களோடு நான் பேசத் தேவையிராது; இதேபோலத்தான் அதுவும். கடவுள் தமது நாவினால் பேசுவதில்லை. மனிதன் எத்தனைக் கெத்தனை கடவுளை அணுகுகிறானோ அத்தனைக் கத்தனை அவன் கடவுளே யாகிவிடுகிறான். என் உள்ளத்திலே வசிக்கும் ஆத்மாவுக்கு வரம்பு என் தேகந்தான் என்று ஹிந்து மதம் எனக்குப் போதிக்கிறது.

---

"நாம் சோம்பி உட்கார்ந்திருக்கும் போதுதான் பயங்கள் உண்டாகின்றன. பயம் என்பது உள்ளத்திலே தோன்றினால், 'ஏதாவது வேலை செய்' என்று இயற்கை செய்யும் எச்சரிக்கையாகவே அதை நாம் கருத வேண்டும்."
—டாக்டர் ஹென்றி ஸி. லிங்க்.

---

"தலைபணிந்து வாழ்வதை விட, நிமிர்ந்து நின்று சாவதே மேல்"—டோலோரீஸ் இப்பாரூரி (ஸ்பெயின் தேசபக்தர்.)

---

# யுத்தம்

நடக்கும் சமயத்தில்கூட மார்க்கட் நிலவர
ஏற்றத் தாழ்வினல் பாதிக்கப்படாதது

## லைப் இன்ஷியூரன்ஸ்

அதற்குத் தேய்மானம் கிடையாது; நஷ்டம் கிடையாது; ஆனல், லாபம் கூடுவதால், அதன் மதிப்பு அதிகரிக்கிறது. உடனே சொத்து ஏற்படுத்துகிறது. எதிர்காலப் பாதுகாப்பாகவும் இருக்கிறது. அதன் பெறுமானம் தன் இயற்கை மதிப்புக்கு அதிகமாகவே யுள்ளது.

எவ்விதமான பண நிலையி லிருப்பவர்களுக்கும் யாவருக்கும் ஏற்ற லாபகரமான, பத்திரமான, நாணயமான பாலிஸிகளை **ஹிந்துஸ்தான்** அளிக்கிறது.

இதில்

இன்றே, இப்பொழுதே

**இன்ஷியூர் செய்யுங்கள்**

HINDUSTHAN CO-OPERATIVE INSURANCE SOCIETY LD. — DELHI, CALCUTTA, BOMBAY, MADRAS

## ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷியூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

தலைமை ஆபீஸ்:
'ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்'
ஸுரேந்திரநாத் பானர்ஜி ரோடு,
கல்கத்தா

மெதறாஸ் பிராஞ்சு:
'ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்'
107, அரண்மனைக்காரத் தெரு,
சென்னை

கோயமுத்தூர் குமார் பிக்சர்ஸார்
சமர்ப்பிப்பது

திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த தமிழ்ப் படங்களுக்குள்
இவ்வருஷத்திலேயே தலைசிறந்தது

# தர்ம வீரன்



பி. யு. சின்னப்பா
எம். ஏ. ராஜாமணி
நடித்தது

☆

முக்கிய
நகரங்களிலெல்லாம்
கூடிய சீக்கிரம்
வெளிவரப் -
- போகிறது

ஸோல் டிஸ்டிரிபியூட்டர்கள் :

குமார் பிக்சர்ஸ், கோயமுத்தூர்
(சேலம், கோயமுத்தூர், மைசூர் சமஸ்தானம், மலாயா ஆகிய இடங்கள் மாத்திரம் விலக்கு)

பிரபலஸ்தர் வரிசை 9 :

# ★ 'சமரஸ மந்திரி' சார்லி ஆண்ட்ரூஸ் ★

"அற்ப மானிடனே! உனக்கு என்ன தெரியும்? உன்னால் என்ன ஆகும்? ஸர்வ தர்மங்களையும் துறந்து விடு; என்னையே புகலாய் அடை; என் கருவியாக ஆகிவிடு. உன் மூலம் இயற்கையின் காரியங்கள் நிறைவேறும். பாவ புண்ணியங்கள் உன்னைச் சேரமாட்டா" என்பது கீதையிலே கண்ணன் உபதேசிக்கும் பக்தி மார்க்க ஸாரமாகும். இம்மாதிரி கிறிஸ்துவினிடத்தே தம்மையிழந்த உத்தம ஆங்கிலேயர் **தீனபந்து ஆண்ட்ரூஸ்.** கிறிஸ்துவினிடம் கொள்ளும் காதலை 'நித்ய வசந்தம்' என்று வர்ணித்தாராம் ஒரு கிரேக்க பண்டிதர். அந்த வர்ணனையை அடிக்கடி மேற்கோள் கூறி வந்த தீனபந்து, தாமும் அந்த 'நித்ய வசந்த'த்திலே ஆழ்ந்து கிடந்தார்.

1871-ஆம் ஸு பிப்ரவரி மீ 12உ, இங்கிலாந்தில் கார்லிஸ்லீ நகரில் ஸ்ரீ ஸி. எப். ஆண்ட்ரூஸ் பிறந்தார். படிப்பிலே நல்ல சூடிகை. பெம்ப்ரோக் காலேஜில் மூன்று பாடங்களிலே முதன்மையாய்த் தேறினார். அதே காலேஜில் 1899-ஆம் ஸு ஒரு புரொபஸரானார். அதற்கடுத்த வருஷம் கேம்பிரிட்ஜ் வெஸ்ட்காட் ஹவுஸுக்கு உதவிப் பிரின்ஸிபால் ஆனார்.

தங்கள் குலத்தாரால் அடக்கியாளப்படும் இந்தியாவுக்குத் தாம் நேரே சென்று, அந்நாட்டு மக்களுக்குத் தம்மாலான சேவைகளைப் புரியவேண்டுமென்று, சிறுவயதிலேயே ஆண்ட்ரூஸுக்கு ஆவல் உண்டாகியிருந்தது.

1904-ஆம் ஸு டில்லி ஸ்டீபன்ஸ் காலேஜில் ஒரு புரொபஸர் பதவி வகிக்க அவருக்கு அழைப்பு வந்தது. ஆண்ட்ரூஸ் அதை ஏற்கத் தீர்மானித்தார். ஆனால், நண்பர்களுக்கெல்லாம் அதில் சம்மதமில்லை. "நீங்கள் பிரிட்டனிலேயிருந்தால், கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் புரொபஸர்களுக்கெல்லாம் தலைமைப் புரொபஸர் ஆகிவிடலாம். அரசியலில் இறங்கினால், பிரதம மந்திரி பதவி கூடப் பெற்றுவிடலாம். ஏன் இந்தியா சென்று, உங்கள் வாழ்க்கையைப் பாழாக்கிக்கொள்ள வேண்டும்?" என்று அவர்கள் தடுத்தார்கள். ஆண்ட்ரூஸ் அதற்கெல்லாம் மசியவில்லை. "இந்தியா



அழைக்கிறது!" என்ற இரண்டே வார்த்தைகளால் அவர்களுக்குப் பதில் சொல்லிவிட்டார். இந்தியாவுக்கும் வந்து சேர்ந்தார்.

1913-ஆம் ஸு வரையில் ஸ்டீபன்ஸ் காலேஜிலேயே ஆண்ட்ரூஸ் சேவை புரிந்து வந்தார். அந்த வருஷத்தில் கவி ரவீந்திரநாத் தாகூரின் விசுவபாரதி ஆசிரமத்துக்குச் சென்று கவிஞருடன் உறவு கொள்ளலானார். இச்சமயம்தான் மகாத்மா காந்தியின் தென்னாப்பிரிக்க சத்தியாக்ரகம் நடந்து கொண்டிருந்தது. தென்னாப்பிரிக்கா வெள்ளையர் தோட்டங்களில் இந்தியத் தொழிலாளர் 'அரையடிமை'த் தனத்துடன் நடத்தப்பட்டு வந்ததையும், இந்தியர் அனைவர்க்கும் யூனியன் சர்க்கார் விதித்த மூன்று பவுன் தலைவரியையும் எதிர்த்து, காந்திஜி போர் புரிந்துகொண்டிருந்தார். அந்தப் போராட்டத்தை ஆதரித்து, காலஞ்சென்ற ஸ்ரீ கோபாலகிருஷ்ண கோகலே, டில்லியில் ஒரு உருக்கமான பிரஸங்கம் புரிந்தார். அதிலே மனமுருகிய ஆண்ட்ரூஸ், தாம் சேர்த்து வைத்திருந்த பணம் முழுவதையும் தென்னாப்பிரிக்க இந்தியர் இயக்கத்துக்கு

('ஸரஸி')

உதவி விட்டார். அது மட்டிலுமல்ல; டில்லி ஸ்டீபன்ஸ் காலேஜ் புரொபஸர் பதவியையும் துறந்தார். தென்னாப்பிரிக்காவுக்குத் தாம் நேரே சென்று ஸேவை புரியப் பறந்தோடினார்.

டர்பன் துறைமுகத்திலே, ஸ்ரீ ஆண்ட்ரூஸை வரவேற்க, காந்திஜி வந்து காத்து நின்றார். அப்போது, அவர் 'மகாத்மா' அல்ல; சாதாரண 'காந்தி'தான். ஆயினும், கரையிலே காலடியெடுத்து வைத்ததும், ஆண்ட்ரூஸுக்கு என்ன தோன்றிற்றோ என்னவோ! பரதனைக் கண்ட குகனைப் போல, காந்தியின் அடிகளில் விழுந்து, அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினார். 'தரித்திர நாராயண'னுக்குத் தொண்டுபுரியும் காந்திஜி ஓர் உத்தம புருஷன் என்று எப்படியோ ஆண்ட்ரூஸுக்கு அப்போதே புலனாகி விட்டது. என்ன அநியாயம்! ஓர் இந்தியக் கறுப்பனுக்கு, வெள்ளைக்காரன் ஒருவன் அடிபணிவதா? 'என்ன துரோகம்! காலங் கெட்டுப் போய்விட்டதே!' என்று பெருமூச்சு விட்ட தென்னாப்பிரிக்க வெள்ளையர்கள், இதைப்பற்றிப் பிரமாதமாய்க் கூச்சலும் போட்டார்கள். ஸ்ரீ ஆண்ட்ரூஸ் அதையெல்லாம் லட்சியம் செய்யவில்லை. காந்திஜீக்குப் பக்க பலமாய் நின்று பூர்ண உதவியும் புரிந்தார். கடைசியிலே, காந்தி-ஸ்மட்ஸ் ஒப்பந்தம் நடந்தபோது, அதைத் துரிதமாய் நிறைவேறச் செய்தவர் ஸ்ரீ ஆண்ட்ரூஸ்தான்.

இதன் பின்னர், பிஜித் தீவுகள், அஸ்ஸாம் தோட்டங்கள், மேற்கிந்தியத் தீவுகள், பிரிட்டிஷ் கயானா, கென்யா முதலிய இடங்களிலும் இந்தியத் தொழிலாளரின் துயர் துடைப்பதற்காக ஒன்றன்பின் ஒன்றாய்ச் சென்று, சார்லி ஆண்ட்ரூஸ் உழைத்தார். இடையிடையே இந்தியாவுக்கு வந்து, கவிஞர் தாகூரின் சாந்தி நிகேதனத்தில் தங்கி ஓய்வும் மனச் சாந்தியும் பெறுவார். மகாத்மா காந்தியிடமும் தாகூரிடமும் ஸ்ரீ ஆண்ட்ரூஸுக்கு மிகுந்த பக்தியும் பிரேமையும் இருந்து வந்தன. தாகூரை 'குரு தேவ்' என்றே ஸ்ரீ ஆண்ட்ரூஸ் அழைப்பார்.

சர்வ தியாகம் செய்துவிட்டு, திக்கற்ற மக்களுக்குப் பணிவிடை புரிவதை

யே வாழ்க்கையின் லட்சியமாக அவர் கைக்கொண்டதால், அவருக்குத் 'தீனபந்து' என்ற அன்புப் பட்டம் சித்தித்தது. அவர் எந்த வேலையையும் கேவலமாக நினைப்பதில்லை. மகாத்மாஜியிடமிருந்து பல முறை அதிகாரிகளுக்கு ஆண்ட்ரூஸ் தூது சென்றிருக்கிறார். காங்கிரஸ்காரர் எவரும் பூரண சுதந்திரமே இந்தியாவுக்கு வேண்டும் என்று சொல்லு முன்னமே, 1921-ஆம் வருஷத்திலேயே, இந்தியாவுக்குப் பூரண சுயேச்சைதான் வேண்டும் என்று ஆண்ட்ரூஸ் கருதிவிட்டார். இவ்விஷயத்தில், மகாத்மாஜிக்கும் தீனபந்துவுக்கும் அபிப்பிராய பேதம் கூட ஏற்பட்டது. காந்திஜி உபவாசம் கிடந்த போதெல்லாம், பக்கத்திலே யிருந்துகொண்டு ஆண்ட்ரூஸ் பணிவிடை புரிந்திருக்கிறார்.

தமக்கு என்று ஆண்ட்ரூஸ் எதையும் வைத்துக் கொள்வதில்லை. புத்தகம், பொருள், பணம் எதுவா யிருந்தாலும் சரி; தமது உபயோகம் தீர்ந்ததும் பிறருக்குத் தானம் செய்து விடுவார். குழந்தைபோல் உள்ளம் படைத்தவர் ஆண்ட்ரூஸ். யாரையும் நம்பி விடுவார். ஆகையால், சில சமயம் துஷ்டர்கள் அவரை ஏமாற்றுவதுண்டு. அதற்காக அவர் வருந்துவதில்லை; சந்தோஷமே யடைவார். தீனபந்து தமக்கு எதையும் வேண்டி ஒருபோதும் கடவுளைப் பிரார்த்திப்பதே யில்லை. நண்பர்களுக்கு அருளவேண்டு மென்றே அவர் எப்போதும் பிரார்த்திப்பது வழக்கம். தர்க்கம் அவருக்குப் பிடிப்பதேயில்லை. 'வெல்லாமல் எவரையும் வெருட்டிவிட வகைவந்த வித்தை யென் சித்தி தருமோ?' என்று தமிழ் ஞானி கூறியிருக்க வில்லையா? 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப'திலேதான் அவருக்கு ஆர்வம்.

தீனபந்து மிக அழகான நடை எழுதுவார். தெளிவும் அருவி நீரோட்டமும் போன்றது அவர் வசனம். அவர் வாழ்ந்தது கிறிஸ்து தர்மத்துக்காக; அவர் எழுதிய தெல்லாம் கிறிஸ்து தர்மத்தைப் பற்றியே.

1935-ஆம் ஸு கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை ஸ்தாபனக் கூட்டம் ஒன்று நடந்தது. தீனபந்து ஆண்ட்ரூவின் பிரசங்கம். அப்போது அவர் ஓர் அற்புதமான யோசனை கூறினார். பிரிட்டிஷ் சர்க்காரின் அந்நிய மந்திரி இலாக்காவும் அதன் ராஜ தந்திரங்களும் உலக சமாதானத்தை வளர்க்கப் பயனில்லை என்று அவர் கண்டார். ஆகையால், மற்றோர் 'அந்நிய மந்திரி' இலாக்கா தங்களுக்கு வேண்டுமென்று தீனபந்து கூறினார். அந்த மந்திரியின் கீழே ஒரு தொண்டர் கூட்டம் திரட்டவேண்டும். அதன் வேலை என்ன? உலகின் எந்தக் கோடியிலே துயரமும் கஷ்டமும் நேரிட்டாலும் சரி; அங்கெல்லாம் இந்தச் சமாசு இலாக்காவின் 'தொண்டர் படைகள்' சென்று, கஷ்ட நிவாரண கைங்கரியம் புரியவேண்டும் — இதுதான் சார்லி ஆண்ட்ரூவின் நூதன யோசனை. இந்த யோசனையைக் கேட்டவர்கள், 'இவரே நமது சமரஸ மந்திரி' என்று மகிழ்ச்சி கொண்டார்கள். ஆண்ட்ரூவின் இவ்வரிய யோசனை பலித்துப் பலனும் தரத் தொடங்கிற்று. ஆண்ட்ரூஸ் இந்தியாவுக்கு வந்து விட்டார். என்றாலும், அவர் யோசனை கூறிய சமரஸத் தொண்டர் படையினர், பல நாடுகளுக்கும் சென்று சேவை புரியத் தொடங்கினார்கள். ஸ்பெயின், நார்வே, இத்தாலி, பிரான்ஸ், டென்மார்க், ஸ்வீடன், அயர்லாந்து, ஹாலந்து, ஜெர்மனி முதலிய நாடுகளை யன்றி, ஐக்கிய அமெரிக்காவில் கூட, இந்தச் சமரஸத் தொண்டர் இயக்கம் மிக மும்முரமாகப் பரவியது.

கடைசிக் காலத்தில் ஆண்ரூட்வின் உடல்நிலை வரவரக் குன்றி வந்தது; முதுமையால் தள்ளாமை மிகுந்து வந்தது. இதைக் கண்ட சில நண்பர்கள், "இங்கிலாந்துக்கு வந்து, ஓர் அமைதியான இடத்தில் தங்கி, உங்கள் தெளிவான எழுத்தின் கனிகளான பல நூல்களை இயற்றி உலகுக்கு அளியுங்களேன்" என்று ஆண்ட்ரூஸை வேண்டினார்கள்.

"மாட்டேன்; இந்தியாவை விட்டு வேறெங்கும் சென்றால் என்னால் தங்க முடியாது" என்று பிடிவாதமாய் அவர் மறுத்து விட்டார்.

கல்கத்தா ஆஸ்பத்திரியில் அவருக்கு இரண்டு ஆப்பரேஷன்கள் செய்தவர்ஜன், "இரண்டாவது ஆப்பரேஷன் ஐரோப்பாவில் செய்து கொண்டால் நலம்" என்று ஆண்ட்ரூஸுக்கு யோசனை சொன்னார். அவரது வைத்தியச் செலவுகளை யெல்லாம் பொறுத்துக் கொண்ட ஸ்ரீ ஜி. டி. பிர்லா, அவரை உடனே விமானத்திலே இங்கிலாந்துக்கு அனுப்பிச் சிகிச்சை செய்விக்க வேண்டுமென்றால், அந்தச் செலவையும் சந்தோஷமாகவே ஏற்றுக் கொண்டிருப்பார். ஆனால், தீனபந்துவுக்கோ இந்தியாவை விட்டு அசைய இஷ்டமில்லை. இந்தியாவைத் தமது ஆத்மீகத் தாய் நாடாக வரித்துக் கொண்டிருந்த அவருக்கு, அந்திம காலத்தில் இதை விட்டு அகல எப்படி மனம் வரும்?

நோய் வரவர முற்றியது. 1940-ஆம் ஸு ஏப்ரல் மீ 5உ நண்பர்கள் புடைசூழ, அமைதியும் சாந்தமுமாகவே, அவரது ஆவி பிரிந்தது. தீனபந்து முன்னெச்சரிக்கையாகத் தயாரித்து வைத்துச் சென்ற அரிய இறுதிச் செய்தியின் கடைசிப்பகுதி இது தான்: "இந்த ஆஸ்பத்திரியில் நான் படுத்துக் கொண்டிருக்கையில் எனது பிரார்த்தனைகள், என் கஷ்டங்களைப் பற்றியன மட்டும் அல்ல. எனது கஷ்டங்கள் அவ்வளவு முக்கிய மல்ல; மனித வர்க்கம் பூராவும் கஷ்டப்படுவது பற்றியே நான் பிரார்த்திக்கிறேன். கடவுளின் ராஜ்யம் வரவேண்டும் என்றும் பரமண்டலத்தில் நடப்பதுபோலவே இப்பூமியிலும் கடவுளின் சித்தம் நிறைவேற வேண்டுமென்றும் நான் ஒவ்வொரு நிமிஷமும் பிரார்த்தனை செய்கிறேன்." 'தமக்கென வாழாப் பிறர்க் குரியாளரான தீனபந்துவின் பிரார்த்தனை வேறெவ்வித மிருக்க முடியும்?



எச். லாஸெல்லி என்றீ கனடிய விமான வீரர்; ஏற்கனவே குத்துச் சண்டைப் பயில்வானு யிருந்து, 300 பந்தயங்களில் 275 தடவை ஜயித்தவர்.

# காளமேக கவியின் நகைச்சுவை

(ஆனந்தன்)

சிரித்த முகத்தைக் கண்டால் மகிழ்ச்சியுண்டாகிறது. உம் என்றிருப்பவரை நாம் உம்மணா மூஞ்சி என்று எண்ணி விலகிச் செல்லுகிறோம். கடுகடுப்பானவரைக் கண்டால் "இவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கிறதே!" என்று அருவருத்துச் செல்லுகிறோம்.

அதேமாதிரியே பேச்சிலும், செருக்கும் வஞ்சமும் பொறாமையும் கொண்டவரை நாம் வெறுக்கிறோம். யாராவது குலுங்கக் குலுங்கச் சிரிக்கும்படி இனிமையாகப் பேசினால், அல்லது கதை சொன்னால், நமக்கு உச்சி குளிர்ந்து போகிறது.

நகைச்சுவை, மனிதனுக்குச் சிறப்பான ஒரு தன்மையாகும். அது வாழ்வுக்கு அவசியமாகும்; களிப்பும், கவர்ச்சியும் உண்டாக்கும்; கவலையைப் போக்கும். சிரிப்பினால் மனத்துக்கு ஆறுதலுண்டு.

சிரிப்பிலும் பலவகையுண்டு. அது அவரவர் உணர்ச்சிக் கேற்றபடியே அமையும். சினச் சிரிப்பு, அசட்டுச் சிரிப்பு, கேலிச் சிரிப்பு, அகங்காரச் சிரிப்பு, அலட்சியச் சிரிப்பு, நயவஞ்சச் சிரிப்பு ஆகிய சிரிப்புகள் பிறரைப் புண்படுத்தும்; இவை மனிதனுள்ளிருக்கும் கெட்ட உணர்ச்சிகளினின்றும் பிறப்பவையாம். ஆழ்ந்த கருத்தும் பயனுள்ள சொல்லும் கொண்ட நகைச் சொற்கள் பிறரை மகிழ்விப்பதுடன், நல்ல படிப்பினையும் தரும். அத்தகைய நகைச்சுவையே சிறந்ததாகும்.

இக் காலத்தில் நகைச்சுவைக்கு ஒரு மதிப்பும் பயனும் இருக்கக் காண்கிறோம். அது அச்சிலும் மேடையிலும் செல்வாக்குப் பெற்று வருகிறது. பத்திரிகைக ளெல்லாம் இச்சுவையில் கருத்தூன்றுகின்றன. நகைச்சுவையாக எழுதும் எழுத்தாளரைப் பொது ஜனங்கள் விரும்பிப் போற்றுகிறார்கள். நகைச்சுவையைக் கொண்டே பெரிய பெரிய அரசியல் சமுதாய விஷயங்களை யெல்லாம் பொது ஜனங்களின் மனத்திற்படும்படி சொல்லும் திறமை நம்மவருக்கு அதிகரித்து வருகிறது. இத்துறையில் நமது தமிழ்நாடே முன்னணியில் நிற்கிறது. இங்கே பல நகைச்சுவையெழுத்தாளர் தோன்றி விளங்குகிறார்கள்.

நகைச்சுவை தமிழருக்குப் புதியதன்று. நமது காவியங்களில் இச்சுவை ஏராளமாகக் காண்கிறது. மார்க் ட்வைன், மோலியர், டிக்கென்ஸ், அடிஸன், அநதோல் பிரான்ஸ் போன்ற மேனாட்டாசிரியர்கள் நகைச் சுவையை எவ்வளவு திறமையுடன் கையாளுகிறார்களோ அவ்வளவு திறமையுடன் நமது நாட்டு நாவலரும் பாவலரும் நகைச்சுவையைக் கையாளுகிறார்கள். அவர்களின் சொற்களில் ஆழ்ந்த கருத்தும், வாழ்வுக்கொரு படிப்பினையும், உண்மையான அனுபவ விளக்கமும் உள்ளன. காளமேகம், ஔவையார், கம்பர், இரட்டையர், படிக்காசுப்புலவர், திருமுக விலாசம் என்னும் அரிய நூலைப் பாடிய வில்லியப்பக் கவிராயர், நமது காலத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார், கவி குஞ்சர பாரதியார், வேதநாயகம் பிள்ளை, டாக்டர் சுவாமிநாதையர் முதலிய பல புலவர் மணிகள் நகைச்சுவையைத் திறமையுடன் கையாண்டிருக்கிறார்கள்.

நகைச்சுவைப் புலவரில் மிகச் சிறந்தவர் காளமேகப் புலவராவார். இவர் ஸ்ரீரங்கநாதர் கோயிலில் தளிகை பண்ணிக் கொண்டிருந்தவர். பிறகு சைவராகித் திருவானைக்காவலில் பரிசாரகராயிருந்தவர். கோயிலில் எழுந்தருளிய திரிபுராம்பிகை அருளால் இவர் வாக்கில் கவிவாணி புகுந்தாள். அன்று முதல் இவர் திட்ப நுட்பமான சிலேடைகளையும், நகைச்சுவைப் பாடல்களையும் நினைத்ததும், கேட்டதும் பாடி ஜனங்களை மகிழ்வித்து வந்தார்.

காளமேகம் திருமலைராயரின் ஊருக்குச் சென்றார். ராயர் சமஸ்தானத்தில் அறுபத்துநான்கு புலவர்கள் இருந்தனர். அவர்களுக்குத் தலைவர் அதிமதுர கவிராயர் என்பார். அவருக்கும் காளமேகத்துக்கும் ஏழாம் பொருத்தமானது. தம்முடன் உள்ள புலவர்களைக் கொண்டு காளமேகத்தை அவமானப்படுத்தி ஓட்ட அவர் முயன்றார். அப்புலவர்கள் காரிகை படித்துப் பேரிகை யடிப்பவர்; 'நாம் கவிராயர்' என்னும் செருக்கேறியவர். காளமேகத்தை அவர்கள் பல கேள்விகள் கேட்டனர். "அடா குரங்கே" என்றும் கேலி செய்தனர். காளமேகமும் அவர்களது செருக்கடங்கக் கேள்வி போட்டதைக் கேளுங்கள். காளமேகம் திருப்பிப் பரிமாறினான் :

"வாலெங்கே? நீண்டெழுந்த வல்லு
கிரெங்கே? நாலு
காலெங்கே? ஊன்வடிந்த கண்ணெங்
கே—சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள்!
நீங்கள்
கவிராயர் என்றிருந்தக் கால்?"

எப்படிக் கேள்வி? "அட குரங்குகளா! உங்கள் சேட்டை என்னிடமா நடக்கும்" என்பதற்குப் பதிலாக இப்படி வெளுத்து வாங்கினார் காளமேகம். இது குத்தலான கவி: கவிராயர்களைக் கபிராயர்களாக்கிப் பாடியது! குரங்குச் சேட்டையை விளக்க அவர் மற்றொரு கவி பாடினார். அது காரசாரமா யிருக்கிறது பாருங்கள் :

"குரங்கனலில் வீழ்ந்து வெறிகொண்
டுதேள் கொட்டக்
கரஞ்செறிந்து பாம்பலவன் கௌவ
—விரைந்து போய்ப்
பற்றப்பேய் கள்ளுண்டு பச்சைமிள
காய் கடித்தால்
எத்தனை பார் சேட்டைக் கிடம்."

ஒரு குரங்கு தீயில் விழுகிறது; உடம்பு புண்ணாகிறது. அத்துடன் பைத்தியம் பிடிக்கிறது. நறுக்கென்று தேள்கொட்டுகிறது. அதன் கையில் பாம்பு பிடுங்குகிறது, நண்டு கௌவுகிறது. இவ்வளவும் போதாதென்று அதற்குப் பேயும் பிடிக்கிறது. அந்தமட்டோ? ஒரு மொந்தை கள்ளும் உள்ளே போய் வேலை செய்கிறது. அத்துடன் காரமான ஊசி மிளகாயையும் அது மென்று தின்றுவிட்டது. அந்தக் குரங்கு இங்குமங்கும் துள்ளித் துடித்துச் செய்யும் சேட்டையைக் கேட்கவேண்டுமா? மனம் இப்படிப்பட்ட குரங்கு என்று வேதாந்திகள் வர்ணிப்பார்கள். காளமேகம் இனக் குரங்கைக் காட்டி மனக்குரங்கின் சேட்டையை நகை ததும்ப விளக்குகிறார்.

திருமலைராயரின் கவிராயர்கள் காளமேகத்தைச் சும்மா விடவில்லை. அவரது உயிரை வாங்கவே சூழ்ச்சி செய்தனர். காளமேகமும் அவர்களுக்குத் தணியாமல் தமது நகைச் சவுக்கை வீசினார். "நீ அரிகண்டம் பாடுவாயா?" என்று அவர்கள் கேட்டனர். "இதென்ன பிரமாதம்; நாம் எமகண்டம் பாடுவோமே" என்றார் காளமேகம். "இதேதடா எமகண்டம்" என்று நாம் மிகக் கொடிய சம்பவங்களைக் குறிக்கிறோமல்லவா? ஆம், எமகண்டம் அவ்வளவு ஆபத்தான வேலைதான். ஒரு அடி தப்பினால் ஆள் தீச்சட்டியில் விழுந்து சாம்பலாவான்; அல்லது மத யானைகள் அவனை நசுக்கி அப்பளமாக்கி விடும். அந்த நிலையில் இருந்த காளமேகம் புலவர் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் 'பட் பட்' என்று வெண்பாக்களாக அள்ளி வீசினார். கவி யுலகிலேயே இப்படிப்பட்ட சம்பவம் தமிழகத்திலேதான் நடந்திருக்கிறது. கண்டகண்டபடி கவிராயர்கள் கேள்வி கேட்டனர். ஒரு

கேள்விக்குக் காளமேகம் அளித்த பதிலை மட்டும் இங்கே குறிக்கலாம். 'டுடு டுடுடு' என்று ஐந்து டு வரும்படியாகச் சிவபரமாய் ஒரு வெண்பாப் பாடச் சொன்னர் ஒரு புலவர்.

"ஓகாமா வீதோ டுநரொக்க டுடுடுடு
நாகார் குடந்தை நகர்க்கிறைவர் - வாகாய்
எடுப்பர், நடமிடுவர், ஏறுவர், அன்பர்க்குக்
கொடுப்பர் அணிவார் குழை"

என்று பொழிந்தார் காளமேகம். இக் கவி, நம்முடன் யாரோ 'டு'ப்போடுவது போல் ஒலிக்கிறது. ஆனல், உண்மையில் இது ஒரு நல்ல கவி. பாருங்கள்: ஓ, கா, மா, வீ, தோ இந்த ஐந்தெழுத்துக்களுடனும் டு வைச் சேர்த்துப் படியுங்கள். ஓடு, காடு, மாடு, வீடு, தோடு என்ருகிறதல்லவா? இவை ஐந்தும் சிவபெருமானுக்குரியன என்று கவி பாடுகிறார். சிவன் ஓடெடுத்துப் பிச்சை வாங்கினன்; தில்லைக் காட்டில் தாண்டவ நடமாடினன்; மாட்டுமேல் ஏறினன்; வீடாகிய மோட்சத்தை அன்பருக்குத் தந்தான்; தோடாகிய காதணியை அணிந்தான்.

காளமேகம் மனத்திலொன்று வாக்கிலொன் றில்லாமல் நினைத்ததையெல்லாம் அப்படியே பாடிவிடுவார். அவரிடம் தாட்சண்யம் கிடையாது. நல்லதை நன்ருக மெச்சுவார். தீயதை நன்ருகச் சீரென்று தாக்குவார். அவர் ஒருதரம் நாகபட்டினம் சென்ருர். அங்கே ஒரு வேசை பாடிக்கொண் டிருந்தாள். தான் மிக நன்ருகப் பாடுவதாக அவள் தற்பெருமை கொண்டாள். அவள் பாட்டு சுத்த மோசம்; குரல் சுகமில்லை. இந்த வரிசையில் அவளை விரும்பும் ஒருவன் "நமது தாசி பாட்டு எப்படி!" என்று காளமேகத்தைக் கேட்டுத் தொலைத்தான்.

"வாழ்த்து திருநாகை வாகான தேவடியாள்
பாழ்த்த குரலெடுத்துப் பாடினள்— நேற்றுக்
கழுதைகெட்ட வண்ணன் கண்டேன்கண் டேனென்று
பழுதையெடுத் தோடிவந்தான் பார்"

என்று ஒரு அடி யடித்தார் சிங்கம். "நாகபட்டினம் தேவடியாள் பாடினள். ஒரு வண்ணன் தனது கழுதை காணமல் நெடுநாளாகத் தேடிக்கொண் டிருந்தான். இவள் பாட்டைக் கேட்டதுமே 'இதோ நமது கழுதை கனைக்குதடா' என்று அதைக் கட்டிக்கொண்டுபோகக் கயிற்றை எடுத்து ஓடி வந்தான். எப்படியிருக்கிறது கழுதைக் காம்போதிக்குக் கிடைத்த சன்மானம்?

காளமேகம் மோர் வாங்கினர். அதில் தண்ணீர் கலந்திருந்தது. உடனே ஒரு பாட்டுக் கிளம்பியது:

'கார்' என்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது;
'நீர்' என்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின்;
வார் ஒன்று மென்முலையார் ஆய்ச்சியர்கை வந்ததற்பின்
'மோர்' என்று பேர்படைத்தாய் முப்பெயரும் பெற்ருயே.

"ஏ மோரே, நீ மூன்று பெயர்பெற்ற சரக்காகுய். வானி லிருக்கும்போது உன்னைக் 'கார்'(மேகம்) என்பர். தரையில் இருந்தால் உன்னை 'நீர்' என்பர். ஆய்ச்சியர் கைக்கு வந்ததும் உன்னைத் தான் 'மோர்' என்கிருர்கள். அவர்கள் மோரில் நீதான் அதிகம்!" கவி எவ்வளவு குத்தலா யிருக்கிறது பார்த்தீர்களா?

காளமேகம் மாந்தர்களை மட்டும் இப்படிக் குத்திப் பாடவில்லை. தெய்வங்க ளிடங்கூட அக் கவி தமது நகைத் திறனைக் காட்டினர். சிவன், சக்தி, பிள்ளையார், முருகன், திருமால் முதலிய தெய்வங்களை யெல்லாம் அவர் கிண்டலாகப் பக்தி செய்தார்.

வரதராஜப்பெருமாள் கருட வாகனத்தில் எழுந்தருளுவதைக் கண்ட காளமேகம் ஒரு கவி கட்டினர்:

"பெருமாளு நல்ல பெருமாள் அவர்தம்
திருநாளு நல்ல திருநாள்—பெருமாள்
இருந்திடத்திற் சும்மா இராமையா லன்றோ
பருந்தெடுத்துப் போகிறதைப் பார்."

"பெருமாள் நல்லவர். அவர் திருநாளும் சிறப்பா யிருக்கிறது. ஆனல் இந்தப் பெருமாள் ஒரு இடத்தில் இல்லாமல் அன்பரைக் காக்க அங்குமிங்கும் அலைகிருர். அதனல் அவரை அதோ பருந்து இழுத்துக்கொண்டு போகிறதே......" என்ற நகைச்சுவை எப்படி யிருக்கிறது பாருங்கள்.

மீனுக்ஷியம்மனுக்கு ஒரு நகையணி சூட்டுகிருர் கவி; கேளுங்கள்:

"மாட்டுக்கோன் தங்கை மதுரை விட்டுத் தில்லைநகர்
ஆட்டுக்கோனுக்குப்பெண் டாயினள்—கேட்டிலையோ
குட்டி மறிக்கவொரு கோட்டானை யும்பெற்ருள்
கட்டுமணிச் சிற்றிடைச்சி காண்."

"மணி கட்டிய சிறிய இடையுள்ளவள் மீனுக்ஷி, பார்வதி, சிவகாமி. அவள் மாட்டுக்கோன் ஆகிய கோபாலனின் தங்கை. அவள் மதுரையைவிட்டுத் தில்லைக்குச் சென்ருள். அங்கே ஆட்டுக்கோனுகிய அம்பலத்தரசன் நடராஜனை மணந்து அவனுக்குப் பெண்டாளுள். அதன் பயனுக எல்லாரும் தலையில் குட்டிக்கொண்டு உக்கிபோட்டுக் கும்பிட, கோட்டானையான (கோட்டு + யானை) கணபதியைப் பெற்ருள்."

சிவபெருமானைக் கண்டு காளமேகம் இரங்கும் கவியைக் கேளுங்கள்:

"வில்லால் அடிக்கச் செருப்பால் உதைக்க வெகுண்டொருவன்
கல்லால் எறியப் பிரம்பால் அடிக்க இக் காசினியில்
அல்லார் பொழிற்றில்லை யம்பலவா ணர்க்கொ ரன்னைபிதா
இல்லாத தாழ்வல்லவோ இங்ஙனே யெளிதானதுவே."

"ஐயோ! தில்லையம்பலவாணனுகிய சிவனுக்கு யாரும் பரிந்துவருவா ரில்லை. அதனலன்ருே 'ஊருக்கிளைத்தவன்' என்று அவனை இப்படி வருத்தினர்கள். விஜயன் வில்லால் அடித்தான். கண்ணப்பன் செருப்பால் உதைத்தான். கோபங்கொண்ட சாக்கியநாயனர் அவன்மேல் கல்லை எறிந்தார். மாணிக்கவாசகருக்காகப் பிட்டுக்கு மண் சுமந்த அவனை அரிமர்த்தன பாண்டியன் பிரம்பால் விளாசினன் ஐயோ! சிவனுக்கு அப்பா அம்மா இருந்தால் இப்படி நடக்குமா? கண்ருவியா யிருக்கிறதே!" என்று கவி உருகும் நயத்தைப் பாருங்கள்!

முடிவில் காளமேகம் நமக்கு நல்ல உபதேசம் ஒன்று செய்கிருர், கேளுங்கள்:

"முக்காலுக் கேகாமுன், முன்னரையில் வீயாமுன்,
அக்காலரைக் கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன், மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் ருேது."

இதேதடா கவியா, எண்சுவடி வாய்ப்பாடா என்று தோன்றுகிறது! அரை, கால், அரைக்கால், முக்கால், இருமா, மாகாணி, ஒருமா எல்லாம் இதில் உள்ளன. ஆனல் பொருள் வேறு. "வயோதிகர் கோலுடன் சேர்ந்த முக்காலால் நடப்பர். அவர்களுக்கு முன்னே முதுமைக் கடையாளமாக மயிர் நரைத்துப் போகும். கால்கள் அந்தக் காலனைக் கண்டு அஞ்சி நடுங்கும்; உடல் ஆட்டங் கொடுக்கும்; தொண்டை விக்கும்; இருமல் வரும். முடிவில் மாகாணி, பெரிய நிலமாகிய சுடுகாடு செல்வான். இந்த மாதிரி முதுமையால் வருந்தி இறக்குமுன்னே இளமையிலேயே ஒரு மாமரத்தின் கீழ் இருக்கும் காஞ்சீபுரத்து ஏகப்பநாதனுகிய சிவனை மனிதன் வணங்கவேண்டும்" என்று கவி அழகாக உபதேசிக்கிருர்.

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

# புதிய வெளியீடு !



| | | |
|---|---|---|
| மாஸ்டர் விட்டல் (ஸ்ரீதர்) | பணிவே பஜனை<br>எனது மனமே ,, | N 18112 |
| ஸ்ரீமதி கே. எஸ். ஆதிலக்ஷிமி (பார்டி) | ஸதிர் காட்சி<br>2 பாகங்கள் | N 18113 |

ஜீவன் நிறைந்த விதமும் இனிமையான சாரீரமும் "எச் எம். வி." கிராமபோனில் தான் தத்ரூபமாய்க் காணலாம்.



- இங்கு காணும் போர்டபில் "எச். எம். வி." கிராமபோன் மாடல் நெ. 94 (பிரௌன்) விலை ரூ. 90/- மட்டுமே !

எல்லா "எச். எம். வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

ஜுபிடரின் ஜோதி!

# "சந்நியாசி"

முழுநீள சமூகச் சித்திரம் தயாராகிறது



C. S. D. சிங் ஜமீன்தாராக நடிக்கும் ஓர் காட்சி

**நடிகர்கள் :**

P. A. குமார்
P. G. வெங்கடேசன்
C. S. D. சிங்
K. P. ஜெயராம்
M. V. சாமிநாதன்
V. S. ஸ்ரீனிவாஸன்

P. S. ஞானம்
P. R. மங்களம்
T. S. ஜெயா
குமாரி செல்வா
மாஸ்டர் P. P. தங்கவேலு

டைரக்ஷன்
M. கிருஷ்ண ரத்னம்

பாட்டு
T. V. நடராஜ ஆச்சாரி

படிப்பிடிப்பு
S. சராஸ்

மியூஸிக் டைரக்ஷன்
M. S. ஞானமணி

ஒலிப்பதிவு
M. A. N. அய்யங்கார்

கதை
K. ஹிரண்ணய்யா

ஸ்டுடியோ :—பாரத் மூவிடோன் & C. T. C.

விவரங்களுக்கு :—

## ஜுபிடர் பிலிம்ஸ் (புதுக்கோட்டை)

9, வாசு தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை.

# போர் வீரர்கள் தங்கும் பெரிய 'கிளப்'

சுமார் ஐம்பது லட்சம் அங்கத்தினர்கள் கொண்ட 'கிளப்' ஒன்று இன்று இங்கிலாந்தில் நடந்து வருகிறது. 'யூனியன் ஜாக் கிளப்' என்று இதற்குப் பெயர். ஆயிரக்கணக்கான சோல்ஜர்களும் மாலுமிகளும் விமானிகளும் ரஜா பெற்று லண்டன் வழியாக வீடு திரும்புகையில், இரண்டொரு நாள் இந்த 'கிளப்'பில் தங்கிவிட்டுச் செல்கிறார்கள்.

பலபேர் இதன் வெளித்தோற்றத்தைத்தான் கண்டிருப்பார்கள். இதனுள்ளே என்ன இருக்கிறது என்பதையும் என்ன நடக்கிறது என்பதையும், படைகளைச் சேர்ந்த வீரர்கள்தான் அறிவார்கள். இதற்குள்ளே 'பில்லியர்ட்ஸ்' ஆட்டம் ஆடுவதற்கு அருமையான அறையொன்று இருக்கிறது; சிறந்த புத்தகசாலை ஒன்று இருக்கிறது; ஒரு போஜனசாலை, ஒரு பல சரக்குக் கடை, ஒரு நாவிதன் கடை இவை எல்லாம் இருக்கின்றன. டஜன் கணக்கில் ஸ்நான அறைகளும் அருவிச் சாரலில் நின்று அனுபவிப்பதுபோல் உல்லாசமாய்க் குளிப்பதற்கான 'ஸ்பிரே-பாத்' அமைப்புகளும் ஆடை வெளுக்கும் அறைகளும் இதில் இருக்கின்றன. தனித்தனியாய் உறங்குவதற்கு அறுநூறு படுக்கையறைகள் இருக்கின்றன. அவையன்றி இன்னும் பல நூறு பேர் நித்திரை செய்வதற்கும் இடவசதியிருக்கிறது.

இந்த வசதிகள் போதா வென்று நப்பீல்ட் பிரபு இன்னொரு கட்டிடத்தை இந்த விடுதிக்குப் பரிசளித்திருக்கிறார். அதில் மற்ற வசதிகளோடு இரவெல்லாம் திறந்திருக்கும் உண்டிச் சாலை ஒன்றும் இருக்கிறது. லண்டனிலுள்ள மேற்குக் கோடி ஓட்டல்களோடே வெற்றியுடன் போட்டியிடக் கூடியவாறு அந்த உண்டிச்சாலை அமைந்திருக்கிறது.

'விக்டோரியா க்ராஸ்' என்னும் கௌரவப் பதக்கம் கொடுக்க பிரிட்டிஷ் ராஜாங்கம் ஆரம்பித்தது முதல் அதைப் பெற்றுள்ளவர்களின் ஜாபிதா ஒன்று இந்த விடுதியின் கீழ்த்தளத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் இவ்வளவு பரிபூர்ணமான ஜாபிதா வேறெங்கும் கிடையாது. இந்த யுத்தத்தில் இதுவரை 'விக்டோரியா க்ராஸ்' விருது பெற்றுள்ளவர்களின் பெயர்கள் கூட இதற்குள்ளேயே அந்த ஜாபிதாவில் சேர்ந்துவிட்டன. அதை ஒரு ஞாபகார்த்தச் சின்னம் போலவே வைத்திருக்கிறார்கள். பெயர்களெல்லாம் கருங்காலி மரப்பலகை யொன்றில் பொன்னெழுத்தால் பொறிக்கப்பட்டிருக்கின்றன.



'கிளப்'பின் வேலைக்காரி ஒருத்தி, ஸ்காட்லாந்தி லிருந்து வந்த ஒரு ஸோல்ஜரின் சட்டைக் கையில், போர் வீரர்களுக் குரிய பட்டை நாடாவை முதல் முதலாக வைத்துத் தைத்து விடுகிறாள்.

இப்படி யொரு விடுதி ஏற்படுத்த வேண்டுமென்னும் எண்ணமே பிரிட்டனில் 1903-ஆம் ௵ தான் தோன்றிற்று. தென்னாப்பிரிக்கப் போரில் உயிர் கொடுத்தவர்களின் ஞாபகார்த்தமாகவும் போர்ப் படைகளுக்குப் போஜன விடுதியாய் உதவுவதற்காகவும் இதை ஆரம்பித்தார்கள். அப்போது வேல்ஸ் இளவரசராயிருந்த ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் இதற்கு 1904-ஆம் ௵ அஸ்திவாரக் கல் நாட்டினார். 1907-ஆம் ௵ ஏழாம் எட்வர்ட் மன்னர் இதற்குத் திறப்பு விழா ஆற்றினார்.

சென்ற உலக மகா யுத்தத்தின் போது இந்த விடுதி கணக்கற்றவர்களுக்கு உதவ வேண்டியிருந்தது. அதற்காக இது பெரிதும் அபிவிருத்தி செய்யப்பட்டது.

இன்று நடக்கும் யுத்தத்திலே ஒவ்வொரு நாள் இரவும் 1000 பேருக்கு மேற்பட்ட அங்கத்தினர்களுக்கு இது இடங்கொடுத்து வருகிறது. பற்பல படைகளைச் சேர்ந்தவர்களும் இங்கே வந்து செல்கிறார்கள். அந்நிய நேச தேசச் சேனைகளைச் சேர்ந்த வீரர்களும் இதற்கு வருகிறார்கள்; வானத்திலே போர்புரிந்த வீரர்கள் வருகிறார்கள்; கடலிலும் நிலத்திலும் கைவரிசை காட்டிய தீரர்கள் வருகிறார்கள்; இனிமேல் போர்க்களம் புக வேண்டியவர்களும் வருகிறார்கள். இவர்களெல்லாம் இந்தக் 'கிளப்'பின் அங்கத்தினர்கள் தான். 'கிளப்'களுக்குப் பேர் போனது இங்கிலாந்து; உலகத்திலேயே பெரிய இந்தக் 'கிளப்' அங்கே யிருப்பது மிகப் பொருத்தமே யல்லவா?




'விக்டோரியா க்ராஸ்' என்ற கௌரவப் பதக்கத்தைப் பரிசு பெற்ற வீரர்களின் பெயர்கள் பொறிக்கப் பெற்றுள்ள சுவர் இது தான்.

ஒலிபரப்பி நாடகம்:

# ஜகத் கீதம்—(சங்கு ஸுப்ரஹ்மண்யன்)

இடம்: ஆற்றங்கரை யருகே காட்டிலே ஒரு பாழடைந்த காளி கோவில்.

காலம்: மஞ்சள் வெயில் நேரம். கிளிகள் கலகலத்துக் கொண்டிருக்கின்றன. தேவதத்தன் அந்த ஸந்நிதியிலே நின்று அம்பிகையைத் தோத்தரிக்கின்ருன்.

தேவதத்தன்:

'ஓங்கார பஞ்சர ஸுகிம்!
உபநிஷதுத்யான கேளிகலண்டம்!
ஆகம விபின மயூரீம்!
ஆர்யா மந்தர் விபாவயே
கௌரீம்!'

போகதாஸா! ஏனடா சும்மா நிற்கிருய்? நீயும் ஏதாவது அம்பிகையைக் குறித்துத் தோத்திரம் சொல்லேன்.

போகதாஸன்: என்ன தோத்திரம் பாடறது? உலகத்திலே எவ்வளவோ இடங்களெல்லாம் இருக்க, இந்த அம்மன் இந்த உதவாக்கரையான காட்டைத் தேடிப் பிடித்துக் கோயில் கொண்டிருக்கிருளே; அந்த திவ்யத்தைப் பாடுவதா? இந்த ஸந்நிதியிலே பூஜை நடந்து பல்லாண்டுகளாகியிருக்கும் போலிருக்கிறதே; அந்தப் பல்லாண்டைப் பாடவா? ஒரு 'பூஜை கீஜை' நடந்தால்தானே நைவேத்தியமாவது இருக்கும். நைவேத்தியம் என்பதை நினைத்தவுடன் எனக்குப் பசி காதை அடைக்கிறது. அப்பா! பிராணனே போய்விடும்போ லிருக்கிறதே. போயும் போயும் போயும் இந்தத் தரித்திர தேவி கோயிலுக்கு......

தேவதத்தன்: உஸ் – வாயை அலம்படா – இவள் ஜகன்மாதா – பராசக்தி (பாடுகிருன்.)

(தன்யாசி – சதுஸ்ரம்)

சக்தி தனையே சரணம் கொள்ளு –
என்றும்
சாவினுக்கோ ரச்சமில்லை தள்ளு.
சக்தி புகழாம் அமுதையள்ளு - மதி
தன்னிலினிப் பாகுமந்தக் கள்ளு,

சக்தியருளா லுலகிலேறு - ஒரு
சங்கடம் வந்தாலிரண்டு கூறு.
சக்தி சில சோதனைகள் செய்தால் -
அவள்
தண்ணருளென்றே மனது தேறு.

போகதாஸன்: அதென்ன தண்ணருளோ? இந்தத் தண்ணருளால் ஒரு பட்டைச் சாதத்துக்கு வழியுண்டா? ஏண்டாப்பா உன்னேடு வந்தோமென்று எனக்குத் தோன்றிவிட்டது. ஆனல் நீயோ இங்கே வந்தது முதல் பாட்டின் மேல் பாட்டாய்ப் பாடிக்கொண்டேயிருக்கிருய். இந்தக் கோயிலுக்குக் கும்பாபிஷேகம் ஆன தினத்துக் கப்புறம் இன்றைக்குத்தான் ஒரு பக்தன் பாடுவதை இந்த அம்மன் காதாரக் கேட்கிருளென்று நினைக்கிறேன். ஒரு கோயிலென் றிருந்தால் ஒரு வாத்ய கானம் வேண்டாமா? சங்கீத நாதமே யில்லாத கோயிலிலே பூதம் கூடக் குடி புகாதே.



சங்கு ஸுப்ரஹ்மண்யன் மார்ச்சு மூகடைசி வாரத்தில் சத்தியாக்கிரகம் செய்து 15-நாள் சிறைத் தண்டனை பெற்றுர். அதற்குமுன் இந்த ரேடியோ நாடகத்தை எழுதி நமக்கு உதவினுர். சப்த ஜாலங்களைப் புரியக்கூடிய விகடகவி ஒருவரை ரேடியோவில் உபயோகப்படுத்திக் கொள்வதற்கு மாதிரியாய்த் தோன்றியது இந்தக் கலைச் சுவை போதிந்த நாடகம்.

தேவதத்தன்: உன் காதுக்கு இங்கே சங்கீதம் கேட்கவில்லையா?

போகதாஸன்: அப்படியானல் உன் காதுக்கு மட்டும் கேட்கிறதோ? இந்தச் சக்தி பூஜை பண்ணிப் பண்ணி, உன் மூளையே புரண்டு விட்ட தென்கிருர்களே, அதில் தப்பே யில்லை. நடுக் காட்டிலே சங்கீதமாம் சங்கீதம்! ஹூம்!

தேவதத்தன்: ஜெய்சண்டி! மாதா! பராசக்தி!—டே போகதாஸ்! நீ என்னைக் கேலி செய்வது எப்படி யிருக்கிறது தெரியுமா—இதோ ஒரு உதாரணம் காட்டுகிறேன். உன் கண்ணை மூடிக் கொள். உலகத்தை மற. காதைத் திறந்துகொள். கேளு, கேளு. மூடினுயா கண்ணை?

போகதாஸன்: (முணுமுணுப்போடு) ஹூம்.

தேவதத்தன்: தாயே! ஜகத் கீதம் இவனது காதிலும் படுமாறு அருள் செய். இவனுடைய மனித பாஷையிலேயே இவன் புரிந்து கொள்ளுமாறு அருள்செய்—அதோ உன் அன்பான குயிலி ஏதோ உருக்கமாகக் கூவுகிருளே! பராசக்தி!

(நிசப்தம்)

(தூரத்தில் குயில் கூவுகிறது:
'குவ்வூ—குவ்வூ—குவ்வூ')
(குயிலியின் பாட்டு)

நீலாம்புரி

ஆசையுடன் பெற் றெடுத்த
அண்டம் தனையே ஐயோ
நாசகாரக் காக்கைக் கூட்டில்
நானும் வைத்தேன் பாவியானேன்.

குஞ்சு அவள் தோன்றியபின்
கோபமுள்ள காக்கைக் குலம்
மிஞ்ச விடுமோ அறியேன்
மீளவருவாளோ தேவி!

என்றன் கண்ணும் குயிலிதன்னை
என்னிடமே சேர்த்தால் அம்மா
உன்றன் செவி இன்பம் வர
ஓயாமல் பாடிடுவேன்.

(இச்சமயம் காக்கைகள் குரல் கொடுக்கின்றன: காக்காகா—கர்ர்ர்—காக்கா)

ஆண் காக்கை: எல்லா முட்டையும் உடைந்து விட்டதாடீ?

பெண் காக்கை: ஒவ்வொரு குஞ்சின் அழகையும் பாருடா!

ஆண் காக்கை:

இருட்டைப் பழிக்குமாடீ
இக்குஞ்சின் வர்ணம்?

பெண் காக்கை:

இந்தக் குஞ்சின் மூக்குக்கு
இணையேது மில்லையே!

ஆண் காக்கை :

கண்ணழகு பெற்ற இந்தக்
கனகத்தைப் பாரு !

பெண் காக்கை :

இதோ ஒரு நோயாளி ;
ஏனோ இப்பிறவி ?

ஆண் காக்கை :

போகட்டும் அனைத்துக்கும்
போதிப்பாய் நம் பாஷை.

பெண் காக்கை : கா — கா — கா— இதைச் சொல்லுங்கள் அருமைக் குஞ்சுகளே.

ஒரு குஞ்சு : ஃஃ ஃஃ (சிரிப்பு) கா கா கா

மறு குஞ்சு : கர் கர்

பெண் : இப்பவே 'கர்' கற்றுக் கொண்டு விட்டானே ! சமத்துக் குஞ்சு நீதான். ஏ நோயாளி நீ சொல்லு - கா - கா - கா

குயிலி : குவ்வூ - குவ்வூ - குவ்வூ

பெண் : அப்படியில்லை ; கா - கா - கா -

குயிலி : குவ்வூ - குவ்வூ - குவ்வூ

பெண் : சீ! இது என் பிள்ளையில்லை.

ஆண் : ஏதோ பீடை நம் முட்டையோடு கலந்து விட்டது போலும் !

பெண் : குஞ்சுகளா — இதைக் கொத்துங்கள்—கொல்லுங்கள்.

குயிலி : குவ்வூ - குவ்வூ - குய்யோ- அய்யோ !

ஆண் : தள்ளு கீழே ! திருட்டுக் குஞ்சே ! இங்கேயா வந்தே ! கா - கா - கா - கா

ஆண் : அடியே ! பறந்து ஓடுகிறதடி !

குயிலி : குவ்வூ - குவ்வூ

ஆண் : போயே போய் விட்டதே !

பெண் : அதன் மூஞ்சியைப் பார்த்தாயா, பார்க்க சகிக்கவில்லை. நாம் எவ்வளவு உயர்ந்த ஜாதி! உலகத்திலே மனுஷன் பிதுருக்களுக்குப் பிண்டம்போட ஆசைப்பட்டால், நமக்குத்தான் படைக்கிறான். அப்பேர்ப்பட்ட நம்மோடு சேர்ந்து வாழ அது பிரயத்தனித்தது பார்த்தாயா ?

ஆண் : அதன் குரலைப் பார்த்தாயோ மகா கோரம். நீ கா கா என்று சொல்லிக்கொடுத்தால் அது குவா குவா என்கிறது. (எல்லாம் சிரித்தல்.)

ஆண் : அது அதன் ஆத்தாளிடம் அந்த மரத்தில் போய்ச் சேர்ந்து விட்டது பார்த்தாயா ?

பெண் : அந்த ஆத்தாள் பாடி நீ கேட்டதில்லையே! சகிக்க முடியாமலிருக்கும்.

ஆண் : அப்படித்தான் இருக்கு குஞ்சின் குரலும். (தூரத்தில் இரண்டு குயில்களின் சப்தம் வீணாநாதத்தோடு இழைந்து முடிகிறது.)

தேவதத்தன் : உலகத்திலே போக தாஸர்கள் தேவதத்தர்களைக் கேலி செய்வது......

போகதாஸன் : குயில்களைக் காகங்கள் கேலி செய்வதற்குச் சமானம்தான். அண்ணா - இந்தத் துல்யமான கனவுலகில் இன்னும் நான் சிறிது கேட்கக் கூடாதா ?

தேவதத்தன் : கேளு ! கேளு !

(கிளி கூப்பிடுகிறது.)

(வானம்பாடி கூவிக்கொண்டே வருகிறது.)

கிளி : குயிலிக்குக் குஞ்சு வந்ததாமே.

வானம்பாடி : நானும் கேள்விப் பட்டேன். அவள் வீட்டுக்குத்தான் போகிறேன்.

கிளி : அப்படியா ?

வானம்பாடி : அவள் நன்றாய்ப் பாடுவாள். அந்தக் குழந்தையும் நன்றாய்ப் பாடுகிறதாவென்று கேட்க வேண்டும்.

கிளி : என்ன இருந்தாலும் குயிலி செய்வது தப்பு - பிறர் வீட்டிலே தன் அருமை முட்டையை அடைகாக்க விடலாமா ? நம்ப ஜாதிகளிலே இந்த அசிங்கம் கிடையாது. நாமே முட்டையிட்டு நாமே காப்போம்.

வானம்பாடி : அது ஓர் முறை. உலகைப் படைத்த பராசக்தி அப்படி ஒரு முறையையும் ஏற்படுத்தி யிருக்கிறாள்.

(வண்டு வருகிறது. ரீங்காரம்.)

வானம்பாடி : வண்டண்ணா, எங்கே போறே ?

வண்டு : ஒரு குட்டி வச்சிருக்கேன். அதைக் கொட்டிக் கொட்டி என்னைப் போல ஆக்கவேணும்.

கிளி : எங்கள் ஜாதியிலே அந்தக் கஷ்டமில்லை யப்பா. முட்டை வெடித்தால் எங்களைப்போலத்தான் குஞ்சுகளுமிருக்கும். ஆனால், உன் வம்ச விதி வேறே, பாவம். அதிருக்கட்டும், பாட்டுக் குயிலி வீட்டுக்கு நீ வரலையா ?

வண்டு : ஹூம். பாட்டு - அதைக் கேட்கறதிலே தனி இன்பமுண்டா என்ன ? எனக்கென்னமோ பாட்டிலே மோகமில்லை. என் வேலை எனக்கு - தாமரைப் புஷ்பங்கள் இன்னும் கொஞ்சம் நேரமானால் மூடிக்கொண்டு விடும். அதற்கு முந்தி நான் போய்த் தேன் சாப்பிட வேண்டும் - பாட்டைவிடத் தேனில்தான் ஆனந்தம் எனக்கு உண்டாகிறது.

வானம்பாடி : (சிறிய குரலில்) வா, அக்கா. போவோம். இந்தக் குடிகாரனோடு நமக்கென்ன பேச்சு ?

கிளி : அதோ மாடப் புறா வருகிறதே. குயிலி வீட்டுக்குத்தானோ ?

வானம்பாடி : இருக்கலாம். ஆனால் அந்தச் சேவலோடு என்னமோ பேசிக்கொண்டிருக்கிறதே. என்ன பேச்சோ ? நாம்ப போவோம்.

(மாடப் புறவின் சப்தம்.)

(சேவலின் சப்தம்.)

மாடப்புறா : என் அவசரம் உனக்குத் தெரியவில்லையே. குயிலி வீட்டுக்குப் போய்விட்டுச் சீக்கிரம் திரும்பி வரவேண்டும். என் பத்தினி காத்துக்கொண்டிருப்பாள்.

சேவல் : பத்தினி என்றால் ஒருத்திதானா ?

மாடப்புறா :அப்படித்தான் எங்க ஜாதியிலே. ஒரு ஆணுக்கு ஒரே மனைவிதான். ஒரு மனைவிக்கு ஒரே புருஷன்தான். யாருமே தவறமாட்டோம். எங்களுக்குக் காதல்தான் வாழ்க்கை. (பாடுகிறது.)

சங்கராபரணம்

காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்

உறுதி உறுதி உறுதி
உறுதிக் கேயோர் உடைவுண்டாயின்
இறுதி இறுதி இறுதி

காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்.

சேவல் : அத்தகைய ஆண் பெண் கட்டுப்பாடு எங்களுக்கு அவசியமில்லை. இஷ்டப்பட்டபடி எனக்கு ஒரு ஜோடியை வரித்துக்கொண்டு ஆனந்தமாயிருந்தேன். அந்த ஆனந்த வாழ்வின் நேர் விரோதமாக இங்கே நாறுகிறேன். இந்தக் காட்டிலே ஒரு பெட்டைக் கோழி

கூடத் தென்பட வில்லை. பெட்டைகளோடு வாழாத வாழ்க்கை இருந்தென்ன போயென்ன?

மாடப்புறா : நீ ஏன் தனியாக இந்தக் காட்டில் சிக்கிக் கொண்டாய்?

சேவல்: அது ஒரு நீண்ட கதை. இந்தக் காளி கோயிலுக்குப் பலி கொடுப்பதற்காக என்னை யாராரோ மனுஷர்கள் தனியாகக் கொண்டு வந்தார்கள். பிறகு சாமிக்குப் பலி கொடுக்கவாவது என்று யாரோ வேதாந்தம் சொன்னார்களாம். பிறகு என்னை உயிரோடு விட்டு விட்டார்கள். இந்த நட்ட நடுக் காட்டிலே இந்தத் தனி வாழ்க்கை வாழ்வதை விட, நான் சாகப் பிரியப்படுகிறேன். யாராவது புண்ணியவான் என்னைப் பிடித்துப் பலியிட மாட்டானா என்று காத்திருக்கிறேன்.

(கருடனின் சப்தம்)

மாடப்புறா : ஐயோ! அந்தப் பாவி கருடன் வருகிறான். பெரிய விஷமி. என்னை இங்கே பார்த்தால் விளையாட்டுக்காவது அடித்துப் போடுவான். நான் போகிறேன் சேவ லண்ணா.

கருடன்: என்னடா கொண்டையழகா! போய்விட்டதா அந்தப் புறா? இந்தக் காலத்திலே நமக்கு இரை அகப்படுகிறதே கஷ்டமா யிருக்கு.

சேவல்: அப்படியா! அதோ அணில் இருக்கிறதே. அதோ ஆற்றங்கரையிலே தவளை யிருக்கிறதே, அவை போதாவா?

கருடன்: அவைகள் அகப்படுவதே யில்லையே. வரவா அவைகளுக்கு நெளிவு அதிகம் தெரிந்து விட்டது; தப்பிக்கொண்டு விடுகின்றன.

சேவல்: சரி; வேறு எங்கேயாவது போ. அந்த அணிலும் தவளையும் என்ன தான் பேசிக் கொள்கின்றனவென்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

(அணிலின் சப்தம்.)

(தவளையின் சப்தம்.)

தவளை: அப்படியானால் நீ பட்சி யில்லை யென்று சொல்கிறாய்? நீ மிருக ஜாதியா என்ன?

அணில்: இதென்ன கேள்வி. நீ தண்ணீரிலேயே இருக்கிறாயே, நீ மீன் ஜாதியா?

தவளை: நான் அதை விட உயர்ந்த ஜாதி.

அணில்: எப்படி?

தவளை: எனக்குத் தொண்டையுண்டு. திவ்யமாகச் சத்தங்கள் செய்வேன். நான்மட்டு மல்ல. எங்கள் ஜாதியாரெல்லாரும் சேர்ந்து கோஷ்டி கீதம் பாடுவோம். அதுதான் எங்களுக்கு இரவெல்லாம் ஆனந்தம்.

அணில்: நான் அதைக் கேட்கலாமோ?

தவளை: ஆகா, வாடா மண்டூகசிம்ஹா! தப்பளாச்சாரி! வாங்கோ பாடுவோம்.

(தவளைச் சத்தம் தொடங்கி, அது வேதபாராயணத்தில் போய் முடிகிறது.)

போகநாஸன்: ஆகா இந்தக் காளி கோயிலருகே வேத கோஷ ரீதியிலும் கானங்க ளுண்டா? இதிருக்கட்டும். குயிலி வீட்டிலே குஞ்சுக் குயிலுக்குத் தொட்டிலிடுவதற்குப் போனார்களே, அது என்ன ஆயிற்று?

தேவதத்தன்: கேளு! கேளு! அந்தப் பக்கமாக.

(குயிலியின் வீட்டில் சப்தம்)

குயிலி: குவ்வூ—குவ்வூ.

(கிளி, புறா, வானம்பாடி எல்லாம் கூவுகின்றன.)

குயில்: வாருங்கள் எல்லாரும். நான் பாடுகிறேன்; குழந்தையும் படுகிறாள், கேளுங்கள். (பாடுகிறது.)

சங்கராபரணம்-ஏக தாளம்

நாதம் நாதம் நாதம்!
நாதத்தேயோர் நலிவுண்டாயில்
சேதம் சேதம் சேதம்!

தாளம் தாளம் தாளம்!
தாளத்திற்கோர் தடையுண்டாயின்
கூளம் கூளம் கூளம்!

பண்ணே பண்ணே பண்ணே!
பண்ணிற் கேயோர் பழுதுண்டாயின்
மண்ணே மண்ணே மண்ணே!

அருளேயா நல்லொளியே!
ஒளி போமாயின் ஒளிபோமாயின்
இருளே இருளே இருளே!

எல்லோரும்: இப்படியே பாடிக் கொண்டு தீர்க்காயுளாய் உன் குழந்தை வாழட்டும்.

## 'ராட்சஸன்—' அகப்பட்டான்

கொஞ்ச காலத்துக்கு முன் மைமென்விங்கில் ஏதோ பிரம்மாண்டமான ராட்சஸன் காலடி ஒன்று தெரிந்ததாக, தினசரிப் பத்திரிகைகளி லெல்லாம் ஒரு செய்தி அடிபட்டது நண்பர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அந்த ராட்சஸன் இப்போது அகப்பட்டுவிட்டான்.

விஷயம் என்ன தெரியுமோ? திரிபுரா சமஸ்தான மகாராஜா மாணிக்க பகதூரிடம் ஆஜானுபாகுவான ஒரு காவல்காரன் இருக்கிறான். அவன் எட்டடி உயரம் இருக்கிறான். அவனது பாதம் ஒரு முழ நீளமும் அரை முழ அகலமும் இருக்கிறது. அவன் ஒரு சமயம் ஏதோ ஒரு சிறு கிராமத்துக்குப் போகும் வழியில் விடியுமுன் மைமென்விங் ஆற்றங்கரையில் காலைக்கடன் முடித்துச் சென்றிருக்கிறான். பொழுது விடிந்ததும் இவன் அடிச் சுவட்டைக் கண்டு நகர முழுதும் நடுங்கிவிட்டது; அந்நகரின் பக்கத்துக் காட்டுக்கு யாரோ ராட்சஸன் வந்திருப்பதாக, நாடெங்கும் செய்தி பறந்தது. சில நாள் வரையில், அஸ்தமித்தபின், நகரிலே ஜன நடமாட்டமே கிடையாது. ஜனங்கள் அவ்வளவு பயந்து பதுங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இதையெல்லாம் அவன் அறியான். அந்தச் சுவடு இவனுடையதுதான் என்று இப்போது வெளியாகிறது.

அவனைக் காவலனாக அமர்த்திக்கொண்டுள்ள திரிபுரா மகாராஜா அவனுக்கு ஓர் குள்ளனைத் தோழனாக நியமித்திருக்கிறார். குள்ளனின் உயரம் நாலடி இரண்டங்குலந்தான்; அதாவது இந்த 'ராட்சஸ'னுக்கு இடுப்பளவுதான் அவன் வருகிறான்!



அழகிய, நவீன முறையிலுள்ள தங்க வெள்ளி
சாமான்கள் உங்களுக்கு வேண்டுமா?

வாருங்கள்! வந்து பாருங்கள்!

# ராதா ஜ்வல்லரி ஷோ ரூம்





குறிப்பிடத் தக்கவை, உத்திரவாத முள்ளவை,
உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை, நீண்டகாலம் உழைப்பவை!

ஆண்களுக்கு:—தங்க மோதிரங்கள், கல்யாண மோதிரங்கள், இனுமல் மோதிரங்கள், நவீன கழுத்துச் சங்கிலிகள், பித்தான் கற்கள் முதலியன.

பெண்களுக்கு:—நவீன நெக்லஸ்கள், புதுமாதிரி தங்கச் சங்கிலிகள், ஒட்டியாணங்கள், வங்கி, வகைவகையான எனுமல் காப்புகள் முதலியன.

வெள்ளிச் சாமான்கள்:—டம்ளர்கள், டீ செட்டுகள், விளையாட்டுச் சாமான்கள், ஜாடிகள், அழகிய பட்டைக் கொலுசுகள், எனுமல் கொடுத்த பலவகை சாமான்கள்.

இன்னும் எது வேண்டும்? தயாராயிருக்கின்றன. ஆர்டர்களுக்கும் செய்து தரப்படும்.

G. ராதாகிருஷ்ண செட்டி
ஜ்வல்லர்,
பெரிய கடைத்தெரு, திருச்சி

டெலி { போன் 37.
{ கிராம் 'ராதா'



# R. M. S. & CO., LTD.

16, BROADWAY, MADRAS

| | |
|---|---|
| எலக்ட்ரிக் | மோட்டார்கள் |
| ,, | பம்புகள் |
| ,, | பங்காக்கள் |
| ,, | பல்புகள் |
| ,, | கம்பிகள் |

இன்னும் மற்றைய எலக்ட்ரிக் சாமான்களுக்கும் மேல்கண்ட விலாஸத்திற்கு எழுதவும். வேண்டிய அளவு எலக்டிரிக் சாமான்கள் எங்கள் கைவசம் இருக்கின்றன.

# நியூ ஏஷியாடிக்

கம்பெனியின்

# இடைவிடாத முன்னேற்றம்

குழந்தையானால் என்ன?
பீமன் மலையைத் தூள் செய்யவில்லையா!
ஏழே வயதானாலும், நியூ ஏஷியாடிக் கம்பெனியின் முன்னேற்றம்
ஆச்சர்யமானது!!

**1940-ல் ஏழாம் வருஷத்தில்**

| | | | |
|---|---|---|---|
| பூர்த்தியான தொகை | ரூ. | 60 | - லக்ஷத்திற்கு மேல் |
| 1939-ல் | ரூ. | 50 | - லக்ஷம் தான் |
| பிரிமிய வருமானம் | ரூ. | 8 | - லக்ஷம் |
| 1939-ல் | ரூ. | 5·5 | - லக்ஷம் தான் |

## இவ்வளவு நல்ல அபிவிருத்திக்குக் காரணம்:-

- ☆ பிர்லா பிரதர்ஸ் கம்பெனியின் நிர்வாகம்
- ☆ பொதுஜன நம்பிக்கை, ஆதரவு
- ☆ நன்கு வகுக்கப்பட்ட திட்டம்
- ☆ கண்ணியமும் நேர்மையுடனுமுள்ள ஏஜண்டுகள் நியமனம்

# வேறென்ன வேண்டும்?

**ஆதலால் ஏஜண்டாகவோ அஷ்யூர் செய்யவோ**
**தகுந்த ஸ்தாபனம்**

*முழு விவரத்துக்கு*

## நியூ ஏஷியாடிக் லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
**லிமிடெட்.,**

*மதராஸ் பிராஞ்சு:* 289, லிங்கசெட்டித் தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்

*மானேஜர்:* அ. சுப்பையா

# கல்லெறி நடுவில் வளர்ந்த சேனை

(நார்மன் ஹில்ஸன்)

காங்கிரஸ் கைதிகள் சிறைக்குள் நடத்தப்படும் சீர்கேட்டைக் கண்டிக்க, கொஞ்சநாளைக்கு முன் பல கூட்டங்கள் நடந்தன அல்லவா? அப்படிப்பட்ட கூட்டமொன்றின் பிரசங்கி, "எங்கேயோ கண்காணாத தேசத்தில் கஷ்டப்படுவோருக் கெல்லாம் கரிசனப்படுகிறதே இந்த ரட்சண்ய சேனை; இதோ பக்கத்தில் சிறையில் துன்புறும் தேசபக்தர் விஷயத்தில் ஏன் இது கவலை யெடுக்கலாகாது?" என்று கர்ஜித்தார். அது என்னவோ; அதன் நியாய அநியாயத்தை யெல்லாம் நாம் இங்கே பரிசீலனை செய்ய வேண்டியதில்லை. அந்த ரட்சண்ய சேனை ஒரு அபூர்வ ஸ்தாபனம். கிருஸ்தவ நாடுகளில் அது மகா அருமையாய் வேலை செய்கிறது; பல பரோபகார ஸேவைகள் புரிகிறது. எவ்வளவு எதிர்ப்பை யெல்லாம் வென்று அது வளர்ந்தது என்ற ஆச்சர்யக் கதையை, இக்கட்டுரையாளர் இங்கே சுருக்கமாய்க் கூறியிருக்கிறார். உயர்ந்த முறையில் நடக்கும் இயக்கங்களுக் கெல்லாம் இது ஓர் உதாரணமாகும்.



ரட்சண்ய சேனையை அமைத்து உலகப் பிரசித்தி பெற்ற மூல புருஷரான வில்லியம் பூத்.

எழுபத்தைந்து வருஷத்துக்கு முன்னே, **வில்லியம் பூத்** என்னும் பாதிரி யொருவர் லண்டன் கீழ்க்கோடியில் உள்ள பொட்டல் ஒன்றில் கூட்டங்கள் கூட்டிச் சமய உபதேசம் செய்யலானார். ஆரம்பத்திலே அவர் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் கைகொட்டிக் கேலி செய்தார்கள். ஆனால், அவர் அதற்கெல்லாம் சளைக்கவில்லை. அவர்களுடைய மனத்திலே புதியதொரு உத்வேகத்தை எழுப்பும் முயற்சியில் அவர் அணுவளவும் தளரவில்லை. அவருடைய உபதேசத்தைச் செவிமடுத்தவர்கள் எப்பேர்ப்பட்டவர்களென்று நினைக்கிறீர்கள்? சிறைச்சாலையிலிருந்து வெளி வந்தவர்கள், எதற்கும் மசியாத திருடர்கள், மிடாக்குடியர்கள், பத்திரகாளிகள், முடிச்சு மாறிகள், வழிப் பறிக்காரர்கள் - இப்பேர்ப்பட்டவர்கள் தான் அங்கே கூடினார்கள். கூட்டத்தின் நடுவிலே பூனை கத்துவது போலக் கத்தி, கலாட்டா செய்வார்கள்; வசைமாரி பொழிவார்கள்; கல் மாரியும் பொழிவார்கள். இவ்வளவுக்கும் வில்லியம் பூத் மனம் சலிக்கவில்லை. இப்படிச் சில நாள் நடந்தது. ஆனால், சில வாரங்களுக்குள்ளேயே 'கீழ் லண்டன் மிஷன்' என்னும் ஸ்தாபனத்தை அவர் ஏற்படுத்தி விட்டார்.



ரட்சண்ய சேனையின் குஷ்ட ரோகக் காலனி ஒன்றில் உள்ள மக்களுக்கு, கூடாரம் அடிக்கும் விதத்தை, ரட்சண்ய சேனை அதிகாரிகள் கற்றுக் கொடுக்கிறார்கள்.

இப்படி முளைத்தெழுந்த சிறு செடிதான் இன்று ரக்ஷண்ய சேனை - 'ஸால்வேஷன் ஆர்மி'—என்னும் பெருமரமாய் உலகமெங்கும் பரவி வேர் விட்டிருக்கிறது. இந்த ஸ்தாபனத்தின் அடையாளமான உடையை இன்று உலகமெங்கும் காணலாம். இந்தச் சேனையின் உபதேசம் 104 பாஷைகளில் நடைபெற்று வருகிறது. உலகத்தின் பற்பல பாகங்களிலும் 27,417 அதிகாரிகளும் பயிற்சியாளரும் ஓயாமல் மனித வர்க்கத்தினிடையே நல்லெண்ணத்தைப் பரப்பி வருகின்றனர்.

பிரிட்டனிலே தொழில் வளர்ச்சி காரணமாகச் செல்வம் வந்து குவிய ஆரம்பித்த சமயத்திலே தான் இந்தச் சேனைக்கு அஸ்திவாரம் கோலப்பட்டது. ஆனால், அந்தக் காலத்திய இங்கிலாந்திலே வெளிக்கு எவ்வளவு செல்வச் செழிப்பு, ஆடம்பரம், படோடோப மெல்லாம் இருந்த போதிலும், பெரிய பட்டணங்களில் வறுமை கொடுங்கோலாட்சி செலுத்தி வந்தது.

தூய்மையான சுக வாழ்க்கைக்கு ஏற்பட்ட இந்த ஹானியைத் தீர்ப்பதற்காகத்தான், வில்லியம் பூத்தும் திறமை வாய்ந்த அவரது மனைவியாரும் இப்படித் தரு

மோபதேசம் செய்யத் தலைப்பட்டார்கள். இந்தத் தலைவரும் இவரது சிஷ்யர்கள் சிலரும் இவருடைய உபதேசத்தைப் பின்பற்றிய இன்னும் சிலரும், குடிகாரர்கள் கூடுமிடங்களிலும் சிறைக்கூடங்களிலும் கூட்டங்கள் நடத்தியதைக் கண்டு, உலகமே பிரமித்துவிட்டது. பிறகு அவர்கள் தொழிற்சாலைகளுக் குள்ளும் பட்டறைகளுக்குள்ளும் புகுந்தார்கள். கடைசியாய், ஞாயிற்றுக்கிழமைகளில் நாடகக் கொட்டகைகளையும் சங்கீதச் சாலைகளையுங்கூட உபயோகித்துக் கொள்வதற்கு ஆரம்பித்து விட்டார்கள்.

முப்பது வருஷ காலம் இப்படி வில்லியம் பூத் பகீரதப் பிரயத்தனம் செய்தார். அதன் பிறகுதான் அவரது உழைப்பு சரியான பலனளிக்கலாயிற்று. 1902-ஆம் வருஷம் வெஸ்ட்மின்ஸ்டர் ஆலயத்தில் நடந்த மகுடாபிஷேகத்துக்கு எட்வர்டு மன்னரே ஜெனரல் பூத்தை நேரில் அழைத்து முக்கியமான ஸ்தானமொன்றும் அவருக் களித்தார். தமது அந்திம காலத்தில் ஜெனரல் பூத் உலகமெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்தார். சென்ற விடமெல்லாம் அவருடைய வெற்றிச் சங்கம் முழங்கியதென்று கூறவும் வேண்டுமோ?

---

**கலை:** கலை என்பது உணர்ச்சிக் கடல். ஓவியனது உணர்ச்சியின் உயரமும், கலையின் ஆழமும் சந்தித்து ஐக்கிய மடைகின்றன. உலகமே அவனது கலை அரங்கம்; உணர்ச்சிப் படம். இயற்கையின் சித்திரத்தினின்றும் பிறக்கும் விசித்திர விந்தையே கலை விளக்கம். ஓவியன் எந்தப் படத்துக்கும் உதாரணம் தேடுவதில்லை. அவனது உள்ளம் ஒரு சிருஷ்டிகர்த்தா. சட்டத்தினாலே கலை வளராது; மனோதர்மமே கலைக்கடல். உள்ள எழுச்சியின் வெளியீடான உயர்ந்த படங்களில் ஜோதியும் நிழலும் ஒன்றையொன்று அணைந்து ஜீவிக்கின்றன. கலையே தளையற்ற சுதந்திரம்; சமூகம் ஒரு விலங்குக் காடு, அருளற்ற யாக்கை.

—ஒகாகூரா காகூஜோ.

---

# மருந்தாய் மாறிய அன்பு

## (எஸ். விசாலாக்ஷி)

கதவு 'தடா' லென்று சாத்திக் கொண்டது. 'பட, பட' வென்று படிக்கட்டில் யாரோ ஏறி வரும் சத்தம் கேட்டது. 'கனவு சிருஷ்டிகன்' என்னும் ஓரங்க நாடகத்தை நான் படித்துக் கொண்டிருந்தேன்.

"இந்த மீனாளே எப்பவும் இப்படித் தான் 'தடார், தடார்' என்று கதவைப் போட்டு உடைப்பது வழக்கம். வேறெந்தக் குழந்தையும் இப்படிக் கதவை உடைப்பதில்லை" என்று எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டேன்.

காற்றில் பறக்கும் மயிர்ச் சுருள்களோடும் வியர்வை அரும்பிக் கொண்டிருக்கும் நெற்றியோடும் தோன்றிய அந்தப் பெண் சாக்ஷாத் மீனாள்தான்.

"அத்தே, அத்தே! நீ எங்கே இருக்கே, அத்தே? நாங்கள்ளாம் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்தியிருக்கோம்" என்று இரைந்து சொல்லிக் கொண்டே வந்தாள் மீனாள்.

நான் புத்தகத்தைக் கீழே வைக்காமல் "'நாங்கள்ளாம்' என்றால் யாரெல்லாம்? அது என்ன சங்கம்?" என்று சாவதானமாகக் கேட்டேன்.

"நாங்கள்ளாம் தான்—ராஜம், லீலா, புஷ்பம், கருணா எல்லாரும். சங்கத்துக்கு இன்னும் பேரிடவில்லை. ஆனால், நாங்கள்ளாம் ஏதாவது செய்யணும்னு இருக்கோம்."

"ஏதாவது என்றால் என்ன?"

"அது எனக்குத் தெரியாது, அத்தே. என்னென்னவோ எல்லாம் - அதிருக்கட்டும். லலிதாவுக்கு உடம்பு ரொம்ப அசௌக்கியமாயிருக்கே; உனக்குத் தெரியுமோ—?"

"உம், தெரியும்."

"எங்கள் சங்கம் அவளுக்கு உதவி செய்யப் போகிறது. ஒவ்வொரு சனிக்கிழமையும் அவளுக்கு உபயோகமாக ஏதாவது கொண்டுபோய்க் கொடுக்கப் போகிறோம். நாங்கள் என்ன கொண்டு போகப்போகிறோம் என்று அவளால் ஊகிக்கவே முடியாது. வார முழுவதும் அவள் எங்கள் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். இதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய், அத்தே?" மீனாள் மூச்சு விடாமல் பேசிவிட்டு, நான் என்ன பதில் சொல்லப் போகிறேன் என்று கவனிப்பதற்காக என் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

"ரொம்ப பேஷ்! ஆனால், நீங்கள் அப்படி அவளுக்கு என்ன கொண்டு போகலாம் என்று நினைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

மீனா முகத்தில் அசடு தட்டிற்று. "என்னவா? எனக்குச் சரியாகத் தெரியாது. நாங்கள் இன்னும் அதைக் குறித்து யோசிக்கவேயில்லை. அழகான ஏதாவதொரு வஸ்து. அதை வாங்க நீ கொஞ்சம் பணம் கொடுப்பையோன்னோ?" இப்படிச் சொல்லிய மீனாள் என் முகத்தோடு முகம் வைத்துக் கொஞ்சினாள். அத்திம்பேருக்கு அதிகப் பணமுடையாயிருப்பதால் என்னால் ஒன்றும் பணம் தர முடியாதென்று சொன்னேன். மீனாள் அழமாட்டாத துக்கத்தோடு "ஆனால் அம்மா—" என்று ஆரம்பித்தாள்.

"மீனா, நான் சொல்வதைக் கேள்—முகத்தை அப்படிச் சுளித்துக் கொள்ளாதே. சில நாட்களாக நீ இந்தக் கெட்ட வழக்கத்தைப் பழக்கிக் கொண்டிருக்கிறாய். முகத்தை இப்படிச் சுளிப்பது ஒரு கெட்ட வழக்கம். நீ எப்படியாவது கஷ்டப்பட்டு இந்தக் கெட்ட வழக்கத்தை விட்டுவிட வேண்டும். லலிதாவுக்கு ஏதாவது வாங்குவதற்கு என்னால் பண உதவி செய்ய முடியாது. இதிலிருந்து நீங்கள் லலிதாவுக்கு உதவி செய்வது எனக்கு இஷ்டமில்லையென்று நினைக்காதே. ஐயோ பாவம்! அவளை நினைத்தால் எனக்கு மிகவும் பரிதாபமாயிருக்கிறது. ஆனால், எவ்வளவு நல்ல காரியமாயிருந்தபோதிலும் இப்பொழுது பணமுடை அதிகமாயிருப்பதால் அத்திம்பேரால் ஒரு காசுகூடச் செலவழிக்க முடியாது."

"ஆனால், அத்தை, ரொம்பப் பணம் வேண்டாம். கொஞ்சம் கொடு, போதும்" என்று மீனா கெஞ்சினாள்.

"அசடே, அத்திம்பேரென்ன ரூபாய் காய்க்கிற மரமா வைத்திருக்கிறார்? இந்த மாசம் ஒரு சல்லி கூட உதவமுடியாது" என்று கண்டிப்பாய்ச் சொன்னேன்.

"அப்படீன்னா—அப்படீன்னா — எங்கள் சங்கம் உயிரோடிருக்கவே முடியாது" என்று மீனா விம்ம ஆரம்பித்து விட்டாள்.

"நன்ணுயிருக்கு! நான் என்ன உங்கள் சங்கத்தை மூடிவிடவா சொன்னேன்? பணம் இல்லாமல் எத்தனையோ உதவிகள் செய்யலாமே; அவைகளைச் செய்யுங்கோளேன்."

மீனுவின் விம்மல் கொஞ்சம் குறைந்தது.

"அதெப்படி, அத்தை முடியும்? நீ சொல்வது எனக்குப் புரியவில்லையே!"

"எப்படி யென்பதை நீங்கள்தான் கண்டுபிடிக்க வேண்டும். கொஞ்சம் மூளையை உபயோகித்துப் பார்த்தீர்களானல், வியாதிக்காரர்களைச் சந்தோஷப்படுத்த எவ்வளவோ விஷயங்களைக் கண்டுபிடிக்கலாம். நீங்கள் லலிதாவைப் பார்க்கப் போகும்போது ஜாக்கிரதையாகச் சுற்று முற்றும் கவனித்து அவளுக்கு எது முக்கியமாக வேண்டும் என்று அறியவேண்டும். அவள் தாயாரையும் கேட்டுப் பாருங்கள். உங்களுக்கே உங்களால் என்ன செய்யமுடியும் என்று தெரிந்துவிடும். தங்கள் மேல் பிரியமுள்ளவர்கள் தங்களைக் குறித்துச் சதா நினைத்துக் கொண்டிருக்கிருர்கள் என்பதற்குப் போதிய அத்தாட்சி ஏற்படுமானல், அதைவிட நோயாளிகளுக்குச் சந்தோஷ மளிக்கக் கூடியது வேறென்று மில்லை. கோடி ரூபாயால் உண்டாகக் கூடிய மகிழ்ச்சியை ஒரே ஒரு இனிய சொல்லால் கொடுக்கக் கூடும். இதோ பார், நீ சமத்தோல்லியோ. ஓடிப்போய் உன் சிநேகிதைகளுடன் ஆலோசித்து, என்ன செய்யவேண்டு மென்பதை நிச்சயித்துக் கொண்டு என்னிடம் வா. பணச் செலவில்லாமல் என்னென்ன செய்யக் கூடுமோ அவைகளையெல்லாம் செய்வதற்கு உனக்கு நான் உதவி செய்கிறேன்" என்று நான் சொன்னேன்.

மீனுவின் முகம் மலர்ந்தது. அவளது சிறிய இதயத்தில் அன்பின் பெருக்கால் நம்பிக்கை ஏற்பட்டது. ராஜத்தின் வீட்டுக்கு ஓடினுள். ராஜத்தின் தாயாரும் கையை விரித்து விட்டதாகத் தெரிந்தது. இரண்டுபேருமாகக் கருணுவைத் தேடிக் கொண்டு போனர்கள். அங்கே மற்றப் பெண்களும் வந்திருந்தார்கள். ஒருவராவது பெற்றோரிடமிருந்து பணம் பெற முடியவில்லை என்று தெரிந்தது. எல்லோருக்கும் மீனுளின் அத்தை சொன்ன யோசனையே மிகச் சரியானதென்று தோன்றிற்று.

பணத்தைக் கொடுத்துக் கடையில் சாமான் வாங்குவதை விட நாமே ஏதாவது தயார் செய்வதுதான் மிகவும் உசிதமென்று எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள்.

"லலிதாவுக்குப் புஷ்பமென்றுல் எவ்வளவு பிரியம்! இந்தச் சனிக்கிழமை நாம் போகும்போது ஒரு புஷ்பமாலை தொடுத்துக் கொண்டு போய் அவள் படுக்கைக்கு எதிரில் இருக்கும் கிருஷ்ணன் படத்துக்குப் போடுவோம். மாலை வாடி உலர்ந்தபோதிலும், அதிலிருந்து நமது அன்பின் மணம் வீசிக் கொண்டிருக்கும்" என்று பத்மா யோசனை கூறினுள்.

"எங்கள் வீட்டு ரோஜாச் செடி இரண்டு மொக்குகள் விட்டிருக்கிறது. அவை சனிக்கிழமை மலர்ந்து விடும்" என்று புஷ்பம் சொன்னுள்.

சாவித்திரி மல்லிகை மொக்குகள் கொண்டுவருவதாகச் சொன்னுள்.

பள்ளிக்கூடத்திலோ, கோவிலிலோ, விளையாடும் பொழுதோ எங்கே இச்சிறுமிகள் சந்தித்த போதிலும் இதே தான் பேச்சா யிருந்தது. சனிக்கிழமையும் வந்தது. எல்லோருமாகச் சேர்ந்து மாலை கட்டினுர்கள். அந்த மாலையின் அழகை என்னவென்று சொல்லுவேன்! மீனுள் அதை என்னிடம் கொண்டுவந்து காட்டினுள். என்னிடம் கொஞ்சம் ஜரிகை இருந்தது. ரோஜா இதழ்கள் உதிர்ந்துவிடாமல் மாலையிலே அந்த ஜரிகையைச் சுற்றிக் கொடுத்தேன்.

ஒரே சிரிப்பு, ஒரே கோலாகலம். லலிதாவின் வியாதி எங்கேயோ பறந்து போய்விட்டது. வியாதியை மறந்து தோழிகளின் குதூகலத்தில் அவளும் கலந்து கொண்டாள். அன்பு மிகுந்த இருதயங்களைக் கோத்து மாலையாய்த் தரித்துக்கொண்டு பசுமாட்டின் மேல் சாய்ந்து புன்சிரிப்போடு குழல் ஊதிய வண்ணம் கண்ணன் காட்சி யளித்தான். பெண்கள் இரண்டு மணிநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு, லலிதாவின் தாயார் அவளுக்கு அதிக அலுப்பேற்படு மென்று மெதுவாகக் குட்டிகளின் செவியில் ஓதினுள். பெண்கள் விடைபெற்றுச் சென்ருர்கள். சாயங்காலம் லலிதாவைப் பார்த்த டாக்டர், அவள் ஓரளவு சுகமடைந்திருப்பதாகவும் கவலைப் படக்கூடிய குறிகளெல்லாம் மாறி விட்டதாகவும் சொன்னுர்! ஆஹா! சுயநலமற்ற அன்பின் சக்திதான் என்ன!

அடுத்த சனிக்கிழமைக்கு என்ன செய்வதென்று பரோபகாரச் சங்கத்தார் ஆலோசித்தார்கள். லலிதாவுடன் பேசிக் கொண்டிருந்தபொழுது, அவள் காலின்கீழ் வைத்திருந்த வெந்நீர்ப்பை ஒழுகியதால் போர்வை நனைந்துவிட்டதென்று லலிதா தன் தாயிடம் கூறியது அவர்களுக்கு ஞாபகம் வந்தது. வெந்நீர்ப் பைக்குப் பதிலாக ஒரு மணல் பை தயார்செய்து கொடுக்கலா மென்று மீனுள் யோசனை கூறினுள். "பாட்டிக்கு முடக்குவாதம் வந்தபொழுது, அத்தை மணலை ஒரு வாணலியில் வறுத்து மூட்டையாகக் கட்டிக் காலின் கீழ் வைத்திருந்தாள். அது வெந்நீரைவிட அதிக நேரம் சூடாக இருந்தது" என்று மீனுள் விவரித்தாள். இதை மிகவும் நல்ல யோசனை என்று எல்லாரும் ஒப்புக் கொள்ளவே, இதற்கு ஏற்பாடு மும்முரமாக நடந்தது. மீனுளின் கிழிந்த சிவப்புப் பிளானல் சட்டை மணல் பையின் மேலுறையாய் மாறிற்று. சாய்வு நாற்காலியின் கிழிந்துபோன கித்தானல் பையைப் புஷ்பம் தைத்தாள். சாவித்திரிக்குப் 'பூப்போட'த் தெரியும். பையின் மேற்புறத்தில் அவள் அழகிய பூவேலை செய்தாள். தாமரைத் தடாகத்தில் செந்தாமரைப் புஷ்பங்கள் மலர்ந்திருப்பது போல் சித்திரிக்கப்பட்டது பையின் மேற்புறம். அது கண்களுக்குக் குளுமையாகவும் மனசுக்கு இனிமையாகவும் நோய்க்கு மருந்தாகவும் இருந்தது.

லலிதா பூர்ண சுகமடைந்த பிறகு, ஒரு நாள் பரோபகாரச் சங்க அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்து அவளுக்கு ஒரு தேநீர் விருந்து அளித்தார்கள். அதற்கு லலிதாவின் டாக்டரும் அழைக்கப்பட்டிருந்தார். விருந்தின் முடிவில் அவர் "நான் லலிதாவுக்கு மருந்து கொடுத்தேன். நீங்கள் உயிர் கொடுத்தீர்கள். ஏனெனில், உங்கள் அன்பே அவளைக் காப்பாற்றியது; என் மருந்தல்ல" என்ருர். சங்கத்தார் அத்தனை பேர் கண்களும் என்னை நோக்கித் திரும்பின. என் தலை என்னை அறியாமலே குனிந்து கொண்டது.

## பணக்காரப் பிச்சைக்காரன்?

லட்சுமணபுரியிலே, சுட்டன் என்ற பிச்சைக்காரன், மகன்லால் என்ற மற்ருெருவன்மீது ஒரு வழக்குத் தொடுத்தான்.

பிச்சைக்காரச் சுட்டனின் வழக்காவது: "நான் ரோட்டிலே போயிட்டிருந்தேனுங்க. மகன்லால் வந்து என்னை அடிச்சு, என் கையிலிருந்த கப்பறையை, அதிலிருந்த பணத்தோடே பிடுங்கிக்கிட்டுப் போயிட்டானுங்க. ஒரு நாள் சம்பாத்தியம் பூராவையும் பறிச்சுக் கிட்டானுங்க."

பிச்சைக்காரச் சுட்டனின் ஒரு நாளைய வருமானம் 40 ரூபாயானல்......!

சிறு கதை :

# நல்ல வீடு :

ந. பிச்ச மூர்த்தி

அது ஒரு நல்ல கிராமம். வீடுகளெல்லாமே வரகு தட்டை போட்டு வேயப்பட்டிருந்தன. ஒரு வீடு மட்டும் விதி விலக்கு. செமென்டால் தரை மெழுகி, மரம் போட்டு, மங்களூர் ஓடு மாற்றியிருந்தார்கள்; பளிச்சென்று சுண்ணாம்பு அடித்திருந்தார்கள். வாசலிலே, தேனீ வீடு கட்டுவதைப் போல, ஆறு பட்டையாகக் கலியாணப் பந்தல் போட்டிருந்தார்கள். கிராமமாயிருந்த போதிலும் இங்கிலீஷ்காரரது ஆட்சியின் பழுத்த கனிகளாகிய போலீஸ் ஸ்டேஷன், தபாலாபீஸ், தாலூக்கா கச்சேரி இவ்வளவும் இருந்தன.

அந்த ஊருக்கு மாற்றி வந்த புதிசில், உத்யோகஸ்தர்களின் மனைவிகள் குடியிருக்க நல்ல வீடு கிடைக்காமையால், முதலில் ரொம்பத் தவிப்பார்கள். டவுன்களில் மின்சார விளக்கும் விசிறியும் கண்டு, சுகம் அனுபவித்தவர்கள், கூரை வீட்டில் வசிக்க வேண்டுமென்றால், சூரியன் சாக்கடை ஜலத்தில் குளிப்பதைப்போல் ஆகாதா? ஆனால், ஆகாச மட்டும் இவர்கள் துள்ளிக் குதித்தாலும் கடைசியில் மண்ணின் மடிமீது வந்துவிழும் கல்லைப்போல, கூரை வீட்டு வாசத்திலேயே கதியின்றிச் சமாதானம் அடைவார்கள். விதி விலக்கென்றுமே அந்த வீடு முதலில் ஒவ்வொரு உத்தியோகஸ்தர் மனைவியையும் கவரும். ஆனால், அந்த உற்சாகம் வெகு நாள் நீடிப்பதில்லை. காரணங் காட்டாமல், ஒரு வாரத்திற்கெல்லாம் அந்த வீட்டைக் காலி செய்து விடுவார்கள்.

ஹெட் கான்ஸ்டேபிள் மருதநாயகம்பிள்ளை அன்றுதான் மாற்றலாகி அங்கே வந்தார். வரும்பொழுதே ஒரு பெரிய அசட்டுத்தனத்தைச் செய்து விட்டார்; ஊருக்கு மனைவியையும் அழைத்து வந்து விட்டார்.

கற்பகவல்லி வண்டியை விட்டு இறங்கியதுதான் தாமதம்; பலாப்பழத்தை ஈ மொய்ப்பது போல ஒரு பெரிய கூட்டம் சேர்ந்து விட்டது — கிராமத்து ஆண், பெண், 'அரை டிக்கெட்' அடங்கலும். கூட்டத்துக்குப் பின்புறத்தி லிருந்தவர்கள் கற்பகவல்லியைப் பார்த்துக் கிசு கிசுத்துக் கொண்டிருந்தார்கள்.

**பெண் பிள்ளை :** 'ஆமாம், ஹேட் பெண்ஜாதியா இவங்க?'

**ஆண் பிள்ளை :** 'இருக்கும்.'

**பெண் பிள்ளை :** 'பாத்தா, ஹேட் பொம்பிள்ளையாத் தெரியல்லே. அதிலேயும் குடித்தனக்காரியாத் தோணல்லே.'

**ஆண் பிள்ளை :** 'ரொம்பக் கண்டுட்டே! இந்த நாளிலேதான் குடுத்தனக்காரிக்கும் மைத்தவாளுக்கும் வித்யாசமே தெரியறதில்லியே!'

உண்மையில், பெண் பிள்ளை சொன்னதில் ஓரளவு மெய் இல்லாமலில்லை. இன்றைக்கெல்லாம் ஹேட்டுக்குச் சம்பளம் முப்பதுக்கு மேல் இருக்க முடியாது. ஆனால், அவர் மனைவியைப் பார்த்தால், நாஸூக்கான நகரத்துத் தாசி, கிராமம் பார்க்க, குறைந்த சுருதியில் ஆடை ஆபரணம் அணிந்து வந்திருந்ததுபோலிருந்தது. காலிலே பாதசரம். இடுப்பிலே ஒட்டியாணம். கழுத்திலே காசுமாலை. மூக்கிலே, காதிலே, வெள்ளை. நெற்றியிலே, விபூதி. புருவ நடுவே குங்குமம். அள்ளிச் சொருகிய தலை மயிர். வயதுக் கேற்ப, கொய்யாக் கொம்பு போன்ற வழ வழப்பான உடல்; அதை எடுத்துக் காட்டும், பாடி-ஜாக்கெட். கராச்சிப் புடவை. பின்னே அப்படிப் பேசமாட்டார்களா?

ஹேட் மனைவி கும்பலைத் திரும்பிக்கூடப் பார்க்க வில்லை. வண்டியை விட்டு இறங்கியதும் இறங்காததுமாக "நல்ல வீடு பாருங்க; எல்லாம் கூரையாய்க் கிடக்குதே" என்று உத்திர விட்டாள்.

ஊருக்கு வந்த பதினைந்து நிமிஷத்துக்குள் எட்டுத் தெருவையும் சுற்றியாகி விட்டது. சுமார் என்று நினைக்கக்கூடிய வீடுகளில் ஒரு வீடு சாணிவாசனையாய்ப் போய் விட்டது. ஒன்று நெல் குதிரும் அந்துப் பூச்சியுமாகி விட்டது. மற்றொன்று வீடா முள்ளுப் படுக்கையா என்ற சந்தேகத்தைக் கிளப்பிற்று. வேறொன்று நடவுக்கு லாயக்காயிருந்தது. சை! ஒன்றும் உபயோகமில்லை! மிஞ்சி நின்றது விதிவிலக்கு என்றுமே அந்த வீடுதான். அதைப் பார்த்ததும், "ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை" என்றாள் கற்பகவல்லி.

அடுத்த அரைமணிக்குள் அந்த வீட்டுக்குக் குடியேறிவிட்டார்கள் ஹேட்டும் மனைவியும்.

அன்றிரவு அடுத்த வீட்டு மாட்டுத் தரகனின் பெண்ஜாதியுடன் ஊர்ச் சங்கதிகளை விசாரித்துக் கொண்டிருந்தாள் கற்பகவல்லி.

"இந்த வீடுகூட இல்லாத போனா வந்த வண்டியிலேயே திரும்பிப் போயிருப்பேன்! நல்ல வேளை! இதுவாவது கிடைத்தது" என்று இவள் கூறினாள்.

"ஆமாம், ஆமாம்" என்று ஊக்கக் குறைவோடு பதில் சொன்னாள் தரகனின் மனைவி.

"அதேன், அரை மனசாச் சொல்றீங்க?"

"அரை மனசெல்லாம் இல்லே" என்று மழுப்பினாள் அடுத்த வீட்டுக்காரி?

மறுநாள் வாரச் சந்தை. காலை மணி எட்டு இருக்கும். ஹேட், ஆபீஸுக்குப் போயிருந்தார். கற்பகவல்லி உள்ளே ஏதோ பாத்திரம் கழுவிக் கொண்டிருந்தாள்.

"அம்மா!" என்று ஒரு குரல் கேட்டது.

"யாரது?" என்று வெளியே வந்தாள் கற்பகம்.

ஒரு கிராமத்தான். காலிலே கனத்த செருப்பு. தலைமுதல் முழங்கால் வரையில் மறைக்கும் அழுக்குப் படிந்த பெரிய துப்பட்டி போர்த்தியிருந்தான்.

"என்ன?"

"ரெண்டு இட்லி குடுங்க."

ஹோட் மனைவிக்குத் தூக்கி வாரிப் போட்டது. பொறுக்கி எடுத்த வீடுகூட உதவாமல், ஆப்பக்காரி யாகும் கதி வந்து விட்டதே! ரௌத்திரம் பொங்க "இல்லை" என்று வெட்டினாற் போல் பதில் சொன்னாள்.

கோபத்தின் கருத்து கிராமத்தானுக்குப் புரிய வில்லை.

"பின்னே, உப்புமா இருக்குதா?" என்றான் பொறுமையாக.

"இது கிளப்பில்லே" என்று முகத்தி லடித்தாள் கற்பகம்மாள்.

"இருந்துச்சே. எங்கே போயிடுச்சு?"

"எமலோகம்" என்று கதவைப் படாரென்று சாத்திக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

கிராமத்துக் கிளப் இருந்தஇடமே தாங்கள் வசிக்கும் வீடு என்று தெரிந்தது முதல் கற்பகவல்லியின் மனசு அலை புரண்டது. தன் நாஸுக்குக்கும் ஹோட் மனைவியின் அந்தஸ்துக்கும் அதனால் எவ்வளவு இழிவு ஏற்பட்டு விட்டது! சந்தைக்குச் சந்தை இதே தொல்லையாக வல்லவா போய்விடும்! பதில் சொல்லியே வாய் நோகுமே! ஆதியில் பக்கத்து வீட்டுக்காரி ஊக்கக் குறைவுடன் பேசினாளே, இதனால் தானோ?........

பகல் ஒரு மணிக்கு ஹோட் வீடு திரும்பினார்.

"நம்ப வேறே வூடு பாக்கணும்."

அவளைத் தொட்டுத் தாலி கட்டினது முதல் ஹோட்டுக்கு ஏற்பட்ட அனுபவ மல்லவா இது? அமைதியை இழக்காமல் "ஏன்? வந்து முழுசாக ஒருநாள்கூட ஆக வில்லையே" என்றார்.

"அதெல்லாம் முடியாது. காலையிலே வந்து இட்லி, காபி கேக்கறானுங்க. இது எப்பவோ காபிக் கடையாய் இருந்துச்சாம்."

ஹோட்டுக்கு மனைவியை மீறிப் பேசும் வழக்கமே கிடையாது. இருந்தாலும் முதலில் இருவருமாக ஊரைச் சுற்றிப் பார்த்த தைரியத்தில் "இங்கேதான் நல்ல வீடு ஒண்ணுமே காணலியே" என்றார் மெதுவாக.

"என்னை ஆப்பக்காரின்னு பாத்திங்களா?"

ஹோட் என்ன பதில் சொல்வார்? "கோவிச்சுக்காதே" என்று தாழ்ந்து போனார்.

இரண்டு பேருமாக மறுநாள் வீடு பார்க்கப் புறப்படும் நேரம். மேகத்தில் காணும் மின்னல் போல 182-ஆம் நம்பர் கான்ஸ்டேபிள் திடீரென்று எதிரே முளைத்து, கைகாட்டி மரம் ஏறுவது போல ஸலாம் வைத்தான்.

"டி. எஸ். பி. வந்திருக்காங்க. எங்கேயோ காம்ப் போகணுமாம். கூட்டிவரச் சொன்னாங்க."

எனவே, வீடு பார்க்கும் வேலை அப்பொழுது தடங்கல் பட்டு விட்டது........

ஹோட் ஊருக்குபோன அடுத்த நாள் காலை மணி ஏழு இருக்கும். கற்பகவல்லி தெருவைப் பார்த்து, தலை வாரிக் கொண்டிருந்தாள். எதிர்ச் சாரியி லிருந்த வேப்பமர நிழல், வெயிலை வெட்டும் அரிவாளைப் போலக் குறுக்கே விழுந்து கிடந்தது. அவள் மனம் எந்த உலகில் மூழ்கிக் கிடந்ததோ! சாம்பல் வர்ணத் துப்பட்டி போர்த்தியிருந்த ஆள் ஒருவன் "தோசை இருக்கா?" என்றான். அயர்ந்திருக்கும் சமயத்தில் அடி வயிற்றில் அடித்தது போல் திடுக்கிட்டுத் தெருப் பக்கமாய்ப் போனாள்—அந்த ஆளுடன் சண்டைபோட. ஆனால் தெருவில் ஒரு ஆளைக்கூடக் காணோம். லேசான காற்றில் வேப்ப மர நிழல் மட்டும் அசைந்து கொண்டிருந்தது. வீட்டைப் பற்றிய நினைப்பு எவ்வளவு தடித்திருந்த தென்பதற்கு இது ஒரு அத்தாட்சி!

புருஷன் திரும்பி வந்ததும் வேறு வீடு பார்த்து விட்டுத்தான் மறு காரியம்!........

அடுத்த வாரச் சந்தை. இரவு எட்டு மணிவரையில் போன ஹோட் திரும்பி வரவில்லை. சாப்பாட்டுக்குப் பிறகு ரேழியில் உட்கார்ந்து கற்பகவல்லி வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தாள்.

யார் யாரோ தெருவில் கும்பலாகப் போய்க் கொண்டிருந்தார்கள். ஒருவன் மட்டும் வீட்டு ஓரமாகத் தயங்கித் தயங்கிச் சென்றான். கிராப்புத் தலை, வெள்ளைச் சட்டை, சிவப்பு உருமாலை—இவ்வளவும் தென்பட்டன. வீட்டுக்கு அப்பால் அந்த ஆள் எட்டிப்போன பிறகும் ஸெண்டு வாசனை, மரத்தைவிட்டுப் போக மனமில்லாத பிசாசைப் போல், அங்கே சுற்றிக் கொண்டிருந்தது. அந்த ஆள் யார்? வீட்டைக் குறிப்பாய்ப் பார்ப்பானேன்? கிளப்புக்கு வரும் ஆசாமியோ? ஆனால், நல்ல வேளை! டீ இருக்கா என்று கேட்கவில்லை யல்லவா? அதுவே கற்பகவல்லிக்கு ஆறுதலா யிருந்தது.

அரை மணி ஆயிற்று. கை விளக்கைக் குறைத்துச் சுவரருகேவைத்துக் கதவைத் தாளிட்டு விட்டுப் பாயில் படுத்தாள்: "மண்ணாய்ப் போன டி. எஸ். பி. காம்ப் என்றால் இவன்களுக் கெல்லாம் மாமியார் வீடு மாதிரி 'ஒச'ல்லவா? ஒரே கொண்டாட்டம். வீடு பார்க்கத் தடங்கலாய்ப் பூனையாய் முளைத்தானே படுபாவி!"

இப்படி வைது கொண்டே பெருமூச் செறிந்தாள்.

"அம்மா" என்று லேசாகக் கூவிற்று ஒரு குரல்.

வாசல் கதவைத் திறப்பதற்கு யோசனை. "அரைச் சாப்பாடு போடுங்க" என்று யாராவது வந்து விட்டால்—? அப்படிக்கின்றி ஹோட்டினிடமிருந்து சமாசாரமா யிருந்தால்—? எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும் என்று நினைத்து, உள்ளே இருந்த படியே "யாரது?" என்றாள்.

"ஐயா சாவடியிலே இருக்காக."

கற்பகவல்லிக்கு ஒரே ஞாபகம்- வீடு மாற்றுவது. அதற்காக ஹோட்

ஞாபகம். ஆகையால் கதவைக் கூடத் திறக்கத் தோணவில்லை.

“ வந்துட்டாங்களா ? ”

“ ஹூம். ”

“ அங்கே ரொம்ப ஜோலி இருக்குதா ? ”

“ இல்லை. இதோ வருவாரு. ”

அப்புறம் தெருவில் குரல் கேட்கவில்லை. கற்பகவல்லி எழுந்து படுக்கையில் உட்கார்ந்தாள். பதினைந்து நிமிஷம் ஆகியிருக்கும். வாசல் கதவிலே லேசான தட்டு விழுந்தது.

அவசரமாக எழுந்து போய், கதவைப் பாதிகூடத் திறக்கவில்லை. கதவைத் தட்டினவர் ஓசைப்படாமல் விறுக்கென்று உள்ளே நுழைந்தார். கம்மென்ற வாசனையும் கூட நுழைந்தது. கற்பகவல்லி பதறிப் போனாள். வீட்டு ஓரமாகப் போனானே அதே பேர்வழி!

அவளுக்குண்டான திகிலைவிட வந்த ஆளின் திகில் பலமடங்கு அதிகமா யிருந்தது. மெதுவாக, ஒன்றும் பேசாமல், வாயை மூடிக் காட்டி விட்டு, பின்னால் நகர்ந்து, தெருவை எட்டி, வேகமாக நடையைக் கட்டினான் கிராம மைனர்.

“ இது கிளப்பாக இருந்ததா அல்லது — ”

இந்த யோசனைக்கு முடிவு காணும் முன்பே அடுத்த வீட்டுக்காரி வாசல் கதவண்டை வந்து விட்டாள்.

“ யாரது? உங்கள் ஊட்டுலே திருடன் மாதிரி நுழைஞ்சூட்டு ஓடறது? புருசன் வந்துட்டாரா ? ”

அளவு கடந்த அவமானத்தால் கற்பகவல்லி வாயைத் திறக்கக் கூட வில்லை.

“ ஓங்களுக்குத் தெரியாதாங் காட்டியும்! இந்த ஊட்டுலே முன்னே ஒருமாதிரி பொம்பிள்ளை இருந்துச்சு. பேருக்குக் காபிக் கடை ” என்று இழுத்தாற் போல் விளக்கினாள்.

கற்பகவல்லி மௌனமாகத் தலையில் அடித்துக் கொண்டாள்.

“ அந்துப்பூச்சி வீடானாலும் சரி, ஆலமரத்தடியானாலும் சரி, இனிமே இது இல்லே ” என்று சொல்லிக் கொண்டே வீட்டுக் கதவைப் பூட்டுகிற சமயம். பூட்ஸூம் காக்கிச் சட்டையுமாக ஹேட் குறடு ஏறினார்.

“ தூக்குங்க சட்டி பானையை ” என்றாள் கற்பகவல்லி.



சப்மரின் கப்பல்கள் தண்ணீருக்குள் வெகுநாள் மூழ்கியிருந்துவிடும். இரவுகளில்தான் வெளியே தலைதூக்க முடியும். ஆதலால், சப்மரின் உத்தியோகஸ்தர்களுக்குப் பல நாள்வரையில் சூரிய வெளிச்சம் கிடைப்பதில்லை. அதனால், அவர்களுக்கு ஒரு விதத் தேக அசௌக்கியம் ஏற்படுகிறது. ஆகையால், அந்த அதிகாரிகள் கொஞ்ச காலத்துக் கொருமுறை தங்கள் படைத்தளத் துறைமுகத்துக்கு வருகையில், ‘வயலெட்-ரே’ என்ற ஊதாக் கிரணங்களை அவர்கள்மீது சில நிமிஷ நேரம் வீசுகிறார்கள். அதனால் உண்டாகும் தேகாரோக்கியம், பல மணி நேரத்தில் சூரிய வெளிச்சத்தால் கிடைக்கும் ஆரோக்கியத்துக்குச் சமமாகிறது.

---

வர்ண பேதங்களைக் கண்டு பிடிப்பது சாமான்யமாய் எல்லாராலும் முடியாது. மிகக் கூர்மையான கண்களை யுடையவர்களால்தான் அது முடியும். அதிலும் நல்ல பயிற்சி வேண்டும். வர்ண வியாபாரத்தில் சேர்ந்துள்ள சிலர் அற்ப வர்ண வித்தியாசங்களை யெல்லாம் கண்டு பிடித்து விடுகிறார்கள். சாதாரண வெள்ளை வர்ணத்திலே மூந்நூறு வித வித்தியாசங்கள் இருக்கின்றனவாம். கறுப்பு நிறத்திலும் அத்தனை விதங்களுண்டு. இத்தனையையும் அவர்கள் சுலபமாய்க் கண்டுபிடித்து விடுகிறார்கள்!

---

குழந்தைகள் அறிவு:

# சொத்துரிமை

## (லியோ டால்ஸ்டாய்)

ஒரு கிழத் தச்சன்.

ஒரு சிறுவன்: 7-வயது

மச்சின் சாளரக் கம்பிகளைக் கிழத் தச்சன் பழுது பார்த்துக் கொண்டிருக்கிறான். வீட்டு எஜமானின் மகன், அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறான்.

**சிறுவன்:** எவ்வளவு நன்றாய்ச் செய்கிறாய்? உன் பெயரென்ன?

**தச்சன்:** அதுவா? முன்னே க்ரோல்கா என்று என்னை ஜனங்கள் கூப்பிடுவது வழக்கம்; இப்போதோ க்ரோல் என்று கூப்பிடுகிறார்கள். ஸாவிச் என்பது என்னுடைய இன்னொரு பெயராகும்.

**சிறுவன்:** க்ரோல்கா ஸாவிச்! நீ எவ்வளவு நன்றாய் வேலை செய்கிறாய்?

**தச்சன்:** நன்றாய் வேலை செய்வதுதான் நல்லது. கோணல் வேலையால் என்ன பிரயோசனம்?

**சிறுவன்:** உங்கள் வீட்டிலே மச்சு இருக்கிறதோ?

**தச்சன்:** (நகைத்துக்கொண்டே) மச்சா! பையா! உங்கள் வீட்டு மச்சு, அதோடு போட்டி போட முடியாதப்பா! ஜன்னலும் கிடையாது, கதவும் கிடையாது; கூரையும் கிடையாது, தரையும் கிடையாது—அப்பேர்ப்பட்டது எங்கள் வீட்டு மச்சு.

**சிறுவன்:** நீ எப்பொழுது பார்த்தாலும் தமாஷ் செய்துகொண்டேயிருக்கிறாயே. இல்லை; நிஜமாகவே கேட்கிறேன். இந்த மாதிரி மச்சு உனக்கு இருக்கிறதா? எனக்குத் தெரிந்துகொள்ள ஆசையா யிருக்கிறது.

**தச்சன்:** மச்சா? அட ராஜா! எப்படியப்பா எங்கள் மாதிரி ஜனங்களுக்கு மச்சு இருக்க முடியும்? எங்கள் வீட்டுத் தலைமேலே ஒரு கூரையிருந்தால், அதுவே பெரிய மச்சுக்குச் சமானமாயிற்றே! வசந்த காலத்திலிருந்து, எனக்கு ஒரு குடிசை கட்டிக்கொள்ள நானும்தான் முயற்சி செய்தவண்ண மிருக்கிறேன். பழைய குடிசையை இடித்துத் தள்ளிவிட்டேன்; ஆனால், புதிய குடிசையைக் கட்டி முடிக்க முடியவில்லை. அதற்கு ஓர் கூரையில்லை; அது இடிந்து விழுந்து கொண்டிருக்கிறது.

**சிறுவன்:** (ஆச்சர்யத்துடன்) ஏன் அப்படி?

**தச்சன்:** ஏனென்றால், எனக்குப் போதிய பலமில்லை.

**சிறுவன்:** நீ என்ன சொல்லுகிறாய்—போதிய பலமில்லையா? நீ எங்களுக்கு வேலை செய்கிறாயே; இல்லையா?

**தச்சன்:** ஆமாம், நான் உங்களுக்கு வேலை செய்கிறேன்; ஆனால், எனக்கு நானே வேலை செய்துகொள்ள முடியாது.

**சிறுவன்:** ஏன் முடியாது? எனக்குப் புரியவில்லையே. விளங்கச் சொல்லேன்.

**தச்சன்:** நீ பெரியவனாய் வளரும்போது புரிந்துகொள்வாய், ராஜா. உங்களுக்கு நான் வேலை செய்ய முடியும்; ஆனால், எனக்கு நானே வேலை செய்துகொள்ள முடியாது.

**சிறுவன்:** அது ஏன் முடியாது?

**தச்சன்:** ஏனென்றால், என் வேலைக்கு எனக்கு மரம் வேண்டும்; என்னிடம் மரம் கிடையாது. ஆகையால், நான் மரத்தைக் கிரயத்துக்கு வாங்க வேண்டும்; ஆனால் அதற்கு என்னிடம் பணம் கிடையாது. நான் இப்போது உங்களுக்கு வேலை செய்துகொண்டிருக்கிறேன். உன் அம்மா எனக்குச் சம்பளம் கொடுப்பாள். கொஞ்சம் அதிகமாய் எனக்குச் சம்பளம் கொடுக்கும்படி நீ அவளிடம் சொல்லு. அவள் அப்படிக் கொடுத்தால், நான் காட்டுக்குப் போய், அரை டஜன் ஒடிய மரங்கள் வாங்கி உத்திரங்கள் செய்து என் கூரையைப் போட்டு விடுவேன்.

**சிறுவன்:** அப்படியானால் உனக்குச் சொந்தமாய்க் காடு கிடையாதா?

**தச்சன்:** காடுகள் ஏராளமாயிருக்கின்றன; மூன்று நாள் நடந்தாலும், மறுகோடி காண முடியாத காடுகள்! அவை எங்களுக்குச் சொந்தமல்ல; அதுதான் உபத்திரவம்!

**சிறுவன்:** ஆனால், எங்களுக்குச் சொந்தமான காடுதான் எங்களுக்குப் பெரிய தொல்லையா யிருக்கிறது என்று எங்கள் அம்மா சொல்லுகிறாளே! எங்கள் காட்டைப் பற்றியே அவள் எப்போதும் கவலைப்படுகிறாளே!

**தச்சன்:** ஆம், அதுதான் விநோதம். அவள் காடு ரொம்ப பெரிசாயிருப்பதால், உங்கள் அம்மா தொல்லைப்படுகிறாள்; எனக்குக் காடே யில்லாததால், நான் தொல்லைப்படுகிறேன். சரி சரி. என் வேலையை மறந்து நான் உன்னோடு வம்பளந்து கொண்டிருக்கிறேன்; என் மாதிரி மனிதர்கள் வம்பளந்தால் யாரும் புகழ மாட்டார்கள். (தன் வேலையில் மீண்டும் ஈடுபடுகிறான்.)

**சிறுவன்:** நான் பெரியவனாய் வளரும்போது, ஒருவர் மாதிரியே மற்றவருக்கும் சொத்திருக்கும்படி செய்யப் போகிறேன்—அப்போது எல்லாரும் எல்லாப் பண்டங்களையும் சமமாய்ப் பங்கிட்டுக்கொள்ளலாம்.

**தச்சன்:** அப்படியானால், நீ கொஞ்சம் வேகமாய் வளரப்பா; இல்லையானால், என்னால் காத்திருக்க முடியாது! ஆனால், மறந்து மாத்திரம் போய்விடாதே............அது இருக்கட்டும்; என் இழைப்புளியை எங்கே வைத்தேன்?

---

# செஞ்சிப் : : : : பிரயாணம்



ராஜகிரியின் உச்சியிலுள்ள கோபுரம். எதிரிகள் வருகிறர்களா என்று ஒரு காவலன் இங்கிருந்து கண்கொட்டாமல் கவனித்துக் கொண்டே யிருப்பதற்காகக் கட்டப்பட்டது. இப்போது ஒரு 'கிளாக் டவர்' ஆக இது விளங்குகிறது.

சென்னையி லிருந்து செஞ்சிக்குச் சுமார் 93 மைல்கள் தான். ரயிலில் செல்வதானல் திண்டிவனம் வரை தான் செல்ல முடியும். அப்புறம் பதினேழு மைல் பஸ்ஸிலோ அல்லது தனி மோட்டாரிலோ செல்ல வேண்டும்.

செஞ்சியை நோக்கிச் செல்லும்பொழுது நாம் சரித்திரத்தை நோக்கியே செல்கிறோம். தேசிங்கு ராஜா ஐந்து வயதில் குதிரையைப் பிடித்து அடக்கினனோ இல்லையோ, அது நமக்குத் தெரியாது; ஆனல் அவன் தன்னுடைய பலமான கோட்டையி லிருந்துகொண்டு பல்லாயிரக் கணக்கான மக்களை அடக்கி யாண்டிருக்கிறன் என்பது மட்டும் உண்மை.

செஞ்சி நகரம் ஒரு காலத்தில் சீர்பெற்று விளங்கியது. ஆனல், இன்று அது ஒரு சிறு கிராமம். செஞ்சித் தாலூகா தென்னற்காட்டைச் சேர்ந்தது. தாலூகாவின் தலை நகர் செஞ்சிக் கிராமந்தான்.

இத்தகைய சரித்திரக் கோட்டைகளில் வழக்கமாயுள்ள தாலூகாக் கச்சேரி, மாஜிஸ்ட்ரேட் கோர்ட் முதலியவைகள்தான் அங்கே காணப்படுகின்றன. அந்த ஊரிலேயே வசதியான நல்ல கட்டிடம் ஆற்றங்கரையி லமைந்துள்ள முசாபரி பங்களாத்தான். செஞ்சிக் கோட்டையில் ஏறிப் பார்ப்பதற்காகச் சென்னையி லிருந்து நாங்கள் மூன்று நண்பர்கள் புறப்பட்டோம்.

எங்கள் மோட்டார் செங்கற்பட்டு ஸ்டேஷனை அடைந்ததும், எங்களை யறியாமலே பசி உண்டாயிற்று. செங்கற்பட்டு ஸ்டேஷனை விட்டால், வேறு நல்ல இட்டலி வழியில் எங்கே கிடைக்கப் போகிறது? ஸ்டேஷனிலுள்ள ஹோட்டலுக்குச் சென்றோம். என்ன ஆச்சரியம்! பிராம்மணர் சாப்பிடுமிடம் — பிராம்மணரல்லாதார் சாப்பிடுமிடம் என்ற போர்டுகளைக் காணவே முடியவில்லை. அவைகளெல்லாம் எங்கே சென்று மறைந்தன? எல்லோரும் எங்கே வேண்டுமானலும் சாப்பிடலாமாம். நல்ல காலம்! புதிய இந்தியா இப்பொழுது தான் உதயமாகிறது! 'பெரியார்' ராமசாமி நாய்க்கர் தமது வாழ்க்கையிலேயே செய்த நல்ல காரியம் இது ஒன்றுதான் போலும்!



கிருஷ்ணகிரியின் உச்சியிலுள்ள ராஜாங்கக் களஞ்சியம்.

திண்டிவனம் வரையில் ரோடு பாதகமில்லை; அப்புறம் மோசமாக இருக்கிறது. செஞ்சியை அடைந்ததும் நேராக முசாபரி பங்களாவுக்குச் சென்றோம்.

முசாபரி பங்களா 'வாச்மென்' முருகேசம் பிள்ளை பதினறு வருஷங்களாக அங்கே வேலை பார்க்கிறராம். ஆனல் அவருடைய சம்பளம் மட்டும் ரூபாய் பனிரண்டி லிருந்து உயரவே யில்லை!

முருகேசம் பிள்ளையைக் கூப்பிடுவதென்றல், உண்மையிலேயே கஷ்டந்தான். முருகேசம் பிள்ளையைக் கூப்பிட்ட உடனே "என்?" என்ற சத்தம் கேட்டுவிடும். ஆனல், பத்து நிமிஷம் வரை அவர் உங்கள் முன் வரமாட்டார். நீங்கள் கூப்பிட்ட உடனேயே அவர் தமது பழைய கோட்டை மாட்டிக் கொண்டு தலைப்பாகையை வரிந்து வரிந்து கட்டிக் கொள்வதற்கு, குறைந்தது பத்து நிமிஷமாவது பிடிக்கும். இந்தக் கஷ்டத்தை உத்தேசித்து நாங்கள் அவரைக் கூப்பிடுவதே யில்லை. ஏதாவது அவரிடம் கேட்கவேண்டுமானல், நாங்களே அவர் இருக்குமிடத்துக்குச் சென்று விடுவோம். "செஞ்சியைப்பற்றி ஏதாவது புத்தகம்

## காசி நாதன்

இருக்கிறதா? இங்கே கிடைக் குமா?'' என்று முருகேசம் பிள்ளையைக் கேட்டோம். அவர் தேசிங்கு ராஜன் பாட்டுப் புத்தகமொன்றைக் கொண்டு வந்து கொடுத்தார். அந்தப் புத்தகத்தின் அட்டையில் "இது ராமாயியின் புத்தகம். யாரும் எடுத்துக் கொண்டு போனால் போலீஸில் சார்ச் செய்யப்படும்" என்று எழுதியிருந்தது! புத்தகத்தைப் பிரித்து எனது நண்பர் பின் வருமாறு படித்தார்:

"குதிரை பிறந்தது வெள்ளிக்
கிழமை ராஜா தேசிங்கு!
யானை பிறந்தது வெள்ளிக்
கிழமை ராஜா தேசிங்கு!
நீயும் பிறந்தது வெள்ளிக்
கிழமை ராஜா தேசிங்கு!"



ராஜகிரிக் கோட்டை: தேசிங்கு மன்னனின் ரத கஜ துரக பதாதிகள் கொண்ட சதுரங்க சேனை இருந்த இடம்.

இதைப் படித்ததும் எனது நண்பருக்கும் 'கவிதா சக்தி' பிறந்துவிட்டது. உடனே அவர்

"நானும் பிறந்தது வெள்ளிக்கிழமை
ராஜா தேசிங்கு!"

என்று பாட ஆரம்பித்து விட்டார்.

இந்தப் புத்தகத்தை அரைகுறையாகப் படித்து முடித்ததும், "வேறு புத்தகம் ஏதாவது இருக்கிறதா?" என்று முருகேசம் பிள்ளையைக் கேட்டோம். அவர் "முசாபரி பங்களாவில் ஒரே ஒரு புத்தகந்தான் இருக்கிறது" என்று கூறி, 'பைபிளை'க் கொண்டுவந்து கொடுத்தார். "அட கடவுளே! பாதிரிகள்தான் கிறிஸ்துவ மதப் பிரசாரம் செய்கிறார்கள். நாசமாய்ப் போன ஜில்லா போர்டுமா இந்தப் பிரசாரம் செய்ய வேண்டும்!" என்றார் நண்பர். 'நாசமாய்ப் போன' என்பது இந்த நண்பர் அடிக்கடி கூறும் அர்த்த மில்லாத ஒரு வார்த்தை.

அன்று மாலையில் கோட்டையைப் பார்க்கச் சென்றோம். முதலாவது ராஜகிரி. இது ஒரு பிரம்மாண்டமான கோட்டை. ஒரு காலத்தில் சேனைகள் அணி வகுத்து நின்ற இடங்கள், இப்பொழுது வயல் காடுகளாக இருக்கின்றன. சில சமயங்களில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் அங்கே மனிதர்களையே காணமுடியாது. நெளிந்தும் வளைந்தும் செல்லும் பாதைகள் வழியாகப் பல வாயிற்படிகளைக் கடந்து ராஜகிரியின் அடிவாரம் போய்ச் சேர்ந்தோம்.

முதன் முதலாக ஆறு மாடியுள்ள அழகிய கட்டிடமொன்றைக் கண்டோம். இதனருகே ஒரு பெரிய குதிரை லாயம் இருக்கிறது. 'அரசர் ஸ்னானம் செய்த இடம்', 'அரசி ஸ்னானம் செய்த இடம்' என்று சில இடங்களைப்பற்றி நாங்களே நினைத்துக்கொண்டோம்.

அழகிய குளம். அதன் நாற்புறமும் மண்டபம். குளத்தை அடைவதற்கு, குளத்துக்கு வெளியே யிருந்து பூமிக்குக் கீழே செல்லும் குறுக்கு வழி மூலம் மண்டபத்துக்குச் சென்று, பிறகுதான் குளத்துக்குச் செல்ல வேண்டும்.



இது கிருஷ்ணகிரி: இதன் உச்சியிலே இருப்பதுதான் தேசிங்கு மன்னனின் அரண்மனையும் கலியாண மண்டபமும்.

ஏராளமான களஞ்சியங்கள், தான்யங்களைச் சேகரித்து வைப்பதற்காகக் கட்டப் பெற்

திருக்கின்றன. பிரம்மாண்டமான இந்தக் களஞ்சியங்களில் ஒரு தூண் கூடக் கிடையாது.

உடல் பயிற்சி மண்டபமும் மலை அடிவாரத்திலேயே இருக்கிறது.

நாங்கள் மூவரும் ராஜகிரியில் ஏறுவதற்காக முயற்சித்தோம். வழி நெடுக, சுமார் பத்து மண்டபங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மண்டபத்திலும் தங்கி இளைப்பாறிச் செல்லலாம்.

படிகளில் ஏறுவது மிகவும் கஷ்டமாக இருந்தது. ஏனெனில், நாங்கள் மூவரும் ஏறக்குறையப் 'பெரிய மனிதர்கள்'. எங்களில் மிகப் பெரிய மனிதர் சுமார் 160 பவுண்டுதான் எடை யுள்ளவர்.

மூன்றாவது மண்டபம் வந்த உடனேயே நான் உட்கார ஆரம்பித்து விட்டேன். என்னை உற்சாகப்படுத்திக் கொண்டே மற்ற இரு நண்பர்களும் உட்கார்ந்து விட்டார்கள்.

அப்பொழுதுதான் மலையிலிருந்து காவற்காரன் இறங்கி வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்டதும் எனது நண்பர் "ஏனப்பா, உச்சிக்கு ஏறி இறங்குவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்?" என்று கேட்டார். அதற்கு அவன் "சுமார் ஒன்றரை மணி நேரம் பிடிக்கும்" என்றான். எனது நண்பர் "சரி; போவதற்கு முக்கால் மணி, வருவதற்கு முக்கால் மணி" என்று கணக்குப் போட்டுக் கூறினார். உடனே காவற்காரன் "இல்லீங்கோ; போவதற்கு ஒரு மணி, வருவதற்கு அரை மணி யாகும்" என்றான். எனது நண்பரின் கணக்கிலே பிசகில்லை; ஆனால் காவற்காரன் கூறியதுதான் உண்மை. கடைசியாக, மலையின் உச்சியை அடைந்தோம். ரங்கநாதர் கோவில், மணிக்கூண்டு, தேசிங்கு ராஜா தர்பார் நடத்திய இடம், பொக்கிஷச் சாலை முதலியவைகளைப் பார்த்தோம்.

மறு நாள் காலையில் கிருஷ்ணகிரிக்குச் சென்றோம். இது மிகவும் சிறிய மலை. சுமார் முந்நூற்றெண்பது படிகள்தான். ஆனால் இதில் ஏறி இறங்குவதற்குள் முழங் கால்கள் முறிந்து விடும்போல் தோன்றியது.

செங்குத்தான இம்மலையின் மேல் சில ஆலயங்களும், களஞ்சியங்களும், அரச மண்டபங்களும் இருக்கின்றன. உச்சியிலுள்ள மண்டபம் மிக அழகானது. ஆனால், இங்கே வரும் மனிதப் 'பிராணிகள்', இந்த அழகிய மண்டபத்தில் தங்கள் பெயர்களைக் கரியாலும் மற்றும் பல வகையாலும் எழுதி ஆபாசப்படுத்தி யிருக்கின்றன.

மூன்றாவது மலை ரங்ககிரி. ஆனால் இம் முறை அங்கே செல்ல எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ரங்ககிரி, செஞ்சியிலிருந்து சுமார் இரண்டரை மைல் தூரத்திலுள்ள சிங்கவரத்தில் இருக்கிறது. இம் மலைக் கோவிலில் ரங்கநாதர் பள்ளிகொண் டிருக்கிறார்.

ஆனால், இந்த ரங்கநாதர் மற்ற ரங்கநாதர்களைப்போல் இல்லாமல் ஆகாயத்தை நோக்கிக்கொண் டிருக்கிறார். தேசிங்கு ராஜா சண்டைக்குச் செல்வதற்காக உத்தரவு கேட்க வந்ததாகவும், அதற்கு ரங்கநாதர் சம்மத மில்லாமல் தலையைத் திருப்பி வைத்துக்கொண்டதாகவும் அங்குள்ளவர்கள் கூறுகிறார்கள். அது எப்படி யானாலும் சரி; ஒரே கல்லில் செதுக்கப்பெற்ற ரங்கநாதரின் பிரம்மாண்டமான அந்தத் 'திருவுருவம்' பார்க்கத் தக்கது.

செஞ்சிக்குச் செல்லுகிறவர்களுக்கு, ஒரே ஒரு வார்த்தை. நீங்கள் அங்கே சென்றதும் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்; அங்கே யிருக்கும் இரண்டொரு ஹோட்டல்களில் முன்னதாகவே சொல்லிவைத்து விடுங்கள். இல்லை யானால் விநோதமான 'பரங்கிக்காய் வத்தல் குழம்பு' தான் உங்களுக்குக் கிடைக்கும்.

## இப்படி ஒரு கணக்கு

ஒரு கணக்கு நிபுணர் இந்தக் கணக்கைப் போடுகிறார்:

முஸோலினி, ஸ்டாலின், ஹிட்லர், ரூஸ்வெல்ட் இந் நால்வரும் முறையே 1883, 1879, 1889, 1882-ஆம் வருஷங்களில் பிறந்தார்கள். முறையே 1922, 1924, 1933, 1933-ஆம் வருஷங்களில் அதிகாரத்துக்கு வந்தார்கள். பிறந்த வருஷ எண்களையும் அதிகாரத்துக்கு வந்த வருஷ எண்களையும் கூட்டுங்கள். ஆயிற்றா?

சரி; அவர்கள் அதிகாரத்தில் இருந்து வந்திருக்கும் காலமான 19, 17, 8, 8 வருஷங்களையும், அவர்களின் தற்போதைய வயசுகளான 58, 62, 52, 59 வருஷங்களையும் முன்னே கூட்டிவந்த தொகைகளோடு முறையே கூட்டுங்கள். ஒவ்வொன்றும் 3,882 ஆக இருக்கக் காண்பீர்கள். இதை இரண்டால் வகுங்கள். 1941-வருகிறது. ஆகவே அவர்கள் இவ்வருஷம் சரிதத்தைச் சிருஷ்டிக்கப் போகிறார்கள் என்று அந்தக் கணக்கர் முடிவு கட்டுகிறார். நீங்கள் நம்புகிறீர்களா? நம்பினால், இதோ பாருங்கள்.

நீங்கள் பிறந்த வருஷத்தையும், உத்தியோகம் பெற்ற வருஷத்தையும், உங்கள் வயசையும் கொண்டு இதே மாதிரி கணக்குப் போட்டுப் பாருங்கள். அதே 1941-எண் விடை வரும். ஆகவே, நீங்களும் இவ்வருஷம் ஏதோ சரித்திரத்தைச் சிருஷ்டிக்கத்தான் போகிறீர்கள் போலிருக்கிறது!

---

## இதுவும்..........................அதுவும்



கொலை! வீரம்!

# சோர்ந்து போன ஜூகோ நாடு

(சரித்திர மாணவன்)

ஜூகோ நாட்டைப் பற்றியா எழுத வேண்டும்? நன்றாய் எழுதலாம்; எத்தனையோ எழுதலாம். என்னென்னவோ எழுதலாம் என்று கோடித்துக் கொண்டிருந்தேன். ஆனால், **"ஜூகோஸ்லாவியாவில், கட்டுப்பாடான எதிர்ப்பு நின்றது. 'கொரில்லா'ச் சண்டைதான் இனி நடக்கும்"** என்று சென்ற வாரம் செய்தி வந்தது. என் ஆசையிலே மண் விழுந்தது. ஜூகோவைப்பற்றி, அதன் வீர மக்களைப் பற்றி, இனி என்ன எழுதுவது? ஏழை ஜூகோ கை சளைத்து விட்டது; ரத்தக் கண்ணீர் சொரிகிறது. ஆனால், அது தன் ஆத்மாவை இழக்கவில்லை; அரக்க எதிரியைத் தன்னால் முடிந்த மட்டில் எதிர்த்துப் போரிட்ட பின்னரே ஓய்ந்தது ஜூகோ. இது அதன் சோதனைக்காலம். அந்தப் பூமி இதற்கு முன்னே எத்தனையோ ரத்தக் களரிகளைக் கண்டிருக்கிறது. அதன் ஸ்லாவ் மக்கள், உலகத்தின் தலைசிறந்த வீரஜாதிகளில் ஒருவர். ஆதலால் ஜூகோ பின்னொருநாள் விடுதலை பெற்றே தீரும். எனவே, அவர்களின் இந்தத் துயர நேரத்திலே, அவர்களது பழைய வீர சரித்திரத்தை நாம் நினைவு கூர்தல் பொருத்தமே யாகும்.

ஸெர்வ், குரோட், ஸ்லாவ் என்ற மூன்று ஜாதியாரும் சேர்ந்தது தான் இன்றைய ஜூகோஸ்லாவியா. அந்த மூன்று மக்களும் நல்ல போர்த் திறனும் அஞ்சா நெஞ்சமும் உடையவர்கள். போன நூற்றாண்டில், துருக்கியர் பெரியதொரு சாம்ராஜ்யம் கண்டு, ஏக சக்ராதிபதிகளா யிருந்த காலையில் ஜூகோஸ்லாவியா அவர்களின் ஆதீனத்துக்கு உட்பட்டிருந்தது. 1803-ஆம் வருஷத்தில் ஸெர்வ் ஜாதியார் ஓரளவு சுதந்திரம் பெற்றனர். இவர்கள் 1453-ஆம் ஆண்டு முதல் துருக்கி (ஆட்டோமன்) சாம்ராஜ்யத்தில் அடிமைகளா யிருந்தார்களென்று சொல்லப்படுவதுண்டு. இவ்வாறு 350 வருஷங்களுக்குப் பின்பு ஸெர்வ்களுக்குச் சுயேச்சை வாங்கித் தந்தவர் **காரா ஜியார்ஜ்** என்ற தலைவராவர். இவர் சுயேச்சை சம்பாதித்த சில நாளைக்கெல்லாம் ஸ்லாவ் ஜாதியார் மெல்லத் தலை தூக்க ஆரம்பித்தார்கள். 1848-ஆம் ஆண்டு பிரான்ஸில் புரட்சி ஏற்பட்டபோது, தேசிய உணர்ச்சியின் உச்சஸ்தானத்தை ஸ்லாவ் ஜாதியார் எட்டி விட்டார்கள்.

1912-ஆம் ஆண்டு நடந்த பால்கன் யுத்தத்தில், ஸ்லாவ் மக்களின் நாடான

**ஜூகோஸ்லாவியா சம்பந்தமான போட்டோப் படங்களை அடுத்த இரண்டு பக்கங்களிலும் பார்க்கவும்.**

ஸெர்வியாவும் கிரீஸும் சேர்ந்து, துருக்கியை முறியடித்து விட்டன. மீண்டும் ஸெர்வியாமீது போர் தொடுக்கும்படி 1913-ஆம் ஆண்டு பல்கேரியாவை, ஆஸ்திரியா—ஹங்கேரி நாடு தூண்டி விட்டது. ஆனால், ஸெர்வியரும் கிரேக்கரும் சேர்ந்து, பல்கேரியாவைப் பின்னி வாங்கி விட்டார்கள். இதிலிருந்து, ஸெர்வியாவை எப்படியாவது அடி பணியச் செய்து விடவேண்டுமென்று, ஆஸ்திரியாவும் ஜெர்மனியும் கறுவிக் கொண்டிருந்தன.

இந்த நிலையில் தான், 1914-ஆம் ஆண்டு ஜூன் மீ ஆஸ்திரியப் பட்டத்திளவரசரான பிரான்ஸிஸ் பெர்டினன்டை, கப்ரியேல் பிரின்ஸிப் என்ற ஸெர்விய மாணவன் ஒருவன், ஸராஜெவோவில் சுட்டுக் கொன்றான். இதுவே வியாஜமாக ஸெர்வியாமீது ஆஸ்திரியா போர் தொடுத்தது. ஆஸ்திரியாவுக்கு ஜெர்மனி உதவியது. ருஷ்யாவும் பிரான்ஸும் ஸெர்வியாவை ஆதரித்து யுத்தத்தில் குதித்தன. பெல்ஜியத்தின் நடுநிலைமையை ஜெர்மனி அவமதித்ததற்காக, பிரிட்டனும் போரில் கலந்தது. இதுதான் சென்ற ஐரோப்பிய மகாயுத்தத்தின் வரலாறு.

சென்ற யுத்தத்தின்போது, இத்தாலியும் நேசக்கட்சியோடு சேர்ந்து ஜெர்மனியை எதிர்த்தது. இத்தாலியின் கூட்டுறவைப் பெறுவதற்காக, டால்மாஷியாக் கடற்கரையை அதற்குக் கொடுப்பதாக நேசக்கட்சியார் ஓர் ரகசிய உடன்படிக்கை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், யுத்தம் முடிந்து பாரிஸ் சமாதான மகாநாடு நடக்கையில், க்ளிமென்கோ அதற்குச் சம்மதிக்கவில்லை. "எட்ரியாடிக் கடலை இத்தாலியின் ஏரியாக்க நான் சம்மதிக்க மாட்டேன்" என்று அவர் கூறி விட்டார். இத்தாலி ஏமாந்தது.

1919-20-ஆம் ஆண்டுகளில், பழைய மகாயுத்தத்தின் பலனாக, புதிய ஸ்லாவ் ராஜ்ய மொன்று சிருஷ்டியாயிற்று. ஆஸ்திரியாவிலிருந்து போஸ்னியாவையும் டால்மேஷியாவையும், ஹங்கேரியிலிருந்து க்ரோஷியாவையும்

(170-ம் பக்கம் பார்க்க)




ஆஸ்திரியாவிலிருந்து பிய்த்த போஸ்னியாவும் டால்மேஷியாவும், ஹங்கேரியிலிருந்து வெட்டிய க்ரோஷியாவும் ஸ்லவோனியாவும், இவற்றோடு மாண்டினீக்ரோவும், பழைய ஸெர்வியாவும் சேர்ந்த புதிய சிருஷ்டிதான் ஜூகோஸ்லாவியா. அந்த வெட்டி யெடுத்தப் பாகங்கள், புள்ளிக் கோடுகளால் காட்டப்பட்டிருக்கின்றன.

# ஹிட்லரின் அட்டகாசத்துக்கு ஆளான

# ஜூகோ நாடும் அதன் மக்களும்



ஜூகோஸ்லாவியாவில் உள்ள சகல ஜனங்களும் கொண்டாடும் ஸோக்கோல் திருவிழாவின்போது, பெண்கள் அனைவரும் இப்படி அலங்கரித்துக் கொள்ளுகிறார்கள். கதலிக்கர், வைதீக ஸெர்வியர், க்ரோஷியர் என்ற எவ்வித வித்யாசமும் இவ்விழாவிலே இல்லை.



உடல் உறுதி பெற்ற க்ரோட் விவசாயி. ஜாக்ரேப் நகரவாசி. இப்போது நாஜிகளின் சூழ்ச்சிக்கு ஆட்பட்டிருக்கும் குலத்தினன்.



போஸ்னியுள்ள ஒரு குடியானவன். துர் ஜாடையுள்ள ஜாதியார் இதலத்தினர்கள்.



மாண்டினீக்ரோவின் பெண். இவள் குலத்தார், தேக வலுவுக்கும் அழகான நடத்தைக்கும் உலகப் பிரசித்தி பெற்றவர்களாவர்.



இவர்கள் தெற்கு ஸெர்வியாவின் விவசாயிகள். கிரேக்கரின் புராதன வைதீக மதத்தின் கோட்டை போன்ற ஜனங்கள் இவர்கள்தான். துருக்கியருடன் நடந்த போராட்டத்தில் இவர்களை அந்த வைதீக மத குருமார்தான் தலைமை தாங்கி நடத்தினர்.



ஸர்ப்ப ரஸ்தா என்று பெயர் படைத்த ரஸ்தாவும், கோட்டார் வளைகுடாக் கடலும். மாண்டினீக்ரோ ராஜ்யத்துக்கு ஒரு காலத்தில் தலை நகராயிருந்த ஸெட்டிஞ்சி நகருக்குச் செல்லும் பாதை இந்த ரஸ்தா.



ஹெர்ஸேகோவினாவிலுள்ள ...ஸ்டார் நகரம். பின்னே, சுண்ணம்பு மலைகள் நிற்கின்றன. இவற்று...ல்லாம் நடுநாயகமாய் நிற்கும் இந்த அழகிய ரோமன் பாலம் உலகப் பி...தி பெற்றதாகும்.



டான்யூப் நதியின் அபாயகரமான இரும்பு வாயிற்படியில் உள்ள கப்பல் கால்வாய். ஜூகோஸ்லாவியாவின் வியாபாரப் போக்கு வரத்துக்கு முக்கியச் சாதனமா யிருப்பது இந்தக் கால்வாய்.

(167-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்லவோனியாவையும் பிய்த்தெடுத்து, அவற்றோடு மாண்டினீக்ரோ, பழைய ஸெர்வியா ஆகியவற்றையும் சேர்த்து, ஜூகோஸ்லாவியா என்ற புதிய ஸ்லாவ் ராஜ்யம் அமைந்தது. இந்தப் புதிய ஸ்லாவ் ராஜ்யம் சிருஷ்டியாவதில் பிரஞ்சு ராஜ தந்திரி க்ளிமென்கோவும், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் வில்ஸனும் மிக்க அக்கறை யெடுத்துக் கொண்டார்கள். தெற்கு ஸ்லாவ் மக்களுக்குச் சுய நிர்ணய உரிமை வழங்கவேண்டு மென்ற ஆசையால், வில்ஸன் அதில் சிரத்தை கொண்டார். புதிய ஆஸ்திரியாவையும் ஹங்கேரியையும் பலவீனப் படுத்துவதோடு, டால்மேஷியாக் கடற்கரையை இத்தாலி அண்ட விடாதபடியும் செய்ய வேண்டுமென்று க்ளிமென்கோ விரும்பியதால்தான், அவரும் இந்தப் புதிய ஸ்லாவ் ராஜ்ய சிருஷ்டியில் சிரத்தை கொண்டார்.

இப்படிச் சிருஷ்டியான புதிய ஜூகோ ராஜ்யத்தில், க்ரோட்களும் ஸெர்வியருந்தான் மிக அதிகமா யிருக்கிறார்கள். அந்த மக்களிடையே ஒற்றுமை யில்லாமல் தகராறு இருந்துகொண்டே வந்தது. இதைக் கண்ட மன்னர் அலெக்ஜாந்தர், நாட்டை ஒற்றுமைப் படுத்த எண்ணி, சர்வாதிகாரியாக ஆட்சி செலுத்தினார். 1933-ஆம் வருஷம் சமஷ்டி முறையில் அரசியல் சீர்திருத்தங்கள் வழங்குவதாகத் தமது சகல பிரஜைகளுக்கும் அறிவித்தார். ஆயினும், அதை மன்னர் அமுலுக்குக் கொண்டுவரு முன்பே மாஸிடோனியப் புரட்சிக்காரன் ஒருவனால் அவர் கொலை யுண்டார்.

மைனர் மகன் பீட்டர், அப்போது, லண்டனில் படித்துக்கொண்டிருந்தான். தன் தந்தை இறந்த உடனே அவன் தன் தாய்நாட்டுக்குத் திரும்பினான். எனினும், பீட்டர் வயது வராத மைனரா யிருந்தபடியால் பால் என்ற கோமகனும் மற்றிருவரும் சேர்ந்து மூன்று ரீஜண்டுகள் நாட்டை ஆண்டு வரத் தொடங்கினார்கள்.

வாலிபப் பீட்டருக்கு இப்போதுதான் 18-வயது பூர்த்தியாகிறது. ஜூகோவின் மந்திரிகள், ஹிட்லருடன் ஏதோ உடன்படிக்கை செய்து கொண்டதைக் கேட்டதும் அவர் மனங் கொதித்து, தாமே ராஜ்யாதிகாரத்தைக் கைப்பற்றி அந்த மந்திரிகளை யெல்லாம் விரட்டி விட்டதும், அதை உலகமெல்லாம் புகழ்ந்ததும், இதைக் கண்டு வயிறெரிந்த ஹிட்லர் அவ் வெளிய ஜூகோநாட்டின் மீது போர் தொடுத்ததும், ஜூகோ கையோயும் வரையில் மிக்க தீரமாய் எதிர்த்து நின்றதும் சமீப சரித்திரமாகும்.



டால்மேஷியாவின் கரையிலுள்ள ஸிபேனிக் துறைமுகம். சரித்திரப் பிரசித்தி வாய்ந்தது. ஜூகோஸ்லாவியாவின் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்களுக்கு ஜீவாதாரமானது.

## ஞானியும் பக்தனும்

ஒரு ஞானியும் ஒரு பக்தனும் ஒரு காட்டுவழியே போய்க்கொண் டிருந்தனர். வழியில் ஒரு புலி வந்தது. "நாம் ஓடவேண்டிய அவசியம் இல்லை; ஈசுவரன் நம்மை நிச்சயமாகக் காப்பாற்றுவான்" என்றான் ஞானி. அதற்குப் பக்தன், "தம்பி! அப்படியல்ல; நாம் ஓடிப்போவோம். நம்மால் சாத்தியமாகக் கூடிய காரியத்துக்கு நாம் ஏன் ஈசுவரனுடைய உதவியை விரும்பி அவனைச் சிரமப் படுத்த வேண்டும்?" என்றான்.

—ஸ்ரீ பரமஹம்ஸர்.

* * * *

சில வேளைகளில் சித்திகளைப் பெறுவது பெரிய ஆபத்தை விளைவிக்கும். "ஒரு பெரிய ஸித்தர் ஒரு சமயம் கடற்கரையில் உட்கார்ந்திருந்தபோது, பெரும் புயல் அடித்தது. உபத்திரவம் அதிகமாக விருந்தபடியால், அந்த ஸித்தர், 'புயல் நிற்கக் கடவது' என்றார்; உடனே புயல் நின்றது. அப்போது சமுத்திரத்தில் பாய்விரித்து வெகு வேகத்துடன் ஒரு கப்பல் போய்க்கொண்டிருந்தது. திடீரெனப் புயல் நின்றதும் கப்பல் அதனுள்ளிருந்த சகல ஜனங்களுடனும் கடலில் மூழ்கிப் போயிற்று. இப்படி அநேகரை மரிக்கச் செய்த பாவம் ஸித்தருக்கு லபித்தபடியால், அவருடைய சக்தி அவரை விட்டகன்றது மல்லாமல் அவருக்கு நாகப் பிராப்தியு மாயிற்று" என்று மஹான் தோதாபுரி சொல்லி யிருக்கிறார்.

—ஸ்ரீ பரமஹம்ஸர்.

* * * *

1932-ஆம் வருஷம் சாந்தா ஆப்தே நடித்த 'ஷியாம் சுந்தர்' என்ற படம் வெளி வந்தது. ராதா வேஷம் பூண்ட சாந்தா நன்றாய்த்தான் நடித்திருந்தாள். படமும் பம்பாயில் 25 வாரம் ஓடிற்று. என்றாலும், விமர்சனக்காரர்கள் இருவித அபிப்பிராயங்கள் எழுதினார்கள்: சிலர் பாராட்டினார்கள்; சிலர் மிகப் பலமாய்க் கண்டித்தார்கள். "ஒரு வேலைக்காரியாய் நடிக்கக் கூடச் சாந்தா ஆப்தேக்குத் தகுதியில்லை" என்று ஒருவர் எழுதி விட்டார்.

இந்த வரிகளைப் படித்த சாந்தா கண்ணீர் விட்டாள்; அன்றிரவு பூராவும் அழுதாள். "மறுபடியும் எந்தப் படத்திலாவது நான் நடிப்பேனானால், ஒருவர் கூடக் குறைசொல்ல முடியாதபடி, சகலரும் புகழும்படி, நடித்தே தீர்வேன்" என்று திட சங்கல்பம் செய்துகொண்டாள்.

இது அவளே ஒரு பேட்டியில் கூறிய சம்பவமாகும்.

# குப்பையிலிருந்து செல்வம்

## (பெ. நா. அப்புஸ்வாமி)

“குருவி குப்பையைத் தோண்டிற்றும்; அதற்கு ஒரு பொற்காசு அகப்பட்டதாம் கோழி குப்பைக் கிடங்கைக் கிளறிற்றும்; அதற்கு ஒரு மாணிக்கம் அகப்பட்டதாம்” என்று தொடங்கும் குழந்தைக் கதைகளைக் கேட்டிருக்கிறோம். பொற்காசினால் குருவிக்குத் தொந்திரவைத் தவிர வேறொன்றும் உண்டாகவில்லை. “இந்தக் கல் யாருக்கு வேண்டும்? ஓர் அரிசி அகப்பட்டிருக்கலாகாதா?” என்று கோழி வருந்திற்று. காசும் மணியும் நமக்குச் செல்வமாகத் தோன்றியபோதிலும் குருவிக்கும் கோழிக்கும் அவை செல்வமாகத் தோன்றவில்லை. மனிதருக்குள்ளும் ஒருவருக்குச் செல்வமாகத் தோன்றுவது மற்றொருவருக்குப் பயனற்ற பொருளாக இருந்து வருவது நாம் கண்ட அனுபவம். ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒவ்வொரு நாளும் எத்தனை பொருள்கள் குப்பையிலே போய்ச் சேருகின்றன! காய்கறிகளின் தோலும் விதையும், முற்றி உலர்ந்த கறிகாய்களும், உண்கலமாகிய இலையும் சருகும், பழங் கடிதங்களும், கிழிந்த காகிதமும் புத்தகமும், கந்தைத் துணியும், ஒடிந்த அகப்பையும், காதற்ற ஊசியும், உடைந்த சாமான்களும், இவை போன்ற பிறவும் வேண்டாப் பொருள்கள் என்று குப்பையில் எறியப்படுகின்றன. கழுநீரும் கஞ்சியும் சாக்கடையில் போய்ச் சேருகின்றன. பணச் செலவு செய்து இவற்றை அப்புறப்படுத்தும் நம் நாட்டு முனிசிப்பாலிட்டிகள் இவற்றுள் பெரும் பகுதியைப் பள்ளங்களில் கொட்டுகின்றன; சதுப்பு நிலங்களையும் குட்டைகளையும் நிரப்புவதற்கு உபயோகிக்கின்றன; அல்லது ஏதோ ஒரு சொற்பத் தொகைக்குக் கண்டிராக்டர்களுக்கு விற்றுவிடுகின்றன; ஒரு பகுதியை எரித்துச் சாம்பலாக்குகின்றன; ஆயினும் இவற்றை நமது நாட்டில் அதிகமாகப் பயன்படுத்துவதில்லை. ஐரோப்பாவிலுள்ள நகரங்கள் பலவற்றில் குப்பைகளை இவ்வாறு வீண்போக விடுவதில்லை. அங்கே பொதுவாகக் குப்பைகளைத் தெருவில் எறியலாகாது. சிகரெட் துண்டுகளையும் சாக்கலேட் முதலியவற்றைச் சுற்றியுள்ள மிக மெல்லிய வெள்ளீயத் தகடுகளையும் போடுவதற்கென்று டல இடங்களில் சிறு பெட்டிகளை வைத்திருக்கிறார்கள். இவற்றிலிருந்து மட்டும் வருஷா வருஷம் ஆயிரக்கணக்கான பவுன் லாபம் கிடைக்கிறதாம். மற்றக் குப்பைகளை வாரிக் கொண்டுபோய், அவற்றைப் பலவகைக் கருவிகளின் உதவியால் பிரிக்கிறார்கள். மண் வேறு, மரம் வேறு, இரும்புச் சாமான்கள் வேறு, கண்ணாடி வேறு, காகிதம் வேறு, கந்தை வேறு என்றெல்லாம் பிரித்து வேறாக்குகிறார்கள். பிறகு அவற்றையெல்லாம் ஏற்றபடி பயன்படுத்துகிறார்கள். குப்பையில் அகப்படும் தாவரப் பொருள்களையும் இறைச்சித் துண்டுகள், எலும்புகள் முதலியவற்றையும் உரமாக உபயோகிக்கிறார்கள். மிகுந்த குப்பையை மட்டும் எரிக்கிறார்கள். அந்த வெப்பத்தையும்கூட வீணாக்குவதில்லை. அதைக்கொண்டு எஞ்சின்களை ஓட்டுவிக்கிறார்கள். இவ்வாறு பர்மிங்ஹாம் நகரத்துக் குப்பையிலிருந்து வருஷம் ஒன்றுக்கு அறுபதினாயிரம் பவுன் மதிப்புள்ள பொருள்களும், லண்டன் நகரத்துக் குப்பையிலிருந்து இரண்டரை லக்ஷம் பவுன் மதிப்புள்ள பொருள்களும் கிடைக்கின்றனவாம்.

இயற்கையும் எத்தனையோ பொருள்களை வீணாக்கிவருகிறது. எங்கும் வெயில் அடிக்கிறது. காற்று வீசுகிறது. கண்ட இடங்களில் மழை பொழிகிறது. மலையிலிருந்து அருவிகள் குதிக்கின்றன. ஆறுகள் உப்புக்கடலில் போய்விழுந்து வீணாகின்றன. இவற்றுள் பலவற்றைப் பயன்படுத்தத் தொடங்கியாகிவிட்டது; பிறவற்றைப் பயன்படுத்துவதற்கு வழிகளை விஞ்ஞானிகள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

விவசாயத்துக்கும் வெடிமருந்துக்கும் மிகவும் நெருங்கிய சம்பந்தம் ஒன்று இருக்கிறது. ஏனோ தெரியவில்லை. நைட்ரேட்டுகள் எனப்படும் இரசாயனப் பொருள்கள் நிலத்துக்கு இன்றியமையாத நல்ல உரம். அவற்றைக்கொண்டே மிகவும் பயங்கரமான வெடிமருந்துகளும் தயார் செய்யப்படுகின்றன. தென் அமெரிக்காவிலுள்ள சிலி நாட்டில் இது இயற்கையாக ஏராளமாகக் குவிந்து கிடந்தது. வெகு காலமாக உலகம் முழுவதற்கும் ஏற்றுமதியாகி வந்தது. சென்ற மகாயுத்தத்துக்குச் சற்று முன்னர் ஹாபர் என்னும் ஜெர்மன் விஞ்ஞானி காற்றிலிருந்து நைட்ரஜனைப் பிரித்தெடுத்து, அதைக்கொண்டு நைட்ரேட்டு செய்யும் முறை ஒன்றைக் கண்டுபிடித்தார். இந்த முறை அனுஷ்டானத்துக்கு வந்த பிறகு ஜெர்மனியிலே லக்ஷக்கணக்கான டன் எடையுள்ள நைட்ரேட்டுகள் செய்யப்பட்டு, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகத் தொடங்கின. சிலிக்கு அயலிலுள்ள நாடாகிய பொலிவியாவிலே அவற்றை வாங்கும்படி அத்தனை விலை மலிவாகிவிட்டது. இப்பொழுது ஒவ்வொரு நாட்டிலும் இந்தச் செயற்கை முறையைக் கையாண்டு காற்றைக் காசாக்கி வருகிறார்கள் என்று சொல்லலாம்.

காற்றிலிருந்து நைட்ரஜனைப் பிரித்தெடுத்ததுபோல் கடலிலிருந்து ப்ரோமீன் என்னும் பொருளை எடுக்க வழி கண்டு பிடித்துவிட்டார்கள். கப்பலிலே இரசாயனச் சாலையையும் கருவிகளையும் ஏற்படுத்திக் கடல் நீரிலிருந்து மாதத்துக்கு ஐந்து லக்ஷம் டன் எடையுள்ள ப்ரோமீனை எடுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

பாட்டாஷ் என்று சொல்லப்படும் இரசாயனப் பொருள் நிலத்துக்கு நல்ல உரம். ஸோப், கண்ணாடி, தீக்குச்சி முதலியன செய்வதற்கும் அது வேண்டியிருக்கிறது. ஜெர்மனியில் உள்ள ஸ்டாஸ்புர்ட் என்னும் இடத்தில் அது ஏராளமாகப் படிந்து கிடந்தது. ஆதலால் வருஷா வருஷம் லக்ஷக்கணக்கான டன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகி வந்தது. சென்ற மகாயுத்தத்தின் போது, முற்றுகை காரணமாக, இந்த ஏற்றுமதி நின்று போயிற்று. ஆனால் யுத்தத்தில் இது இல்லாமல் தீராது. யுத்தத்தில் தூரதிருஷ்டிக் கண்ணாடி முதலியவற்றுக்குக் கண்ணாடி வேண்டும். முன்னொரு காலத்தில் மரச் சாம்பலிலிருந்து இது எடுக்கப்பட்டு வந்தது. ஆதலால் மறுபடியும் எங்கும் குப்பையைக் கிளறத் தொடங்கினார்கள். கடற்கோரை, இரும்பு வார்க்கும் அடுப்புக் கழிவு, சிமெண்டு செய்யும் எந்திரசாலைத் தூம்புத் தூசியும், சர்க்கரை மில்லின் கழிவு, சாராயம் வடிக்கும் கிடங்கிலுள்ள கழிவு ஆகிய குப்பைகளைக் கொண்டு பாட்டாஷை இயற்றிச் செல்வமாக்கினார்கள். பலவகைக் களிமண்களிலும் கற்களிலும் மணலிலும் பாட்டாஷ் அகப்படுகிறது என்று தெரிந்து அவற்றிலிருந்தும் அதைப் பிரித்து எடுக்க முயன்று கொண்டிருக்கிறார்கள்.

பாட்டாஷைப் போலவே ஸோடா என்பதும் பலவகையில் உபயோகப்படுவது. கடல் நீரில் உப்பு ஏராளமாய் இருக்கிறது. அதிலிருந்து ஸோடாவைச் செய்வதற்கு வழி கண்டு பிடிப்பவர்களுக்கு மிகப் பெரிய பரிசு கொடுப்பதாகப் பிரஞ்சு அரசாங்கம் அறிவித்தது. லப்ளாங் என்பவர் ஒரு வழி கண்டுபிடித்தார். ஆனால் அவர் கண்டுபிடித்த முறையைக் கையாளும்போது ஒருவகை வாயு வானது கிளம்பிப் புகைப்போக்கியின் வழியாகக் காற்றில் பாவிற்று. ஊர் எங்கும் துர்நாற்றம் வீசிற்று. அக்கம் பக்கத்தி

லுள்ள பயிர்கள் யாவும் பட்டுப்போயின. இரும்புச் சாமான்கள் எல்லாம் கறையான் அரித்த மாதிரி அரித்துப் போயின. இந்த வேண்டாப் பொருள்தான் ஹைட்ரோக்ளோரிக் அமிலம். இதை வேறாகப் பிரித்து எடுப்பதற்கும், இதைப் பயன்படுத்துவதற்கும் வேண்டிய வழிகளை விஞ்ஞானிகள் கண்டு பிடித்த பிறகு, இது விலை மதிப்புள்ள பொருளாக ஆகிவிட்டது. ஸோடாவை இயற்றும்போது வேறு சில வேண்டாப் பொருள்களும் உண்டாக்கப்பட்டு மலை மலையாய்க் குவிந்து வந்தன. பார்ப்பதற்கு அசங்கியமாயும் துர்க்கந்தம் வீசுவதாயும் இருந்த இந்தக் குப்பையிலிருந்து கந்தகத்தை இப்பொழுது இயற்ற வழியொன்று கண்டுபிடித்து விட்டார்கள். இந்தக் குப்பையிலிருந்தும் செல்வம் கிடைக்கிறது.

இரும்புக்குக் கரும்பொன் என்று ஒரு பெயர் உண்டு. யுத்த காலத்திலும் சமாதான காலத்திலும் இது மிகவும் இன்றியமையாத பொருளாகி விட்டது. இரும்பு கலந்து கிடக்கும் கிட்டத்தையும், சுண்ணாம்புக் கல்லையும், கோக் என்னும் கரிப்பொருளையும் மிகப் பெரிய அடுப்புகளிலே இட்டு, உருக்கி, இரும்பைத் தயார் செய்கிறார்கள். அப்படி உருக்கும்போது இரும்புக் கிட்டத்திலுள்ள மண்ணும் பிற அசுத்தங்களும் மேலே மிதந்து வருகின்றன— சர்க்கரைப் பாகைக் காய்ச்சும்போது அழுக்கு மேலே மிதந்து வருவதைப் போல் இரும்பைக் காய்ச்சும்போது உண்டாகும் இந்த அழுக்கு வருஷா வருஷம் லக்ஷக்கணக்கான டன் எடை அளவில் திரண்டு வந்தது. இதை இன்ன செய்வதென்று தெரியவில்லை. கடற்கரை ஓரத்தில் உள்ள ஊர்களில் இதைக் கடலில் கொட்டி வந்தார்கள். மற்ற ஊர்களில் இது மலையாய்க் குவிந்துகொண்டே வந்தது. இப்பொழுது இந்தக் குப்பையைப் பயன்படுத்துவதற்கும் வழிகள் கண்டு பிடித்து விட்டார்கள். சதுப்பு நிலத்தைத் தூர்ப்பதற்கும், துறைமுகங்களுக்குத் தடைச் சுவர் கட்டுவதற்கும், ரயில் தண்டவாளங்களின் அடியிலும் இடையிலும் போடுவதற்கும், சாக்கடை நீரை வடிக்கட்டுவதற்கும், சிமெண்டு செய்வதற்கும், வயல்களுக்கு உரமாக இடுவதற்கும் இதை உபயோகிக்கிறார்கள்.

ஒன்றுக்கும் உதவாமல் வீண்போகும் உமியையும், மரங்களின் இலைகளையும், பருத்தி மாறுகளையும், சோளத் தட்டைகளையும், வைக்கோலையும், எடுத்த பாலையும் கொண்டு விலை மதிப்புள்ள எத்தனையோ சிறந்த பொருள்களை விஞ்ஞானிகள் இயற்றிச் செல்வ விருத்தி செய்து வருகிறார்கள்.

உத்திரத்திற்கென்றும், பலகைக்கென்றும் வருஷா வருஷம் ஆயிரக்கணக்கான மரங்களை வெட்டுகிறோம். ஒவ்வொரு மரத்திலும், கிட்டத்தட்டப் பேர் பாதி மட்டிலுந்தான் உத்திரமாகவும், பலகையாகவும் உபயோகப்படுகிறது. சிறு கிளையும், கொப்பும், இலையும், பட்டையும், வேரும், தூரும் வீணாகின்றன. வேறொன்றுக்கும் அவை உதவா என்று நினைத்து, அவற்றை அடுப்பிலிட்டு விறகாக உபயோகிக்கிறோம். அப்படி எரிய விடும்பொழுதும், அந்தப் பகுதிகளிலிருந்து நாம் முழுப் பயனையும் அடைவதில்லை.

அடுப்பில் இட்ட விறகு ஜ்வாலைவிட்டு எரியும்போது, விறகு நன்றாக எரிகிறது என்று நாம் நினைக்கிறோம். ஆனால் அப்போது விறகில் ஒரு பகுதிதான் எரிகிறது. மற்றப் பகுதியில் புகையாகச் சிறிதும் சாம்பலாகச் சிறிதும் வீண் போகின்றது. புகை எங்கும் பரவி வீட்டை அசுத்தமாக்குகிறது. எரியாது மிகுந்த சாம்பலை வாரிக் குப்பையில் கொட்டி விடுகிறோம். இப்படி ஒவ்வொரு வீட்டிலும் கரியாகிக் குப்பையாகி வரும் விறகின் அளவு சிறிதாக இருந்தபோதிலும் நாட்டிலெங்கும் அவ்வாறு வீணாகும் மரத்தின் மொத்த அளவு மிகவும் பெரிதாக இருக்கும் அல்லவா? இந்த நஷ்டம் விஞ்ஞானிகள் கண்ணில் உறுத்திக்கொண்டேயிருந்தது. இந்த நிலையில் வேறொரு காரணமும் கூடச் சேர்ந்தது.

முந்திய மகா யுத்தத்தில் இங்கிலாந்து ஜெர்மனியை முற்றுகை யிட்டது. அப்போது ஜெர்மனியில் சர்க்கரையும், கால் நடைகளுக்கு வேண்டிய உணவுப் பொருள்களும், பிறவும் கிடைப்பது அரிதாயிற்று. அதனால் அங்குள்ள விஞ்ஞானிகள் வேறு ஏதாவது பொருளைக் கொண்டு இவற்றை இயற்றக் கூடுமா என்று ஆராய்ந்தார்கள். அவர்களுள் ஹைடெல்பெர்க் நகரத்திலே வாழ்ந்து வந்த பெர்கியுஸ் என்னும் சிறந்த விஞ்ஞானியும் ஒருவர். அவர் 1916-ஆம் வருஷத்திலே இதைப் பற்றித் தீவிரமாய்ச் சோதனைகள் செய்யத் தொடங்கினார். விடாமுயற்சியுடன் அவர் நீண்ட காலமாகச் செய்த ஆராய்ச்சிகள் வெற்றிகரமாக முடிந்தன. ஆகையால் அடுப்பிலிட்டு அரைகுறையாய் எரிந்து வீணாகி வந்த மரக் கொப்பையும் கிளையையும் மரத்தூளையும் கொண்டு இப்போது ஜெர்மனியிலே செயற்கை முறையில் சர்க்கரை இயற்றி வருகிறார்கள். இவற்றுள் நூற்றுக்குத் தொண்ணூறு பகுதி சர்க்கரையாக மாறுகிறது. பாக்கியுள்ள பத்துப் பகுதிகளையுங்கூட அங்கே வீணாக விடுவதில்லை. அந்தப் பகுதிகளைக் கொண்டு பித்தான்கள் முதலியவற்றைச் செய்கிறார்கள். காடு அடர்ந்து கரும்பு விளையாத நாடுகளில் இம்முறையால் இயற்றப்படும் மரச் சர்க்கரை வெளி நாட்டிலிருந்து வரும் கருப்பஞ் சர்க்கரையைவிட விலையில் மலிவாகிவிட்டதாம். இந்த மரச் சர்க்கரை எத்தனையோ வகையாகப் பயன் படுகிறது. அதினின்று மனித உணவாகும் க்ளூக்கோஸை இயற்றுகிறார்கள். க்ளிஸெரின் என்னும் எண்ணெயையும் நைட்ரோ க்ளிஸெரின் என்னும் வெடி மருந்தையும் தயார் செய்கிறார்கள். அதில் ஒரு பகுதியைக் கால் நடைகளுக்கு உணவாகவும் உபயோகிக்கிறார்கள். காட்டு மாமும் கன்றுக்குட்டிக்கு உதவும் என்று ஒரு புது மொழி சொல்லலாம் அல்லவா?

நம் நாட்டில் விறகையும் கரியையும் உபயோகிப்பதைப் போல் இங்கிலாந்து ஜெர்மனி முதலிய நாடுகளில் பெரும்பாலும் நிலக்கரியை உபயோகிக்கிறார்கள். நமது நாட்டிலுங்கூட ரயில்வே எஞ்ஜின்களிலும் கப்பல்களிலும் தொழிற் சாலைகளிலும் நிலக்கரியை எரிய விடுவதை நாம் பார்க்கிறோம். விறகில் போலவே நிலக்கரியிலும் பெரும் பகுதி எரிகிறது. ஒரு பகுதி புகையாக மேலே கிளம்பி மறுபடியும் பூமியில் படிந்து எங்கும் கரியாக்குகிறது. மற்றொரு பகுதி அடுப்பிலே கீழே படிந்து சாம்பலோடு கலந்து கிடக்கிறது. ஆதலால் எரியும் நிலக்கரியினின்றும் நாம் முழுப் பயனையும் பெறுவதில்லை. 1909-ஆம் வருஷத்திலே டாக்டர் பெர்கியுஸ் நிலக்கரியைப் பற்றிச் சோதனைகள் செய்யத் தொடங்கினார். பற்பல தேசங்களில் அகப்படும் ஆயிரக்கணக்கான நிலக்கரி வகைகளைச் சேகரித்து வைத்துக்கொண்டு அவற்றின் பௌதிக அமைப்பு, இரசாயன அமைப்பு முதலியவற்றை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து தெரிந்துகொண்டார்.

நிலக்கரி என்பது என்ன என்று உங்களுக்குத் தெரியுமல்லவா? கோடிக் கணக்கான வருஷங்களுக்கு முன் நமது பூமியில் செழித்து வளர்ந்திருந்த காடுகளில் உள்ள தாவரங்கள் லக்ஷக் கணக்கான வருஷங்களாகப் பற்பல வகையான அழுத்தங்களுக்கு உள்ளாகி அவற்றால் உருமாறிய பொருள்தான் நிலக்கரி. இவ்வளவு நீண்டகாலமாக இயற்கையில் நிறைவேறிய காரியத்தை, வெகு துரித காலத்தில் தம்முடைய சோதனைச் சாலையில் பெர்கியுஸ் நிறைவேற்றினார். முதன் முதலில் மரத்தூளை நிலக்கரியாக மாற்றினார். இதுவே மிகப் பெரிய காரியம். ஆயினும் இதோடு அவர் திருப்தி

அடையவில்லை. ஜெர்மன் நாட்டிலே பெட்ரோல் ஊற்றுக்கள் கிடையா. தற்காலத்திலே, யுத்த காலத்தில் போலவே சமாதானம் நிலவும் காலத்திலும் பெட்ரோலும் எண்ணெயும் இன்றியமையாத பொருள்களாகிவிட்டன. ஜெர்மனியில் நிலக்கரிச் சுரங்கங்கள் உண்டு. ஆதலால் நிலக்கரியிலிருந்து பெட்ரோல் இயற்றும் வழியைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று பெர்கியுஸ் தேடத் தொடங்கினார்.

எத்தனையோ முயற்சிகள் வீணாயின. ஏதாவது ஒரு சங்கடம் நீங்கினால் மற்றொன்று வந்து நிற்கும். 1908-ஆம் வருஷம் தொடங்கிய அவருடைய முயற்சி 1926-ஆம் வருஷத்தில் தான் வெற்றியடைந்தது. லக்ஷக்கணக்காகப் பணச்செலவு செய்து ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளை ஏவி விடாமுயற்சியோடு செய்த காரியம் வெற்றிகரமாக முடிவதில் வியப்பொன்றும் இராது. நிலக்கரியைத் தூளாக்கி எண்ணெயோடு கலந்து இருப்புக் கலயங்களிலே இட்டு மிகவும் அதிகமான அழுத்தத்துக்கு உட்படுத்தி ஹைட்ரஜன் வாயுவோடு கலக்கச் செய்தால், முந்நூறு நானூறு டிகிரிச் சூட்டிலே பெட்ரோல் முதலிய பொருள்கள் கிடைக்கின்றன என்பதுதான் அவர் கண்டுபிடித்தது. இப்படிச் செயற்கைப் பெட்ரோல் இயற்றுவதற்கு நல்ல நிலக்கரிதான் வேண்டுமென்பதில்லை. மட்டமான நிலக்கரியேனும் அடுப்புக்கு உதவாத நிலக்கரித் தூளேனும் இருந்தால் போதும்.

பெர்கியுஸ் கண்டுபிடித்த முறையால் ஒரு டன் நிலக்கரியிலிருந்து நாற்பத்தைந்து காலன் பெட்ரோலும், டீஸல் எஞ்சின்களுக்கு ஏற்ற எண்ணெயும், வேறு வகையான எண்ணெய்களும், நவச்சாரமும், கார்பாலிக் திராவகமும் ஏராளமாகக் கிடைத்து வந்தன. கணக்குப் பார்த்ததில் இந்தப் பெட்ரோலின் விலை சாதாரணப் பெட்ரோலின் விலையைவிடச் சற்று அதிகம்தான். ஆனால் ஏதாவது ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்திலே வெளிநாட்டிலிருந்து போதிய அளவு பெட்ரோல் கிடைப்பதற்கு வழி இல்லாமல் போய்விட்டால் அப்போது உள்நாட்டிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து கிடைக்கும் மட்ட ரகமானதாயும் மற்றப்படி உதவாததாயுமுள்ள நிலக்கரியைக் கொண்டே வேண்டிய அளவு பெட்ரோல் இயற்றிக்கொள்ளலாம் அல்லவா? இப்பேர்ப்பட்ட பெட்ரோல் சாலைகள் பல, ஜெர்மனியிலும் இங்கிலாந்திலும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

மின்சாரம் வருவதற்குமுன் மேற்கு நாடுகளிலே தெரு விளக்குகளையும் வீட்டு விளக்குகளையும் ஏற்றுவதற்கும், வீட்டில் சமையல் செய்வதற்கும் நிலக்கரியைக் காய்ச்சி அதிலிருந்து உண்டாகும் வாயுவை உபயோகித்து வந்தார்கள். இப்படி நிலக்கரியைக் காய்ச்சும்போது வேண்டாப் பொருள்கள் சில உண்டாயின. நவச்சார வாயு இவற்றுள் ஒன்று; கன்னங் கரேல் என்ற கீல் எண்ணெய் மற்றொன்று. அமிர்தம் கடைந்தபோது விஷமும் பிறவும் தோன்றிய கதையைப் போல் இதுவு மிருக்கிறது. நவச்சாரத்தை ஒருவாறு பயன்படுத்த முடிந்தது. இந்தப் பயனற்ற கீல் எண்ணெயை என்ன செய்வது என்று தெரியவில்லை. அதை எரித்துப் பார்த்தார்கள். முற்றிலும் எரிய வில்லை. கறையான் அரிக்காமல் காப்பாற்றுவதற்காக மரத்துக்குப் பூசிப் பார்த்தார்கள். மிகுந்த கீல் எண்ணெயினால் தொந்தரவைத் தவிர வேறொன்றும் விளையவில்லை.

பிறகு விஞ்ஞானிகளில் சிலர் அதை என்ன செய்யலாம் என்று ஆராயத் தொடங்கினார்கள். பெர்க்கின் என்பவர் அதிலிருந்து சிவந்த ஊதா வர்ணச் சாயம் ஒன்றை இயற்றினார். அதன் பிறகு பேயெர் இருபது வருஷகாலம் ஆராய்ச்சிகள் நடத்தி நீலச் சாயத்தையும் நூற்றுக்கணக்கான பிற சாயங்களையும் அதிலிருந்து இயற்றும் வழிகளைக் கண்டுபிடித்தார். எத்தனையோ மருந்துச் சரக்குகளும், மயக்க மருந்துகளும், தலைவலியைத் தீர்க்கும் மருந்துகளும், வெடி மருந்துகளும், சாரமான உரங்களும், வாசனைத் திரவியங்களும், சர்க்கரையைக் காட்டிலும் ஐந்நூற்று ஐம்பது மடங்கு அதிகத் தித்திப்புள்ள ஸாக்கரின் என்னும் பொருளும் கீல் எண்ணெயிலிருந்து கிடைக்கின்றன. நிலக்கரியிலிருந்து உண்டான வேண்டாப் பொருளாகிய கீல் எண்ணெயைத் தற்காலத்து விஞ்ஞானிகள் ஒரு கற்பக விருக்ஷமாகவே கருதுகிறார்கள். உண்மையாகவே விஞ்ஞானிகள் கரியைக் காசாக்கி விட்டார்கள்!

[குறிப்பு: திருச்சி அகில இந்திய ரேடியோவில் 29-3-1941 உ ஒலிபரப்பப்பட்டது. நிலயத்தார் அனுமதியுடன் பிரசுரிக்கப் படுகிறது.]



ஜல விமான விளையாட்டு: அமெரிக்க ஆண்கள் மட்டில் இதுவரை நடத்தி வந்த இப்படி ஒரு போட்டி விளையாட்டில் இப்போது பெண்களும் கலந்து கொள்கிறார்கள். முன்னால் பலகைபோல் ஒரு தட்டு இருக்கிறது பாருங்கள்; அதிலிருந்து காற்றாடிக் கயிறுபோல் கம்பி கட்டி, அந்தக் கம்பியை நீராவிப் படகு ஒன்றுடன் இணைத்து விடுகிறார்கள். அந்தப் படகு மணிக்கு அறுபது மைல் வேகத்தில், கொந்தளிப்பான கடலில் செல்லுகிறது. காற்றாடிக் கயிற்றை இழுக்க இழுக்க அது காற்றிலே மிதப்பது போல, இந்த விமானமும் நீரிலே மிதக்கிறது. ஆனால், லாகவமாய் 'பாலன்ஸ்' செய்தால்தான் கவிழாமல் இருக்கலாம். இந்த ஜல விமான சவாரியிலே பல அமெரிக்கப் பெண்கள் சேர்ந்துகொண்டு பந்தயமும் நடத்துகிறார்கள்.

# கவியும் உருவமும்

(வே. நாராயணன்)

கவிதையைத் தமிழில் 'பாட்டு' என்றும் 'பாடல்' என்றும் சொல்வது வழக்கம். இதற்குக் காரணம் தமிழ்க் கவிகள் பெரும்பாலனவும் இசைத் தமிழாகவும் நாடகத் தமிழாகவும் அமைந்திருப்பதுதான். நாடகத் தமிழுக்கும் இசை வேண்டியது அவசியம். இந்தத் தமிழை இரு வகையாகப் பிரிக்கலாம், இராகத்திற்கு ஏற்றதாக அமைவது, இராகத்தோடு தாளத்திற்கும் ஏற்றதாக அமைவது என்று. நாடகத் தமிழுக்கோ தாளக்கட்டு இன்றியமையாதது. ஆனால் இசைக்கும் தாளத்திற்கும் அடங்காத ஒரு வகைக் கவிதை யுண்டு என்பதை நாம் மறக்கக்கூடாது. மேலும் கவிதை இசையிலோ தாளத்திலோ அமைவது அன்று என்றும் இவை கவிதைக்கு உபகரணங்களே என்றும் நாம் நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். 'இசைக்கு வார்த்தைகள் அவசிய மல்ல; அவை இசையைப் போஷிக்கும் உபகரணங்களேயாம்' என்னும் உண்மையை இசை ஞானிகள் நன்கறிவார்கள். இசையின் இயல்பினை அறியாதவர்களே பாஷையிலோ வார்த்தைகளிலோதான் இசை இணைந்துள்ளது என்று நினைத்து, சொல்லின் இனிமையைச் சுவைத்து இசையை அனுபவித்தோம் என்று எண்ணி மகிழ்வார்கள். இதுபோலவே, சொற்கட்டையும், எதுகை மோனை நயங்களையும், அவற்றால் இசையின்பமும் தாளவுணர்ச்சியா லெழும் இன்பமும் எழுவதையும் கண்டுகொண்டு, இவையெல்லாம் உத்தமக் கவிதையின் இலட்சணம் என்று பேசவார்கள். ஆயினும் உண்மை காணுமிடத்து, எதுகை மோனை சொற்கட்டு முதலியனவும், மென்மை வன்மை முதலியவற்றைப் போலக் கவிதைக்கு ஆபரணங்களும் உபகரணங்களும் ஆவன என்பது தெளிவாகும். உண்மைக் கவிதை சொல்லிலும் பொருளிலும் உள்ளது. ஏற்ற சந்தர்ப்பங்களிலே எதுகை, மோனை, சொற்கட்டு, சொற்செட்டு, பிராசம், சிலேடை, மடக்கு, முதலிய சொல்லணிகளும் உவமை முதலிய பொருளணிகளும் சொற்பொருளால் கவிப்பதவி பெற்ற கவிகளுக்கு அணி செய்யக்கூடும்; ஆயினும் இவ்வணிகளே கவியின் சொரூபம் என்று கொள்வது மடமையே யாகும்.

உருவந்தான் கவிக்கு ஜீவன் என்று யாரும் சொல்லமாட்டார்கள் என்று சிலர் நினைக்கலாம். ஆயினும், கவியின் உண்மைச் சொரூபத்தைக் காண்பது கடினமாதலால், பலர் அதன் சொரூபத்தைப் பலவாறாகக் கருதுகின்றனர். 'சீர் தளை அடி முதலியன பழைய இலக்கண விதிகளின்படி அமைந்துவிட்டால், எந்த வாக்கியமும் கவி யாகிவிடும்' என்று இலக்கண வித்துவான் நினைக்கக் கூடும். இதுபோலவே, இராக தாளங்களுக்கு ஏற்றனவாய் அமைவன எல்லாம், பாடகர்களுக்குக் கவியாகிவிடும்.

சிலர் 'தமக்கு விளங்குவனதாம் கவி' என்று நினைப்பர். "கவிக்கு வேண்டியது எளிமை. வேண்டாத விஷயங்கள் வந்து செய்யுளைக் கலக்கக்கூடாது. அடைகளை மேலே மேலே போடுவதால் கவியின் உள்ளக்கிடை மங்கிப் போய் விடுகிறது; கவியில் ரஸம் இல்லை என்றாகி விடுகிறது" என்பதே இவர்கள் சித்தாந்தம். உண்மைக் கவி எந்த ரூபத்தையும் மேற்கொள்ளக் கூடும் என்பதை இவர்கள் மறந்து விடுகிறார்கள். 'ஏழைகள் தாம் மக்கள்' என்பது போல் இருப்பது இவர் சொல். சிலர் ஏழைகளை மக்களாகவே கொள்ளாதிருப்பதைக் கண்டே, ஏழைகளும் மக்களே என்று வற்புறுத்துவதற்காகச் செய்யும் பிரசாரமாயின், இக்கொள்கையால் யாதொரு தீங்கும் நேரிடாது. ஆனாலும், பல வின்னியாசங்களுடன் அமைந்திருப்பதாலேயே கவி கவித் தன்மையை இழந்து விடுகிறது என்ற கொள்கை எழுவதற்கு இடங்கொடுப்பது கவி-தத்துவத்தை அறிய விரும்புவோர்க்குப் பெரிய முட்டுக்கட்டை யாகிவிடும். கவியின் உருவம் மென்மையாகவும் இருக்கலாம்; காடுமுரடாகவும் இருக்கலாம்; துல்லியமாய் ஒழுங்குபட்டதாக இருக்கலாம்; கட்டுக்கு அடங்காததாயும் அமையலாம். கவியின் உயிர் கருத்திலும் கருத்தை ஏற்றவாறு விளக்கும் சொல்லிலும் அன்றோ இருக்கின்றது. இவ்வாறு சொல்லும் பொருளுமே ஒன்றினை 'இது கவி' என்று தெளிவாகக் காட்டும்போது, கவி என்ற பெயரை அதற்கு மறுக்க இயலாது.

ஒரு வாக்கியத்தை வன்மையுறக் கூறுவதற்குச் சில உபாயங்கள் உண்டு. அவ்வுபாயங்களால், சொல்லப் புகுந்த விஷயத்தைப் பசுமரத்தாணிபோல் மனதிலே பதியச் செய்யலாம். ஆனால் அவ்வாறு கூறிவிடுவதால் மட்டுமே, கவி யல்லாத வாக்கியம் கவி யாகிவிடாது.

மனதிலே ஒரு உண்மை நன்றாக அழுந்தும்படி செய்வதற்கான மார்க்கங்களிலே, திரும்பத் திரும்பச் சொல்லுதல் என்பது ஒன்று. 'அவனும் நோக்கினான், அவளும் நோக்கினாள்' என்றால், நோக்கம் என்னும் தொழில் நிகழ்ந்தது என்பது கேட்போர் மனதிலே நன்றாகப் பதிந்துவிடுகிறது. ஆனால் இதிற் கவிதை யில்லை; வன்மையே இவ்வசனத்திலே உள்ளது. வேறொரு வசனத்தை நோக்குவோம். "வாலி வீழ்ந்தான்; அவன் வாலும் வீழ்ந்துவிட்டது" என்பதிலே கவிதை இருப்பதைக் காண்கிறோம். 'வாலி வீழ்ந்தான்' என்றதாலே வாலும் வீழ்ந்தது தெளிவு. அதை வற்புறுத்துவதிலே ஒரு கருத்து பொதிந்து கிடக்கிறது என்று தோற்றுகிறது. அதுதான் இராவணன் வாலியின் வாலாற் கட்டுண்ட கதைபற்றி யெழுந்த விகடம். எனவே, கருத்தை வற்புறுத்துவதற்காக மட்டும் ஒரு சொல்லைத் திரும்பத் திரும்பப் பிரயோகிப்பதால் கவிச்சுவை யில்லாத வாக்கியம் கவியாகிவிடாது. கவிச் சுவையுள்ள வாக்கியமும் அதிகச் சுவையுள்ள தாகிவிடாது. அவ்வாறு திரும்பத் திரும்பச் சொல்லாத வாக்கியத்தினும் திரும்பச் சொல்லுவதிலே சுவை மிகுந்துவிடாது. ஏனெனில், கவிரசம் வேறு; வன்மையுறக் கூறுதல், இனிமையுறக் கூறுதல் முதலியன வெல்லாம் வேறு.

இவ் விமரிசனத்திற்குக் காரணமாக அமைந்தது ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள் எழுதியுள்ள 'கவியும் உருவமும்' என்னும் கட்டுரை. அவர் அக்கட்டுரையிலே புறநானூற்றி லுள்ள 164 செய்யுளைச் சுட்டிக்காட்டி அதனுள் ரசம் இல்லை என்கிறார். "வாசகர்கள் இதை வைத்துக்கொண்டு கஷ்டப்பட வேண்டாம். வாசித்து அப்படியே விட்டுவிடலாம்" என்கிறார். எனக்கு அப்படித் தோன்றவில்லை. பல காரணங்களால் மேற்கண்ட செய்யுளி லுள்ள சொற்களின் இனிமையையோ வன்மையையோ எளிமையையோ காம்பீரியம் முதலிய தன்மைகளையோ நாம் முழுதும் அறிய இயலாத நிலைமையில் இருக்கலாம்; ஆனால், கவிதை என்பது நல்லவேளையாய் இவற்றிலெல்லாம் அமைவதாக இல்லை; அது கருத்திலும் சொல்லும் முறையிலும் அமைந்துள்ளது. செய்யுளின் முதல் எட்டு வரிகள் வருமாறு:

ஆடு நனிமறந்த கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்பத்தேம்பு பசி உழவாப்
பாஅல் இன்மையின்தோ லொடு
திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொறழூஉம் தன் மகத்து
முகம் நோக்கி
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண்
என்

மனையோள் எவ்வம் நோக்கி நினை இ
நிற் படர்ந்திசினே நற்போர்க் குமண.

'குமணனுக்கும் அவன் தம்பிக்கும் நிகழ்ந்த போரினையும் அதற்கு முன்பும் பின்பும் நடந்த செய்திகளையும் கூறும் ஒரு காவியத்திலே ஒரு கூத்தன் கூறிய வார்த்தைகளை எடுத்து, அவன் பாடிய பாட்டு என்று புறநானூற்றிலே தொகுக்கப்பட்டது இது' என்பதை நாம் மறக்கக் கூடாது. 'தம்பியால் நாடு கொள்ளப் பட்டுக் காடுபற்றி யிருந்த குமணனைப் பெருந்தலைச் சாத்தனர் பாடியது இது' என்ற குறிப்பு புறநானூற்றில் உள்ளது. 'நற்போர்க் குமண!' என்பது இந்நிலைமையில் எவ்வளவு அர்த்த புஷ்டியுள்ளதாகி விடுகிறது!

எஞ்சிய ஐந்து வரிகள் வருமாறு:—

என்னிலை அறிந்தனை ஆயின்
இந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலென்;
அடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர்
இன்மை தீர்க்கும் குடிப்பிறந்தோயே.

'நற்போர்க் குமண!' என்றது போலவே 'அடுக்கிய பண்ணமை...பிறந்தோயே!' என்ற விளியும் அர்த்த புஷ்டி வாய்ந்த தாய்க் கவியின் உள்ளக்கிடையை விளக்குவதாகின்றது. குமணனிடம் வந்த கூத்தன் குமணனுடைய பரிதாப நிலையைக் காண்கிறான். ஆயினும் அவனுக்குக் குமணனை யன்றி வேறு புகலிடம் உண்டோ? 'என் நிலைமை யெல்லாம் சொன்னல் அவன் இந்நிலைமையிலும் இன்மை தீர்ப்பான்' என்று உறுதிகொள்கிறான். அவ்வுறுதியாலேயே, அவன், தான் கண்முன் காணும் குமணனது பரிதாப நிலையை மறந்து, குமணன் கண்முன் தன் மனைவியின் பரிதாப நிலையைக் காட்டுகிறான்:

'சுலவத் தோறழூஉம் தன் மகத்து
முகம் நோக்கி
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்
கண்ணென்
மனையோள்' என்கிறான்.

அந்நிலையிலும் கூத்தனது மனைவி தன் கணவன் முகம் நோக்கவில்லை. தன் நிலைமை கண்டு கணவன் வருந்துவானே யென்று கண்களிலே நிறைந்த கண்ணீரை அடக்கிக் கொண்டிருந்தாள். "ஆயினும், அவளது எவ்வம் என் கண்ணிற் பட்டது. மனைவி குழந்தையின் முகத்தை நோக்கி வருந்தினாள்; நான் அவள் முகம் நோக்கி வருந்தினேன். எங்கள் மூவர் துயரத்தையும் போக்குவது எவ்வாறு என்று ஆலோசித்து, 'நீயே எம் போன்ற கூத்தரின் இன்மை தீர்க்கும் குடியிற் பிறந்தவன்' என்று நிச்சயித்து நீ போரிலே தோற்றுப் பரிதாபநிலையுற்ற போதும் உன்னிடம் வந்தேன்" என்கிறான். இவ்வாறு சொல்லப்படும் சொல்லின் அழகினைச் சொல்ல வேண்டியதில்லை.

இச் செய்யுளில் இன்னும் இரண்டு முக்கியமான விஷயங்கள்: குழந்தை பிறந்து நெடுநாள் ஆகவில்லை; ஆயினும், தாய்ப்பால் சுரக்கவில்லை; பால் சுரந்தால் மட்டுமே, சுவைக்கும்போது பால் பொசிந்து வரக்கூடும். பால் வாராமையால், குழந்தை சற்றுச் சுவைக்கும், சற்று அழும், மீண்டும் சுவைக்கும். இன்னும் தாய் முகம் பார்க்கத் தெரியாத பருவத்துக் குழந்தை. இவ்வழகிய கருத்துக்களைக் காட்டும் சொற்களையெல்லாம், ஸ்ரீ டி. கே. சி. அவர்கள், கவியின் உள்ளக்கிடையை மங்கச் செய்வன என்றும் இவ் விஷயங்கள் வேண்டாதனவாக வந்து செய்யுளைக் கலக்குகின்றன என்றும் கூறுகிறார்கள்; இக் கருத்துகளை விடுத்துப் பாடும் ஒப்பிலா மணிப் புலவரை மெச்சுகிறார்கள். அப்புலவர் பாடியது வருமாறு:—

ஆடெரி படர்ந்த கோடுயர் அடுப்பில்
ஆம்பி பூப்பத் தேம்பு பசியுழன்று
இல்லி தூர்த்த பொல்லா வறுமுலை
சுவைத் தொறும் சுவைத் தொறும்
[பால் காணமல்
குழவி தாய் முகம் நோக்க, மனைவி
என் முகம் நோக்க, யானும்
நின் முகம் நோக்கி வந்தனன் குமண!

ஆனல் மேற்கண்டவாறு புறநானூற்றுப் பாடலின் கவி யிதயத்தைக் கண்டு கொண்டவர்களுக்கு, ஒப்பிலா மணிப் புலவர் மேற் குறித்த பாடலினின்றும் திருடிய பாகங்களைத் தவிர மற்றைப் பாகங்களில் எவ்வகை ஒப்பும் இல்லாததாகவே தோன்றும்.

'பால் இன்மையின் சுவைத்தொறும் அழும்' என்றார் பழைய கவி; 'சுவைத் தொறும் பால் காணமல் குழவி தாய் முகம் நோக்க' என்றார் புதுமைக் கவி. இவற்றுள் எது ரஸமான சொல்?

பழைய கவியின் ரஸோக்தியை என் இவ்வாறு கெடுத்தார் ஒப்பிலா மணிப் புலவர் என்றெல்லாம் நாம் இதுவரை ஒரு வேளை வியக்கக்கூடும். ஆனல் இனி வியக்க இடமில்லை. ஒப்பிலா மணிப்புலவர் பழம் பாட்டை இவ்வாறு குட்டிச்சுவராக்கியதன் நோக்கம், ஸ்ரீ டி. கே. சி. அவர்களைப்போல அவருக்கும், 'தமிழ்ப் பண்பு, தமிழின் பாவமான தாளம் எல்லாம் அற்புதமாய் வந்து விளங்கவேண்டும்' என்பதே. மணிப் புலவர் வாக்கிலே பண்பும் பாவதாளமும் எப்படி அற்புதமாய் வந்தன?

'குழவி தாய் முகம் நோக்க, மனைவி
என் முகம் நோக்க, யானும்
நின் முகம் நோக்கி வந்தனன்'

என்று முகம் நோக்குதலை மீண்டும் மீண்டும் சாதுரியமாகக் கூறி யிருப்பதாலே தான். இது சொற் சாமர்த்தியமாகும்; கவிதை யாகாது; சிலர் சிலேடைக் காகக் கருத்துகளையும் சொற்களையுமே சிதைப்பதே போன்று, ஒப்பிலா மணிப் புலவரும் 'பூர்வமான செய்யுளின்' கருத்துகளையும் சொற்களையுமே 'முகம் நோக்க' என்று முக்காலும் கூறுவதிலுள்ள அற்ப நயம் நோக்கிச் சித்திர வதை செய்துவிட்டார் அல்லவா?

எதுகை, மோனை, சிலேடை, சொல் மடக்கு முதலான சொல்லணிகளிலே திளைத்துக் கொண்டிருக்கும் நமக்குப் பண்டைத் தமிழ்ப் பாடல்களிலே யுள்ள கவி நயம் நன்ருகத் தெரிவதில்லை. பண்டைத்தமிழப் பாடல்களிலே சொன்னடம் இல்லை என்பதாக நான் கூறவில்லை; அவற்றிலுள்ள சொன்னயத்தை, அக் காலத்துச் சொற் பிரயோகங்களைச் செவ்வனே அறிந்து கொள்ள நமக்கு இயலாத வரையில் நாம் அனுபவிக்க முடியாததான்; ஆயினும் பிற்காலத்துக் கவிகளின் சொல்லணிகளிலும் கவியுருவத்திலும் ஈடுபட்டு, உண்மைக் கவிதையின் இயல்பை அறிந்து கொள்ளாததோடு அமையாது, அதனை இகழும் நிலையிலும நாம் இருக்கவேண்டியதில்லை. உண்மைக் கவிதையை, கவியுள்ளம் படைத்த எவனும் அறியக்கூடும்; பாஷைத் தேர்ச்சி முழுவதும் பெறவேண்டிய அவசியமில்லை. மொழிபெயர்ப்பிலும் உண்மைக் கவிதை விகசிக்கும். சொல்லணிகளோ பொருளணிகளோ வேண்டா. கவிதை, அணியின்றியே உள்ளத்தைக் கவர்ந்து விடும். சந்தர்ப்பம் தெரியவேண்டும், அதற்கு எற்றவாறு கவியின் மனே பாவம் தெரியவேண்டும்; அவ்வளவுதான்.

மேற்குறித்த பாடல்களுக்கு ஸ்ரீ டி. கே. சி. அவர்கள் சந்தர்ப்பம் வகுத்துள்ளார்கள். சந்தர்ப்பத்தைத் தவருக வகுத்துக் கொண்டதாலேதான், புறநானூற்றுக் கவியின் உள்ளக்கிடை அவருக்குப் புலப்படவில்லை போலும்!

"நல்ல செயலில் இருந்த பிரபு ஒருவர் ஏதோ விதியின் கொடுமையால் ரொம்பவும் தரித்திரத்துக்கு உள்ளாகி விடுகிறார். இந்தத் தரித்திர நிலைமையை அவர் போய் வள்ளல் குமணனிடம் சொல்லுவதாக பாவம்" என்பது அவர்கள் கூறும் சந்தர்ப்பம். யாசிப்பவர் பிரபுவாக இருந்தவர் என்பதைக் காட்டுவது 'ஆடெரி படர்ந்த கோடுயர் அடுப்பில் ஆம்பி பூப்ப' என்னும் சொற்றொடர் என்பது அவர்கள் செய்யும் வியாக்கி

யானம். இவ்வாறு நாம் சந்தர்ப்பத்தை அமைத்துக் கொண்டால், தன் செல்வத்தை இழந்த வருத்தமும் இச்செய்யுளிலே அசங்கதமாக வந்து கலந்துகொள்கிறது. கூத்தன் என்று கொண்டால் அவன் படு துயரிலே இவ்வாறு வேறு விஷயமொன்றும் கலக்கவில்லை.

'ஆடு நனிமறந்த அடுப்பு' என்கிறார் புறநானூற்றுப் புலவர். 'ஆடு' என்றால் 'அடுதல்' (சமைத்தல்). சமைத்தலை மிகவும் மறந்த அடுப்பு. சமையலே யில்லாததால் சாதாரண அடுப்பாக இருப்பினும், அது பிரம்மாண்டமான தாகத் தோற்றுகிறது அதனைக் காண்போர் கண்களுக்கு. "அடுப்பைப் பார்த்தாயா, சமைக்க ஒரு பிடி அரிசி இல்லை; இவ்வளவு பெரிய அடுப்பு எதற்கு?" என்று தோன்றுகிறது. சமைத்தாலன்றோ அடுப்பு தேய்ந்திருக்கும்? கொம்மை தேயாதிருப்பதால், வெறும் அடுப்பை அது உயர்த்திக் காட்டுகிறது. இப்படி யெல்லாம் மனதிலே எண்ணங்களை எழுவிப்பதற்கே 'கோடுயர்' அடுப்பு என்று பழைய புலவர் குறிப்பிடுகிறார்.

கூத்தன் துயரத்திலே, தான் முன்பு கோட்டை யடுப்புக் கட்டி விருந்திட்ட நினைவு கலக்கவில்லை. தன் வீட்டு அடுப்பங்கரையிலே சமையல் நடவாததால் அடுப்பிற் காளான் பூக்கவும், பசி வாட்டவும், அழுகின்ற குழந்தையின் முகத்தைக் கண்டு ஏங்கும் மனைவியின் துன்பத்தை மாற்றவும் பரிகாரந் தேடியே கூத்தன் குமணனிடம் வந்தான். குமணன் நிலை மிகவும் பரிதாபமானதுதான்; 'அதினும் மிக்க பரிதாபம் விளைப்பது அவனை நாடி வந்த கூத்தன் நிலை' என்று அக் கூத்தனே கூறுவதிலுள்ள நன்கமைந்த அவலச் சுவை யெங்கே? சொன்னயங் கருதிச் சாதுரியமாகச் சொல்லும் சொல் எங்கே?

---

மாக்ஸ் ஸ்டேயர் என்பவர் நியூயார்க்கில் ஒரு பிரபல வக்கீல். அநேக பிரசித்தமான வழக்குகளி லெல்லாம் அவர் ஆஜராகி யிருக்கிறார்.

ஒரு வழக்கில் எதிரி தரப்பில் தாம் ஆஜரானபோது, ஜூரர்களில் ஒருவரை நோக்கி, "என் கட்சிக்காரனைப் பார்த்தால், உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? குற்றம் செய்திருப்பான் என்றா, நிரபராதியாய்த்தான் இருப்பான் என்றா?" என்று கேட்டார்.

ஜூரர்: "குற்றம் செய்திருப்பான் என்றுதான் தோன்றுகிறது."

மாக்ஸ்: "ஏன்?"

ஜூரர்: "இல்லையானால், உம்மை ஏன் அமர்த்திக் கொள்ளுகிறான்?"

---

# வானவில்

('ஒளிவைரம்')

(1)

எத்தனை யெத்தனை வர்ணமம்மா—மனம்
இங்கங்கு செல்லாது நிற்குதம்மா!
இத்தனை வர்ணத்தை ஏற்றியே—வானில்
இந்திர வில்லை யார் வைத்ததுவோ?

(2)

பூமிக்கும் வானுக்கும் பாலமிட்ட—ஒரு
பூமாலை போலவுந் தோணுதம்மா!
கோமள மானஇவ் வானவில்லின்—வண்ணக்
கோலத்தின் ஜாலத்தை என்ன வென்பேன்!

(3)

ஆதித்தன் நேரெதி ராய்த்தோன்றி—இன்ப
வானந்தம் யாவையு மூட்டுதம்மா!
சோதிச் சுடரின் சக்தியதை—இங்கே
சொல்லி முடியுமோ நம்மாலே!

---

## வீரன் யார்—கோழை யார்?

கார்டினல் ரிச்லூ என்ற பிரபல வீரர், மனிதர்களின் குணங்களை யறிய ஒரு ஆச்சர்யமான முறையைக் கையாண்டார்.

அவருடைய வீட்டுக் கூடத்தில் ஒரு புறத்தில், அடிதடி போர் முதலிய பலாத்காரங்களைத் தீட்டிய சித்திரங்களைத் தொங்க விட்டார். மறுபுறத்தில் அன்புள்ள குடும்பம், இயற்கைக் காட்சி முதலிய அமைதி கமழும் சித்திரங்களைத் தொங்க விட்டார்.

உள்ளே தம்மைக் காண வரும் மனிதன், பலாத்காரப் படங்களின் அருகே சென்று வியந்து நின்றானே, "இவன் வெறுங் கோழை" என்று ரிச்லூ தீர்மானிப்பார். அமைதியான படங்களைக் கண்டு வியந்து நின்றால்தான், "இவன் நல்ல வீரன்" என்று மதித்து, அவனுக்கு ராணுவத்திலே உயர்ந்த பதவிகளை யெல்லாம் அவர் அளிப்பார்.

---

நான் எங்கே போனால் என்ன? எங்கிருந்தால் என்ன? என் உள்ளத்திலிருக்கும் தெய்வம் என்னை விட்டு நீங்காது. அந்தத் துணையைக் கொண்டு என் தருமத்தின்படி நான் நடந்து கொண்டேனானால், என் உள்ளத்தில் சாந்த சித்தம் நிலைக்கும். இவ்வாறிருக்க, ஏதேனும் ஒரு விபத்து நேர்ந்தவுடனே உள்ளம் கலங்கி, இயற்கை மாறி, நடுநடுங்கி, அலைந்து, பயந்து, ஏங்கிக் கையை நீட்டுவது தகைமை யாகுமா? மன நிலையைக் காப்பதற்கு மேல் எந்தப் பொருள் உளது?

—ஞானி மார்க்கஸ் ஔரீலியஸ்.

---

# மதத்தின் கொடைகள்

(தி. ஜ. ர.)

'அறிவுத் தெளிவு' என்ற சொற்களின் பெயரால் மதத்தின் மீது போர் தொடுப்பவரிடம், நாம் எதைப்பற்றிப் பேசுவது? 'கடவுளாம் கடவுள்!' என்று நகைப்பவரிடம் நாம் என்ன கூறுவது? கடவுளுக்கு, நொய்ய மனிதர்களாகிய நாம் பரிந்து பேச வேண்டிய தேவை யில்லை. ஆனால், சமயம் என்ற பொக்கிஷத்தை மனிதன் இழக்கலாகாது என்று பரிந்து பேசினால், அது அவமான மல்ல. நாம் பரிவது கடவுளுக்காக அல்ல; மனிதருக்காகவே.

மதம் என்ன செய்தது? மதம் தீங்கிழைத்தது என்கிறார்கள். மதம் என்ன தீங்கைப் புரிந்துவிட்டது? மத பக்தர்க ளென்போர் பலர் எந்த அற்ப விஷயங்களை மதமென மயங்கி யிருக்கிறார்களோ அந்த அற்ப விஷயங்களையே மதமெனக் கொண்டு, மதத்தை எதிர்த்துப் போர் தொடுப்போரும் மருள்கிறார்கள். மதத்தின் பெயரால் நடப்பவை யாவும் ஆதரிக்கத் தக்கவை யென்று கூறமுடியாது. ஆனால், வாழ்வுக்கு ஓர் ஊன்றுகோலா யிருக்கத்தக்க நுண் பொருள்களும் மதத்திலே இருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

மதம் மோசங்களைச் செய்வதாக, மதத்தை வெறுப்போர் கூறுகிறார்கள். 'அறிவுத் தெளிவு' என்ற வார்த்தைகளை ஜபித்து, மதம் அறிவுத் தெளிவுக்கு முரணானது என்கிறார்கள். மதத்தைப்பற்றி அடுக்கப்படும் குறைகளும் குற்றங்களும் ஏராளம். 'மதம் நமக்கு என்னத்தைக் கற்றுக் கொடுத்திருக்கிறது? அறியாமைக்கு நம்மை அது ஆட்படுத்தி யிருக்கிறது. அதை எதிர்த்து நமது சுண்டு விரலைக்கூட நாம் தூக்கக் கூடாதாம்! செயல் செய்ய வொட்டாமல், அது நமது மூளையை அடக்கிவிட்டது; சிந்தனையைச் சக்தி யற்றதாகச் செய்துவிட்டது; பதில் சொல்லாமல், பரமான்மா வொன்றில் நம்பிக்கை வைக்கச் சொல்லுகிறது' என்று ஒருவர் சொல்லுகிறார்.

மதம் அறிவுத் தெளிவுக்கு உற்றதல்ல என்ற எண்ணத்தினின்றுமே, இத்தகைய கருத்துக்கள் தோன்றுகின்றன. அறிவாராய்ச்சி என்பதை நாம் எப்படிக் கொள்ளுகிறோம்? அறிவுத் தெளிவுக்காரர்கள் 'ஸயின்'ஸைக் கொண்டாடுகிறார்கள். 'ஸயின்ஸு'கள் யாவும், பரிபூரணமானவையா? எந்த 'ஸயின்ஸு'க்கு எல்லையில்லை? காரண காரிய ஆராய்ச்சி, ஓரளவுக்கு முன்னும் ஓர் வரம்புக்குப் பின்னும் செல்லாமல், எந்த 'ஸயின்ஸு' தான் முட்டுக்கட்டை போட்டு நிற்கவில்லை? உத்தேச சித்தாந்தங்கள் எதில் இல்லை? கற்பனை நிர்ணயங்கள் எதில் இல்லை? காரண காரிய ஆராய்ச்சிக்கு எந்த இடத்திலும் ஒரு எல்லை யிருக்கிறது. காரண காரிய ஆராய்ச்சி தனது பிரயாணத்தை ஓர் சிறு புள்ளியிலிருந்து தொடங்குகிறது. முன்னேயும் பின்னேயும் பல கோடி மைல் கற்கள் நிற்கின்றன. அவற்றுக்கு ஆதியும் அந்தமும் கண்டு பிடித்து விட்டதாகச் சொல்லிக் கொள்ளக் கூடிய அகங்காரி 'ஸயின்ஸு' உலகத்தில் இல்லை 'கண்டு பிடித்தேன்' என்று பெருமூச்சு விட்டு 'இனி வேலையில்லை' என்போருக்கு, 'ஸயின்ஸு' உலகில் வேலை உண்டா?

ஒரு பொருளில், மதத்தையும் ஓர் அகண்ட 'ஸயின்ஸு' என்று கூறலாம். மதம் என்றதும், எந்தக் குறுகிய பொருளிலும் அதை எண்ணி மயங்கலாகாது. அகண்ட தத்துவத்தை - வாழ்வின் மூலாதார உண்மையை - விளக்கம் செய்யத் தோன்றிய பெருமுயற்சிகள், மதங்களிலே காணப்படுகின்றன. அந்த முயற்சிகளையே-வேதாந்தத்தையே-மதமென நாம் கருத வேண்டும். உண்மை மதம் வேதாந்தத்தையே சார்ந்திருக்கிறது. அதனால் தான், கடவுளைப்பற்றியே கவலை கொள்ளாத தென்று சொல்லப்படும் பௌத்தத்தையும் கூட நாம் மதம் என்கிறோம்.

மதத்தை ஒழித்துவிட வேண்டுமென்று பேசுவோர் கூறுங் காரணங்கள்தான் என்ன? மதத்தின் பெயரால், அக்கிரமங்கள் நடக்கின்றன என்று அவர்கள் கூறுகிறார்கள். எதன் பெயரால் தான் அக்கிரமங்கள் நடக்கவில்லை? காந்தியின் பெயரால், பிழைகள் நடக்கவில்லையா? கதரின் பெயரால் தவறுகள் நடக்கவில்லையா? அறிவுத் தெளிவுக்காரர் கடவுளுக்குப் பதிலாகக் கொண்டாடும் 'ஸயன்ஸு'களின் விளைவுகளால் மனித வர்க்கத்துக்குத் தீங்குகள் நேரிடவில்லையா? மனித வர்க்கத்தினிடம், சமுதாய வாழ்விலே, முளைத்திருக்கும் சிக்கல்களை—தொல்லைகளை—ஸ்தாபனங்களின்மீது சுமத்துதல் அறிவுடைமையாகாது. சிறிதேனும் நல்ல பலனைக் காணும் எந்த ஸ்தாபனத்தையும் மனிதரது பொது வாழ்வுக்கும் தனிவாழ்வுக்கும் பயன்படுத்திக் கொள்ளுவதுதான் புத்திசாலித்தனமாகும்.

மதம் சாதிப்பதென்ன, சாதித்ததென்ன என்று கேட்கலாம். மதம் நமக்குப் பல கொடைகளைப் புரிந்திருக்கிறது. மதம், மனித வாழ்வின் உட்பொருளை விளக்க, மாண்பு மிக்க முயற்சிகளைத் தோற்றி யிருக்கிறது. மனித வாழ்வு வெறும் மாயையா? மனிதனுக்கு உண்மை யுண்டா? மரணமே அவனது முடிவான அதிகாரியா? அரூபமான அழியாத்தன்மை யொன்று அவனிடம் உண்டா? அவன் அற்ப ஜீவனா? அவனிடம் அளவிறந்த சக்தியுண்டா? அவனுக்கு அப்பாற்பட்ட தொரு மகா சக்தியும் உண்டோ? காணும் பொருள்களுக்கும் அதில் உருவத்துடன் தோன்றி மறையும் ஜீவர்களுக்கும்—முக்கியமாக மனிதருக்கும்—என்ன தொடர்பு? இந்த மகத்தான கேள்விகளுக்குப் பதில் அளிக்க எழுந்த முயற்சிகள்தான் மதங்கள்.

இந்த முயற்சிகளில் தாழ்வும் உண்டோ? ‘உண்பதும் உறங்கு’வதுமே பெரிதென் போருக்கு, எந்த முயற்சியைப் பற்றியும் கவலை யிருக்க வேண்டிய தில்லை. வாழ்வின் தத்துவத்தை அறிய எழுந்த முயற்சிகளை எள்ளியெறிவதிலே பெருமை யில்லை.

மதம், அருமையான இலக்கியங்களை நமக்கு நல்கி யிருக்கிறது. உயர்ந்த கற்பனையைத் தாண்டிவிட, மதம் ஓர் பெரும் ஊற்ருக இருக்கிறது. மதம், அற வாழ்வுக்கு உதவி புரிந்திருக்கிறது. மதம் எத்தனையோ மகான்களையும் வீரர்களையும் தியாகிகளையும் உற்பத்தி செய்திருக்கிறது. மனிதர்களது சட்டங்களால்ஆகாத காரியங்களை மதம் புரிந்துவருகிறது. அகண்ட சக்தியொன்று, மனித வாழ்விலே அறத்தைப் பாதுகாக்கக் கவலை கொண்டுள்ளது என்ற நம்பிக்கை, அரசாங்கத்தின் எத்தனையோ சட்டங்களைவிட மேலான பலனை அளிக்கும் என்பதைச் சொல்லவாவேண்டும்?

மரணம் என்னைப் பூச்சியமாகச் செய்து விடப்போகிறது என்ற அற்ப பயம் தோன்றக்கூடிய மனிதனுக்குச் சாந்தி யுண்டா? அவ்வாறு, தான் பூச்சிய மாகி விடக்கூடிய நிலை யொன்றைக் கற்பனை செய்து கொள்ளுவதுதான், சிந்தனையும் மனோ தர்மமும் நிறைந்த ஒரு மனிதனுக்கு எளிதில் இயலுவதா? ‘அறிவுத் தெளிவு, ஸயின்ஸு’ என்று உருப்போடுவோர், ஆராய்ச்சி அறிவு நிறைந்த ஸயின்ஸு அறிஞர் பலரும் மதத்தில் நம்பிக்கை வைத்திருக்கிருர்கள் என்பதை அறிவார்களா? தங்கள் சக்தியை மீறிய, தங்கள் சக்திக்கு எட்டாத, அணுக அணுக எட்டிச் சென்று கொண்டே யிருக்கும் ஓர் அகண்ட சக்தி, அவர்களது உள்ளக்கண்ணுக்குப் புலப்படுவதுதான் அதன் காரணம். ஸயின்ஸைப் பற்றி அதிகம்அறியாதவர்களுக்கு அதில் பிரமை தட்டுகிறது. ஆனல், ‘ஸயின்ஸ்’ பண்டிதர்களுக்கோ, அதற்கும் அப்பாலுள்ள ஓர் ஒளி அதிசய அற்புதக் காட்சி நல்குகிறது. மதம்! அது கடவுள் அருளியதோ, மனிதன் கண்டதோ—எவ்வாருயினும் ஆகுக; மனித வர்க்கத்துக்கு அது ஓர் செல்வம். எனவே, நமது தேவை மதத்தை அழித்து விடும் முயற்சியல்ல. மதம் புனிதமடைய வேண்டும்; அதுவே நமது தேவை. சுதந்திரம் கிடையாது மதத்தில் என்பது தவறு. ஒவ்வொரு மத சித்தாந்திகளும் வாழ்வின் பிரச்னையை - மர்மத்தை - அறிய, எவ்வளவோ சுதந்திரத்துடன் முயன்றிருக்கிருர்களே! நமக்கு மாத்திரம் அது ஏன் பந்தமாக வேண்டும்?

---

வர்ணனை :

# இதுவும் ஒரு ஜந்து

‘மு’

எனது இரண்டாவது நண்பனைப் பாருங்கள்: அவன் சிந்தனை தேக்கிய நெற்றியுடன் ஊர்ந்து வரும்போது, உதிர்ந்த மேகத்திரை போல் தெரிகிறது; கவலை படிந்த முகத்தை, தான் புகைக்கும் சுருட்டினின்று மண்டி வளரும் புகைப் படலத்தில் உடனே புதைத்து விடுவான்; நீண்ட சுருட்டை அனுபவிக்கும்போது, அவனுடைய வதனம் சுருட்டைக் கவ்விய வாயுடன் ஆங்கில நெடுங்கணக்கிலொரு எழுத்தான ‘Q’ (க்யூ) வடிவம் பெற்று மிளிரும்.

செவந்த இரண்டு கண்களும், குண்டுமணிச் சோடிபோல் குந்து போடும்; மீசை, புகைக்குன்றை எட்டிப்பிடிக்க முயலும்; பற்கள், சில சமயங்களில் பலவர்ணக் கற்களைத் தொடுத்த கோவை போலவும், மாசுபடிந்த கறையான் கூட்டம் கறங்கி உறங்குவதுபோலவும் தோன்றும்.

போத்தான் வாங்கவேண்டுமென்ற கவலையே அவனுக்குக் கிடையாது; திறந்த சட்டையே சொர்க்கமென்றும் பூட்டிய சட்டை விலங்கென்றும், நிர்வாணமே உண்மைக் கவசமென்றும் ஆடைகள் அபாயவலை யென்றும் எண்ணுவான். வெறுங்காலால் நடந்து பூமியின் மண்சத்தை ருசித்தும், சூரியனைக்கண்ணுற் பருகியும், காற்றிற் குளித்தும் அலைவான்; மூன்று பைசாவுக்கு ஒன்பது மிட்டாய்கள் வாங்கி, தான் ஒன்றை எடுத்துக்கொண்டு, வீதிக் குழந்தைகளை அழைத்து மீதி மிட்டாய்களை அன்புடன் கொடுத்து, அக் குழந்தைகள் குதிக்கும்போது தானும் சேர்ந்து நடிப்பான்; இதுவே அவனுக்கு நித்தியானந்தம்.

பிள்ளைகளுக்குப் படம் எழுதிக் கொடுப்பான்; பாடம் சொல்லிக் கொடுப்பான்; தனித்தமிழ் பேசுவான்; தேவையானபோது ஹிந்தியும் கதைப்பான். பிள்ளைகளின் பெற்ருேர்கள் - ஏழைப் பெற்ருேர்கள் - அன்புடன் இவனை அழைத்து உணவளிக்கும்போது, சந்தோஷக் கண்ணீர் சொரிவான்.

இயற்கையினின்று அழகையும் சாந்தியையும் பருகி, கவிதைக் கனி சமைப்பான்; பாடிப்பாடி வறுமையின் கொடுமையை மாற்றிக் கொள்ளுவான்; கஞ்சாவிற் கவிதை காண்பான்; உள்ளம் உயர்ந்து விண்ணை வெட்டிச் சாறு பிழியும்; சொற்பூக்கள் சந்திரிகையைப் படம் பிடித்துஅமைதியாய்ச் சித்தரிக்கும்; பாடும்போது கண்கள் தீவிழிக்கும் சிங்கம்போல் சுடர்தீட்டும்; பாடி முடிந்ததும், பசித்தீயில் கண்மூடிச் சமாதிநிலையடைவான்.

அவன் எழுதும் தங்கப்பாசுரங்களை விலைக்கு வாங்க ஆளில்லை; எல்லாம் கண்மூடிய கருணையற்ற சந்தைக்கூட்டம்! தன்னைப்போல் இளைத்த ஒரு மரத்தின் வற்றிய கிளையில் உறங்கி விழிப்பான். அவனுக்கு இவ்வுலகில் ஒரு ஆந்தையே மரணக் குறியை எச்சரிக்கை செய்து வந்தது. மனம் சிதறி, உடல் சிதறி, உயிர் சிதறி, கவிதை சிதறி, ஒருநாள் நள்ளிரவில் மறைந்தது அவ்வறுமையின் உருவம்!

---

வேதாந்த விசாரணை :

# பிரார்த்தனையே சக்தி

## (டாக்டர் அலெக்ஸிஸ் காரெல்)

[டாக்டர் அலெக்ஸிஸ் உலகப் பிரசித்தமான வைத்திய நிபுணர். அமெரிக்க ராக்பெல்லர் இன்ஸ்டிட்யூட்டில் 33 வருஷ காலம் அதியற்புதமாய் உயிர்நூல் ஆராய்ச்சி புரிந்து, 1939-ஆம் வருஷந்தான் விலகினார். எத்தனையோ கௌரவப் பட்டங்களெல்லாம் வாங்கியவர். பிளவை ஆராய்ச்சிக்காக நார்டப்-ஜங் பதக்கமும், சேதமான இரத்தக் குழாய்களைத் தைக்கும் முறையைக் கண்டுபிடித்ததற்காக நோபல் பரிசும் பெற்றவர். வாழ்க்கையின் பல அதிசயங்களை ஸயின்ஸினால் விளக்கமுடியாது என்று அவர் கண்டார். வைத்தியத்தினால் ஆகாமல், அற்புதத்தினால் பல நோய்கள் குணமடைவதை அவர் அறிவார். அம்மாதிரி நிகழ்ந்த அநேக அற்புதங்களை அவர் ஆராய்ந்து வந்திருக்கிறார். ஒரு பிளவை இப்படி அற்புதமாய் வாடி வதங்கி இருந்த சோடே தெரியாமல் அடியோடு மறைந்ததோர் அதிசயத்தை அவர் நேரே கண்டிருக்கிறார்.]

பிரார்த்தனையானது கடவுளுக்குச் செலுத்தும் வணக்கம் மட்டிலுமல்ல; வணங்கும் மனித ஆன்மா பொங்கி எழும் எழுச்சியுமாகும் அது. ஒரு மனிதன் சிருஷ்டிக்கக் கூடிய மிகப் பெரும் சக்தி அதனால் பிறக்கிறது. உதிரம் சுரந்து உற்சாக மூட்ட உடலுக்குள்ளே அமைந்திருக்கும் சில உறுப்புகளைப் போன்றே, மனித உடலுக்கும் மனத்துக்கும் உற்சாக மூட்டுகிறது பிரார்த்தனை. பிரார்த்தனையின் பலனாய், தேகம் பூரிப்படைகிறது; அறிவு தீட்சண்ய முறுகிறது; ஒழுக்கத் துணிவு ஏற்படுகிறது; மனித உறவுகளுக்குப் பின்னே மறைந்து கிடக்கும் உண்மைகளைத் தெளிந்து கொள்ளும் ஆழ்ந்த ஞானம் உண்டாகிறது.

மனப் பூர்வமாய் நீங்கள் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தால், உங்கள் வாழ்க்கை மிகத் தெளிவாய், மிக ஆழ்ந்து மாறுதலடைந்து விடும்; நமது செயல்களிலும் நடத்தையிலும் பிரார்த்தனையின் அழிக்க முடியாத முத்திரை தானாகவே பதிந்து விடும். பிரார்த்தனையால் ஆன்மவளம் பெற்றோர்களின் நடத்தையிலே ஒரு அமைதியும், முகத்திலும் உடலிலும் ஒரு கம்பீரமும் உண்டாகின்றன. அவர்களது உள்ளத்தினுள்ளே ஓர் ஜ்வாலை எழுகிறது. பிரார்த்தனையினாலே மனிதன் தன்னைத்தானே அறிந்து கொள்கிறான்; தனது சுயநலம், அசட்டு அகங்காரம், அச்சங்கள், பேராசைகள், தவறுகள் ஆகியவற்றை யெல்லாம் அவன் கண்டு கொள்கிறான்; கடமையிலே பற்றுதலும், அறிவிலே பணிவும் அவனுக்கு உண்டாகின்றன. தெய்விக அருட்பிரகாசத்தை நோக்கி, ஆன்மாவின் யாத்திரை இவ்வாறு ஆரம்பமாகி விடுகிறது.

பூமியின் ஆகர்ஷண சக்தி எவ்வளவு உண்மையானதோ அவ்வளவு உண்மையான தாகும் பிரார்த்தனையின் சக்தியும். நான் ஒரு வைத்தியன். பல நோயாளிகளிடம் நமது சகல வைத்தியமும் பலிக்காமல் போனபிறகு, அமைதியான பிரார்த்தனையின் சக்தியால் அவர்கள் நோயும் துயரமும் தீர்ந்து எழுந்ததை நான் கண்டிருக்கிறேன். ‘இயற்கைவிதிகள்’ என்று சொல்லப்படுகின்றனவே அந்த விதிகளை யெல்லாம் ஜயித்துவிட உலகிலுள்ள ஒரே சக்தி பிரார்த்தனை தான். பிரார்த்தனையானது நாடக நிகழ்ச்சிபோல் ஆச்சர்யமாய்த் திடீரென்று அக்காரியத்தைப் புரிந்த சந்தர்ப்பங்களையே ‘அற்புதங்கள்’ என்கிறோம். ஆனால், தங்கள் நித்திய வாழ்வுக்கு ஓயாமல் போஷணை யளிக்கத் தக்கது பிரார்த்தனையே என்று கண்டு கொண்ட ஸ்திரீ புருஷர்களின் இதயத்திலே இடைவிடாது அமைதியாய் நாழிக்குநாழி நிகழ்ந்து வருகிறது மற்றோர் அற்புதம்.

பிரார்த்தனை யென்பது சம்பிரதாயச் சடங்கான சில வார்த்தைகள் என்றோ, பலவீனர்கள் அடைக்கலம் புகும் சாதனம் என்றோ, லௌகிகப் பொருள்களை வரங்கேட்கும் விண்ணப்பம் என்றோ அநேக ஜனங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி நாம் எண்ணுவது பிரார்த்தனையின் மதிப்பைக் குறைத்துப் பேசுவதாகும். மழை என்பது தோட்டத்திலுள்ள மாட்டுத் தொட்டியை நிறைப்பதற்காகப் பெய்யுமொன்று என்று நாம் சொன்னால் எப்படியிருக்கும்? அது மாதிரிதான் இதுவும். பிரார்த்தனையை நாம் சரியாக விளங்கிக் கொண்டோமானால், அது மனுஷ்யனது புருஷாகாரம் பூர்ண வளர்ச்சி பெறுவதற்கு மிக அவசியமான பக்குவச் செயல் என்று காண்போம்; மனிதனின் மிக உன்னத உடல் மனச் சக்திகளை இணைத்து இசைக்கும் முடிவான சாதனம் என்று காண்போம். உடல், மனம், ஆவி இந்த மூன்றினதும் இசைகொண்ட பரிபூர்ண சம்மேளனத்தை, பிரார்த்தனை ஒன்றினால் மட்டிலுமே நாம் அடைகிறோம். அற்ப நாணல் தட்டைபோன்ற மனித தேகத்துக்கு அசைக்க முடியாத வலிமை, இதனால் உண்டாகிறது.

‘கேள்; நீ கேட்டது கிடைக்கும்’ என்ற வார்த்தைகளின் உண்மை, மனித அனுபவத்திலே நிரூபணமாகி யிருக்கிறது. இறந்த குழந்தையை உயிர்ப்பிக்கவோ தேக வேதனையை நீக்கவோ, பிரார்த்தனையால் முடியாமற் போகலாம். வாஸ்தவம். ஆனால், பிரார்த்தனையானது, ரேடியத்தைப் போல, சுயம்பிரகாசமாய்த் தனக்குத் தானே சக்தியைப் பொழியும் சக்திக்களஞ்சிய மாகும்.

இவ்வளவு சக்தி நிறைவுடன் நம்மை அது எப்படி அரண் செய்கிறது? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுவதானால், (இது ‘ஸயின்’ஸின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்டதாகும்) ஒரு விஷயத்தைத்தான் நான் குறிப்பிட வேண்டும்: அதாவது, சகல பிரார்த்தனைகளிலும் ஒரே ஒரு அம்சம் பொதுவா யிருக்கிறது. அது ஜயசீலர்களின் விஜய கோஷ கீதமா யிருந்தாலும் சரி, ஏழை வன வேடன் ஒருவன் தன் வேட்டையிலே தனக்கு அதிருஷ்டம் கிட்ட வேண்டுமென்று பணிந்து கெஞ்சும் விண்ணப்பமாயினும் சரி, ஒரே உண்மையைத்தான் நிரூபிக்கிறது: அதுயாதெனில், சர்வ சக்திகளுக்கும் மூலாதாரமான எல்லை யற்றதோர் சக்திக் களஞ்சியத்தை நோக்கிப் பிரார்த்தித்து, தங்களது எல்லைக்குட்பட்ட சக்தியைப் பெருக்கிக்கொள்ள மனிதர்கள் முயல்கிறார்கள் என்பதுதான் அந்த உண்மை. நாம் பிரார்த்திக்கும் போது என்ன செய்கிறோம்? இவ் வண்டங்களை யெல்லாம் சுழற்றிவரும் அள்ள அள்ளக் குறையாத மூல சக்தியோடு நம்மை நாமே ஒட்டிக்கொள்ளத்தான் செய்கிறோம்; அந்தச் சக்திக் களஞ்சியத்திலிருந்து, நமது தேவைகளுக்குக்

கொஞ்சம் வழங்கப்படவேண்டுமென்று வேண்டுகிறோம். அப்படிக் கேட்கையிலேயே, நமது மானிடக் குறைகள் தீர்ந்து பூர்த்தியாகி, வலிமையும் சீரும் பெற்றெழுகிறோம்.

ஆனால், நமது அற்ப மனோரதங்களையெல்லாம் பூர்த்தி செய்வதற்காகவென்றே கடவுளை நாம் அழைக்கலாகாது. வெறும் விண்ணப்பமாக அல்லாமல், ஆண்டவனைப்போலவே அதிகமதிகமாய் ஆகிவிடவேண்டுமென்ற சரணாகதி முறையில் பிரார்த்தனை புரியும்போது, நாம் பிரமாதமான சக்தியைப் பெறுகிறோம். ஈசுவர சாந்நித்தியத்தை அடைவதற்கான பயிற்சி என்றே பிரார்த்தனையை நாம் மதிக்க வேண்டும். கிராமத்து மாதா கோயிலில் கடைசிப் பெஞ்சியில் ஒரு கிழக் குடியானவன் தன்னந்தனியனாய் உட்கார்ந்திருந்தான். “நீ எதற்காகக் காத்திருக்கிறாய்?” என்று அவனைக் கேட்டேன். “நான் அவனைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்; அவன் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்” என்று அந்தக் குடியானவன் பதிலளித்தான். தன்னைக் கடவுள் நினைவுகூர வேண்டும் என்பதற்காக மட்டில் மனிதன் பிரார்த்தனை புரியவில்லை; தான் கடவுளை நினைவுகூர வேண்டும் என்பதற்காகவும் தான் பிரார்த்திக்கிறான்.

பிரார்த்தனையை எப்படி வர்ணிப்பது? கடவுளை எட்டிப் பிடிப்பதற்கு—கண்ணுக்குப் புலனாகாததொரு சக்தியும், சகல பொருள்களையும் சிருஷ்டித்த சிருஷ்டிகனும், பரம ஞான சொரூபியும், சத்யமும் அழகும் வலிமையும், ஒவ்வொரு மனிதனுக்கும் தந்தையும் ரட்சகனுமான அவனுடன் போகம் புரிய—மனிதன் செய்யும் முயற்சியே பிரார்த்தனை. பிரார்த்தனையின் இந்த லட்சியம் அறிவுக்குப் புலனாகாமல் எப்போதும் உள்ளுக்குள்ளே மறைந்து கிடக்கிறது. ஏனெனில், கடவுளை வர்ணிக்க நாம் முயலும்போது, நமது சொல்லும் கருத்துமே தோற்றுவிடுகின்றன.

என்றாலும், கடவுளை நாம் உருக்கமாய்ப் பிரார்த்திக்கும்போது, நமது ஆவியும் உடலுமே மாறி மேம்படுகின்றன. எந்த ஸ்திரீயாயினும் புருஷனாயினும் ஒரே ஒரு நிமிஷம் பிரார்த்தித்தாலும் போதும்; ஏதோ சொற்ப நற்பலனேனும் விளையாமற் போகாது. “பிரார்த்தனை புரியும் எந்த மனிதனும் ஏதேனுமோர் புதிய விஷயத்தைக் கற்கத் தவறான்” என்று எமெர்ஸன் கூறியிருக்கிறார்.

ஒரு மனிதன் எங்கே வேண்டுமானாலும் பிரார்த்தனை புரியலாம். தெருவிலோ, சாலையிலோ, கச்சேரியிலோ, கடையிலோ, கலாசாலையிலோ, அல்லது ஏகாந்தமான தன் அறையிலோ, அன்றிச் சகலரும் கூடிய கோயிலில் தானே எங்கேயும் பிரார்த்திக்கலாம். இம்மாதிரி நிலையில்தான் நிற்கவேண்டுமென்றோ, இந்த இடத்திலும் காலத்திலும்தான் புரியலாமென்றோ நியமம் எதுவும் கிடையாது.

“நீங்கள் எத்தனை தடவை மூச்சு விடுகிறீர்களோ அதை விட அதிகமாகக் கடவுளைப் பற்றி நினைவு கூருங்கள்” என்றார் நிஃகாம்யகர்மவாதியான எபிக்டெடஸ் என்ற வேதாந்தி. நமது புருஷாகாரம் உண்மையிலே உருவடைவதற்கு, பிரார்த்தனையை நாம் வழக்கமாய்க் கைக்கொண்டு விடவேண்டும். உண்மைப் பிரார்த்தனை, வாழ்க்கையை வாழுமோர் வழியாகும்; உண்மை வாழ்வோ, பிரார்த்தனையே யாகும்.

## விவாக விலக்கு விசித்திரங்கள்

மேல் நாட்டிலே நிகழும் பல விவாக விலக்கு வழக்குகள் நிரம்ப வேடிக்கையா யிருக்கும்.

தன் கணவனைப் பிடிக்கவில்லை யென்று ஒரு பெண் விவாக ரத்து மனுச்செய்துகொண்டாள். காரணம் அவன் இவளுடைய தலையைத் தண்ணீர்த் தொட்டிக்குள் முழுகும்படி அமுக்கி விட்டானும். ஆனால் அவனைக் கேட்டால், “ஆமாம், நான் என்ன செய்வது? அவள் சள சள என்று ஓயாமல் பேசிக்கொண்டே யிருந்தாள். நிறுத்தும் வகை தெரியவில்லை. அதனாலேயே அப்படிச் செய்தேன்” என்று சமாதானம் சொன்னான்!

மற்றோர் வழக்கிலே, கணவனுக்கு முட்டைக் கோஸ் தின்பதில் மிகுந்த பிரியமாம். ஆனால் மனைவிக்கு அது பிடிக்காதாம்; காரட்தான் பிடிக்குமாம். இதில் இருந்து இருவருக்கும் தினசரி போர். மனைவி எப்பொழுதும் காரட்டையே வாங்கி வந்துவிடுவாள். இதற்கு என்ன செய்யலாமென்று கணவன் ஆழ்ந்த யோசனைசெய்து, கடைசியாக அவளை ஒரு அறைக்குள் போட்டு அடைத்து, அவளுக்குக் காரட்டைத் தவிர வேறொன்றையுமே கொடுக்காமல் வாட்டினான். இதனால் கோபங்கொண்ட மனைவி அறையைவிட்டு வெளி வந்தவுடனே நேராகக் கோர்ட்டுக்குச் சென்று வழக்குத் தொடுத்து வெற்றியும் பெற்றுவிட்டாள்.

நீதிபதியிடம் ஒரு பெண், தன் கணவனைப்பற்றி, “இவர் இரவு படுக்கையறையில் 18 அல்லது 20 சிகரெட் குடித்து அறை முழுவதையும் புகை மயமாக ஆக்கிவிடுகிறார். புகை வெளியே செல்லுவதற்காக நான் ஜன்னல் கதவுகளைத் திறக்க முயன்றால், அதற்கு இடந் தராமல் தடுக்கிறார்” என்று சொல்லி, விவாக ரத்து வேண்டினாள்.

கணவன் கடைத் தெருவிலிருந்து, ‘தற்கொலை செய்துகொள்ள 291 வழிகள்’ என்ற புத்தகத்தை வாங்கி வந்துவிட்டானும். எங்கேனும் ஒருவேளை அந்தப் புத்தகத்தில் படித்தவற்றைச் செயலில் காட்டிவிட்டால் என்ன செய்வது என்று பயந்து இன்னொரு பெண் விவாக ரத்துக்கு விண்ணப்பித்துக் கொண்டாள்.

பின்லாந்துக் கோர்ட்டில் வந்த ஒரு விவாக ரத்து வழக்குத்தான் மிக விநோதம். புருஷனுக்கு வயது சுமார் 87 இருக்கும். மனைவி அவனைவிட 2 வயது மூத்தவள். நீதிபதி. “உங்களுக்கு எப்பொழுது கலியாணம் நடந்தது?” என்று கேட்டார். அதற்குக் கணவன், “1872-ஆம் வருஷம் செப்டம்பர்மீ 7ட” என்று பதில் உரைத்தான். “சரி, எப்பொழுது சச்சரவு ஆரம்பித்தது?” “1872-ஆம் வருஷம் செப்டம்பர்மீ 7ட” என்று பதில் சொன்னாள் மனைவி. உடனே வேறு பேச்சில்லாமல் விவாக ரத்துக்கு அனுமதித்துவிட்டார் நீதிபதி!

தன்னுடைய சகோதரியைத் தன் கணவன் முத்த மிட்டுவிட்டான் என்று கோபமூண்டு, விவாக ரத்தை விரும்பினாள் மற்றோர் பெண். ஆனால், அவனைக் கேட்டால், தன் மனைவிக்கும் அவளது சகோதரிக்கும் வித்தியாசமே தெரியாமலிருப்பதுதான் தனது குற்றத்துக்குக் காரணம் என்கிறான். மனைவி இந்தச் சமாதானத்தை நம்பவில்லை. நீதிபதியும் நம்பவில்லை.

# ஒரிஜினல் தியாகராஜா மெடல் ஜுவல்லரி ஒர்க்ஸ்

**183, சைனா பஜார் ரோட் (மைசூர் கேப் Meals Section பில்டிங் பக்கத்தில்)**

**சவரன் பொன்னுக்கு சமானமானதும் 3 வருஷம் நீடித்து உழைக்கக்கூடியதுமான**



எமது கம்பெனியின் நகைகள் நிறத்திலும் உழைப்பிலும் கொஞ்சமேனும் மாறாது. 10 வருஷ காலமாக பிரக்யாதி பெற்று விளங்கும் எமது ஒரிஜினல் தியாகராஜா மெடல் நகைகளை வாங்கி அணியுங்கள்! எப்போதும் ஷோ ரூமை கவனித்தோ அல்லது ஆர்டர் மூலமோ தருவித்துக் கொள்ளுங்கள். இப் பத்திரிகையைக் குறிப்பிட்டு எழுதுபவருக்கு ரூபாய்க்கு ஒரு அணா வீதம் கமிஷன் கழித்து அனுப்பப்படும். (கேட்லாக்கு இனாம்).

---

## டாக்டர். எஸ். கே. நீல்கர்

பல் வைத்தியர்

**1-174, பிராட்வே, மதராஸ்**

எல்லாவிதமான பல் வியாதிகளை நீக்கவும், பற்களை நோயில்லாமல் பிடுங்கவும், புதிய பற்களை அமைக்கவும், சுத்தப்படுத்தவும் சொத்தைப் பற்களை அடைக்கவும் பொன்னினால் பல்கட்டும் வகையரு வேலைகள் வெகு சரசமாகவும் திருப்திகரமாகவும் செய்யப்படும்.

---

சினிமா நட்சத்திரங்கள்
பாடியுள்ள எல்லா

## டாக்கி ரிகார்டுகளை

இன்றே கேட்டு ஆனந்த மடையுங்கள்

மாடர்ன் மியூசிகல் மார்ட்

**289, சைனா பஜார் ரோட், மதராஸ்.**

(கார்பொரேஷன் புரூட் மார்க்கட் எதிரில்)

---

Phone No. 4414

**For efficient Electrical Installation please refer to**

## KAUSEE BROTHERS

Electrical Engineers & Government Contractors

13, Thambu Chetty Street
G. T. MADRAS

---

**எப்போதும்**

## ஷண்முகம் பிராண்டையே வேண்டுமென்று கேளுங்கள்

ரெஜிஸ்டர்ட்

டிரேட் மார்க்



ஸ்டீல் பிரிமியர் காபின் ஸூட்கேஸ்



ஸ்டீல் ராயல் ஸூட்கேஸ்



நமது சிறந்த மேக்குகளைப் பரீட்சித்துப் பாருங்கள்

குணத்துக்கும் உறுதிக்கும் மேன்மைக்கும் நேர்த்தியான வேலைப்பாட்டுக்கும் முப்பது வருஷங்களுக்கு மேலாக இந்த டிரேட் மார்க் கீர்த்திபெற்றதாகும். குணத்தில் சிறந்த பொருள்களைப் புகழத் தேவையில்லை.

மானுபாக்சர் செய்வோர்:—

**ஸி. ஞானசுந்தர நாயகர்,**
341, எஸ்பிளனேட், சென்னை.

**ஆபீஸும் ஷோரூமும்**
1-14, பேக்கர் தெரு, சென்னை

லைன்

ஆப்டோன்

# பிளாக்குகள்

உங்களுக்குத் தேவையான எவ்விதமான பிளாக்குகளும் நவீன முறைகளில் துரித மாகவும் சகாயமாகவும் செய்து தரப்பெறும்.

★

விவரங்களுக்கு எழுதவும்

மானேஜர்,

**"ஸண்டே டைம்ஸ்" பிராஸஸ் ஸ்டூடியோ**

எர்ரபாலு செட்டித் தெரு :: சென்னை

Phone : 2678



## 'ஸிப்கோ' தயாரிப்புகள்

### "ரிட்"

உங்கள் வீட்டின சகல விதமான சாமான்களின் சுத்தத்தையும் பிரகாசத்தையும் காப்பாற்றுவதற்கு இன்றியமையாத ஊழியன். 1 பவுண்டு ½ பவுண்டு பாக்கட்டுகளில் கிடைக்கும்.

### "காந்தி"

சகல உலோகங்களையும் கண்ணாடி போல் பிரகாசிக்கச் செய்யும். இது ஒரு திரவ ரூபமான பாலீஷ்.

### "ஷைன் ஆல்"

எல்லா உலோகங்களுக்கும் கண்கள் கவர பாலீஷை தரக்கூடிய ஒரு பாலிஷிங் துணி.

### "ப்ரேமா"

இனிய பரிமளம் மிகுந்த டாய்லட் முக பவுடர்.

### பினைல் (ஸிப்கோ)

தொத்து வியாதிகள் பரவ காரணமான கிருமி, ஈ, கொசுக்களை அறவே ஒழித்து துர்நாற்றங்களை போக்கி சுகாதாரத்தை பாதுகாக்க, இன்றியமையாதது.

### "ஸ்டிக்ஸ்"

உடும்பைப்போல் காகிதங்களை ஒட்டும் பசை. அழகான பாட்டில்களில் கிடைக்கும்.

*Stockists Agents Wanted.*

எல்லாம் சுதேசியே !

**'ஸிப்கோ' தயாரிப்புகள் குணத்தில் மிகுந்தவை.**

தயாரிப்பவர்கள் :

**ஸவுத் இந்தியன் ப்ராடக்ஸ் லிமிடெட்**

**மயிலாப்பூர், மதராஸ்.**

# சிந்தனைத் தீபம்

மொழிபெயர்ப்பாளர்:
வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.

### கடவுளுக்குச் சிறை:

கடவுள் என்னுள் உறைகிறார்; அவரைச் சுற்றி நான் உயர்ந்ததோர் சுவரைத் தினந்தோறும் எழுப்பி வருகிறேன்; அந்தச் சுவர் வானத்தை முட்டி வளர வளர அதனுடைய இருண்ட நிழலில், எனது உள்ளத்திலுறையும் ஆண்டவனை மறக்க நேரிடுகிறது; இந்தச் சுவரே 'என்னுடையது' என்று கர்வங்கொண்டு, கடவுள் என்னுள் நிலைக்க ஒரு சிறு துவாரம்கூட விடாமல், அந்தச் சுவரை மணலாலும் தூசியாலும் அடைத்துப் பழுது பார்த்து வருகிறேன்; இந்தச் சுவர் வளர வளர, கடவுள் துக்க வெள்ளத்தில் மறைகிறார். அந்தோ! என்ன அறியாமை!

—ரவீந்திரநாத தாகூர்.

### காதல் லாகிரி:

அழகியே! உனது கூந்தற்புயல் இடி இடிக்கிறது; எனது ஆர்வக் கண்கள் அதன் சௌந்தரியத்தைப் பருகி மகிழ்ந்தன. உனது தந்தத் தோள்களை நான் தொட்டு நடுங்கினேன்; உனது கன்னத்தைத் தீண்டியதும் எனது மணிக்கட்டுகள் சிவந்தன. தரையில் கிடந்த எனது களிமண் கைகளைக் கண்டு, நீ அன்புடன் சிங்காரமாய்ப் புன்முறுவல் பூத்தாய். உனது மன மண்டபத்துக்கு, உன் கண்களே இரண்டு இருண்ட ஜன்னல்கள். நான் பட்சிபோல் உள்ளே பறந்து வந்து, உனது மன விந்தையின் ஆழத்தை நுகர்ந்தேன். இந்த உணர்ச்சிப் புயலில்,கடவுள் அருள் கூர்ந்து அருவிபோல் என் மனக் குகையில் வந்து நுழைந்து விட்டார். உன் மார்பின் விந்தை ஓங்கிச் சிலிர்க்கக் கண்டேன்; உனது பாத மலர்கள் வெளியே எட்டிப் பார்த்தன. உன் மார்புக் குன்றுகளினின்று முத்தம் பொறித்துத் தழுவி வெளியே நழுவி வரும் போது, மண்ணிலே நான் சாய்ந்து விட்டேன். உனது பற்கள் என்ன விஷப்பற்களோ? உன் உதடுகள் என் ரத்தம்போற் சிவந்து மின்னின?

—எ. பி. வாக்கர்.

### குழந்தை விளையாட்டு:

முடிவற்ற உலகங்களின் கடற்கரையில், குழந்தைகள் சந்திக்கின்றன. குழந்தைகள் குதித்து விளையாடி, மணல் வீடு கட்டி, காலிக் கூடுகளைப் பொம்மைகளாய் அணைகின்றன. முடிவற்ற விண்ணிலே அமைதி நிலவுகிறது; ஓய்வற்ற கடல் குமுறிக்கொண்டிருக்கிறது. இலைச் சருகுகளாலே குழந்தைகள் படகு கட்டி, ஆழ்ந்த கடலில் புன்முறுவலுடன் மிதக்கவிட்டு விளையாடுகின்றன. நீந்தத் தெரியாத குழந்தைகள்; வலை வீசத் தெரியாத வஞ்சனையற்ற குழந்தைகள்! முத்துக் குளிப்பவர்கள் முத்தெடுக்கிறார்கள்; வியாபாரிகள் கப்பலில் ஓடிப் பணம் தேடுகிறார்கள்; குழந்தைகளோ கூழாங் கற்களைச் சேர்த்துச் சேர்த்து, சிதற வடிக்கின்றன. அவைகள் புதைபொருள்களைத் தேடவுமில்லை, வலை வீச அறியவுமில்லை. கடல் சந்தோஷத்தினால் கர்ஜிக்கிறது; கடற்கரை வெளுத்து மின்னுகிறது; மரணகோஷ அலைகள், குழந்தைகளுக்கு அர்த்தமற்ற பாட்டுக்களைப் பாடுகின்றன; அலையின் பாட்டு, தாயின் தொட்டில் பாட்டுப் போன்றது. குழந்தைகளுடன் கடல் கொஞ்சி விளையாடுகிறது; கடற்கரை வெளுத்துச் சிரிக்கிறது. முடிவற்ற உலகங்களின் கடற்கரையில், குழந்தைகள் விளையாடுகின்றன. வழியற்ற விண்ணில், புயல் அலைகிறது; தடமற்ற கடலில் மரக்கலங்கள் மோதி முறிகின்றன; மரணம் எங்கும் வியாபித்திருக்க, குழந்தைகள் விளையாடுகின்றன. முடிவற்ற உலகங்களின் கடற்கரையில், குழந்தைகளின் பெரிய அதிசயச் சந்திப்பு நிகழ்கிறது.

—ரவீந்திரநாத தாகூர்.

### அழகி:

அழகு மண்டிய ஒரு மாது ஒரு உண்மைக் கவி; தன்னை நெருங்கி வருபவர்களுக்கு, அவள் அன்பும், நம்பிக்கையும், சொல்வன்மையும் ஊட்டுகிறாள்; அவளது காதல், இயற்கையின் இங்கித இணைப்பாகும். இயற்கையின் அழகு நிரம்பிய ஒரு பெண்ணோவியமாக அவள் காட்சியளிக்கிறாள். அவளுடைய அழகு மண்டிய பார்வையும் சொல்லும், நமது குரூரப் பார்வையையும் தீய குணத்தையும் மாற்றும் மந்திரமாய்ப் பொலிகின்றன. மாசுபடிந்த மனிதனின் மனம், அந்தப் பார்வையாலும் சொல்லாலும் உந்தப்பட்டு, தன் களங்கத்தை உடனே உதறி எறிகிறது; அவனுடைய உடைந்த உள்ளம் உருப்பெற்று உற்சாகமடைகிறது.

—எமர்சன்.

### கடவுள்:

கடவுளின் நிழலையும் சொல்லையும் மீறி, எவனும் தப்பித்துக்கொள்ள முடியாது. கடவுள் எங்கும் வியாபித்து, நம்முடைய சிறு செயலிலும் நம்மைப் பின்பற்றித் தொடர்ந்து வருகிறார். நாம் அம் மகா ஜோதியினின்றும் கிளைத்த சிறு சுடர்கள். கடவுளை மறுக்கவோ, மறக்கவோ நம்மால் இயலாது.

—ரவீந்திரநாத தாகூர்.

### சங்கீதம்:

சங்கீதம் என்பது இதய வீணை. அதனால் இதயம் பொங்கிப் பாடிச் சாந்தியடைகிறது; ஐம்புலன்களும் உணர்ச்சிப் புயலில் அமைதி நிறைந்து ஐக்கியமடைகின்றன. மௌன நிலையிலே, கீதம் ஒரு மலையருவியும் ஜோதி சொரியும் வானவில்லும் உண்மையை முழக்கும் ஒலி பரப்பும் சௌந்தரியச் சிற்பியுமாகும்.

—ஐவர் பானட்.

### நாத நடனம்:

நடனக் கலையைப்போல், சொற்கள் கீதம்பாடி ஓசை இன்பத்தை வளர்க்கின்றன; இதுவே நாத நடனம், ஓசை யோவியம்.

—ராபர்ட் பிரிட்ஜஸ்.

### தெய்வ ஸ்பர்சம்:

ஒரு குன்று தனது நீர் வீழ்ச்சியால் எட்டியுள்ள கடலைத் தொடுவது போல, நான் எனது கவிகளால் கடவுளைத் தொடுகிறேன்.

—ரவீந்திரநாத தாகூர்.

**ஓரங்க நாடகம் : (மொழிபெயர்ப்பு)**

# கனவு சிருஷ்டிகன்

## (ஆர். திருஞானசம்பந்தம்)



(சென்ற மாதத் தொடர்ச்சி)

முதலாளி : நானா?......நான், வயதானவன். அதோடு உங்களுக்கு அந்நியன்; சற்று முன் தான் பயரெட்டைத் தெரிந்து கொண்டேன்.

பயராட் : 'அணைந்த ஜ்வாலை' என்று சொல்லுங்கள்.

முதலாளி : ஆமாம், அணைந்த ஜ்வாலை தான்; ஆனால் நான் ஒருகாலத்தில் உலகத்தாரின் கண்களுக்குச் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் நட்சத்திரமாகத் தோன்றினேன். பின்பு மங்காமல் அப்படியே எத்தனை நாளைக்கு ஜோதி வடிவமாய் இருக்க முடியும்?

பயராட் : (கையில் கொஞ்சம் அளவுகாட்டி) இவ்வளவு நாளைக்குத் தான் முடியும்!

முதலாளி : உனக்கிருக்கும் இந்தக் 'கட்டமைந்த' தேகத்தைப் போல் நானும் உடல் இளமை பெற்றிருந்த நாட்கள் இப்போது எனக்கு ஞாபகத்துக்கு வருகின்றன.

பயரெட் : உனக்கிருக்கும் இந்தக் குறும்புத்தனம் எப்போதுமா இருக்கும், பயராட்?

முதலாளி : (சிரித்துக் கொண்டு அவள் புறம் திரும்பி) பயரெட், ஏதாவது சாப்பிடுவதற்குத் தயாராக இருக்கிறதா?

பயரெட் : இதோ ஒரு நிமிஷத்தில் சீக்கிரமாகக் கடைக்குப் போய் வந்து விடுகிறேன். வேகமாக ஓடவேண்டும். அடடா, இந்நேரம் கடைகளெல்லாம் சாத்தி விடுவார்களே! நான் வரும் வரை இங்கேயே இருக்கிறீர்களா?

(வெளியே செல்ல அடி எடுத்து வைக்கிறாள்).

முதலாளி : (வெளியில் போகிறவளைப் பார்த்து) நான் நிச்சயமாகச் சொல்ல மாட்டேன். இருப்பேன், இருக்கிறேன்.

(பயரெட் கடைக்குப் போகிறாள். அறை 'கம்' மென்றிருக்கிறது. முதலாளி பயராட்டை உற்று நோக்குகிறான்.)

முதலாளி : நல்லது நண்பனே, வியாபாரமெல்லாம் எப்படி? விமரிசையாக இருக்கிறதா?

பயராட் : விமரிசையா? இப்பொழுது நான் படும் 'சிரிப்பாணி' வியாபாரமானால், இதில்விமரிசை யிருக்கிறது; பணந்தான் இல்லை! நானும் எவ்வளவோ கஷ்டப்படுகிறேன். ஒரு கதை எழுதிப் பத்திரிகைக்கு அனுப்பியிருக்கிறேன். அதில் ஏதாவது கிடைத்தால் உண்டு. (பாடுகிறான்.)

எங்கள் குடிசை இருண்டிருக்கும்;
இன்றைக் கில்லை; பின்னொருநாள்
அங்கு வந்தால் காட்டுகிறேன்.
அழகிருந் தென்ன நாற்புறமும்?
குயிலும் வானும் கூதலுடன்
குழைந்தே இன்பம் சொரிந்தாலும்
ஒயிலுடன் உலகில் வாழ்வதற்கு
ஓரளவாம் 'பொருள்' வேண்டா
[மோ?

நான் எழுதி அனுப்பியிருக்கும் பாட்டு இது.

முதலாளி : என் பயராட், உலகிலுள்ள பணமெல்லாம் உன்னிடம் வந்தடைந்துவிட்டால், நீ சந்தோஷமாக இருக்கமாட்டாய்?

பயராட் : என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? எவ்வளவோ நல்ல விஷயங்களுக்காக அந்தப் பணத்தை உபயோகப் படுத்துவேன். பல பள்ளிக்கூடங்கள் கட்டுவேன். சகல மனிதர்களுக்கும் சிறந்த முறையில் கல்வி போதிக்க ஏற்பாடு செய்வேன்.

முதலாளி : இவ்வளவுதானா? சரிதான்! நீ பேரும் புகழும் பெற விரும்புகிறாய்; அதனால் வாழ்வின் சாரத்தை விட்டுவிட்டாய்! ஆகையால், சந்தோஷமாக இருப்பது எப்படி என்பது உனக்குத் தெரியவில்லை.

பயராட் : (சுபாவப்படி பாட ஆரம்பிக்கிறான்)

உன்னை நீயே அறியாமல்
ஓடுமிந்த உல கிருட்டில்
அன்பினாலே உனை யொருபெண்
அழைத்த குரலை நீகேட்டும்...

(விவரிக்கிறான்) இது நான் எழுத நினைத்த பாட்டின் முதல் இரண்டு அடிகள். இந்த மாதிரிதான் சட்டென்று ஏதாவது என் நினைவுக்கு வரும். இதற்கு மூன்றாவது அடி எழுதவேண்டும். அதுதான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்.

முதலாளி : எல்லையற்ற ஒருவனது வாழ்க்கைப் பிரயாணத்தை, முடிவற்ற ஒரு பாட்டாக நீ ஏன் எழுதக்கூடாது?

பயராட் : அதெல்லாம் ரொம்ப மோசமானது.

முதலாளி : இல்லை, அதுவும் வேண்டியதுதான். அப்படிப்பட்ட பாட்டுக்களைப் பாடும்போது பாடகனுக்கும் உற்சாகம் பிறக்கும்.

பயராட் : வேண்டுமானால் இரண்டொரு அடிகளைச் சேர்க்கிறேன்.

முதலாளி : சரி, நாமிருவரும் கூட்டாக ஏதாவது வியாபாரம் ஆரம்பிக்கலாமா?

பயராட் : புதிதாக என்ன செய்யப் போகிறோம்? எல்லோரையும் போல் தான்......உம், உங்களுக்கு எந்த மாதிரி நாற்காலிகள் விற்கப் பிடிக்கும்? அதிலும்தான், வர்ணம் பூசி அலங்கரித்தது அஞ்சு பவுன்; பின்னால் துணி போட்டுத் தைத்தது மூணு பவுன். ஆனால் கடைசியாகப் பார்க்கும்போது பவுன்களெல்லாம் ஒன்றுதானே!

முதலாளி : இங்கே, என்னைப் பாரப்பா, நான் யார் தெரியுமா?

பயராட் : அது தெரிந்து ஆக வேண்டியது என்ன? இங்கே வரும் எல்லோருக்குமே நாங்கள் நல்வரவு கூறுகிறோம். நீங்கள் வந்தது பற்றியும் சந்தோஷந்தான்.

முதலாளி : பயராட், நான் கனவின் சிருஷ்டி கர்த்தா!

பயராட் : என்ன, என்ன சொன்னீர்கள்?

முதலாளி : செல்லரித்துப்போன இந்த உலகில் நிகழும் கனவுகளின் ஆரம்ப ஆசிரியன் நான்!

பயராட் : உங்களை ரொம்பவும் பணிவாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்: கொஞ்ச நாளைக்கு நீங்கள் இங்கே தங்கியிருக்கவேண்டும்.

முதலாளி : ஆனால், பயராட், உன்னுடைய அழைப்பை நான் மறுதளிக்க வேண்டி யிருக்கிறது. என்னை நோக்கிப் பல திக்குகளிலிருந்தும் அன்புக் குரல் எழுகிறது. ஒரு சிறு குழந்தை, சாந்தியற்ற பூமியில் அமைதியை வேண்டித் தவிக்கும் ஒரு உள்ளம், இவைகளெல்லாம் ஆனந்தக் கனவை யடைய வேண்டி என்னை எதிர்பார்க்கின்றன. பயராட், இந்தக் கூவும் குயில்கள் எந்த விதமான மனித மனதை அடைய விரும்புகின்றன, தெரியுமா? அவைகளெல்லாம் வசந்தத்தில் என் ஆலையை நோக்கிப் பறந்துவந்து என்னிடம் சொல்லுகின்றன...

பயராட் : நான் இதை யெல்லாம் நம்புவேன் என்று நினைக்கிறீர்கள் ?

முதலாளி : (கவனியாதவர்போல்) மலர்கள் காலம் மாறிக் கீழே சாய்ந்து விழுகையில் அவைகளின் வர்ணங்களெல்லாம் எங்கே மறைகின்றன? அல்லது காற்றுக் காலங்களில் அங்கு மிங்கும் திரிந்துகொண்டிருந்த வண்ணாத்திப் பூச்சிகள்தான் எங்கேபோய் ஒளிக்கின்றன? ஆனால், என்னுடைய ஆலையில் அதிகக் காற்று அடிக்கிற வழக்கமில்லை.

பயராட் : இதைப் பற்றி நான் நினைத்துப் பார்த்தது கூடக் கிடையாது.

முதலாளி : என்னுடைய ஆலை சதா கஷ்டத்திலேயே காலம் தள்ளி வருகிறது. புறக்கணிக்கப்பட்ட அழகுகளுக்கு, உயிரும் ஒளியும், வனப்பும் வர்ணமும் தீட்டுவதிலேயே நான் என் நாட்களைச் செலவிட்டு விடுகிறேன். சதா என்னுடைய சொற்பனங்களின் சாயையைப் பற்றியே தியானித்துக் கொண்டிருக்கிறேன்; அது தான் 'காதலை'ப்பற்றி!

பயராட் : ஓ ஹோ! இப்போது நாம் எதைக் குறித்துப் பேசுகிறோம் என்றால்......

முதலாளி : சீக்கிரமாக எதற்கும் நீ முடிவுகட்டக் கூடாது.

பயராட் : ஆனால் ஒரு விதத்தில்... சரி......இப்போது காணப்படும் ஒரு உருவத்துக்கு உயிர் இருப்பதில்லை. உயிர் இருப்பதற்கு உருவம் இருப்பதில்லை. இதிலெல்லாம் உள்ளே, கனவை நுழைத்தல் என்பது நூதனமாகத்தான் இருக்கிறது! அது சாத்தியமானதா? என்னால் நம்பக்கூட முடியவில்லையே!

முதலாளி : அப்பனே, கண்ணுக்குப் புலப்படாத அநேக 'சூட்சுமங்'கள் இருக்கின்றன. நீ உனக்குள் கனவு காண ஆரம்பித்துவிட்டால், அடுத்த கணமே, வானில் ஜொலிக்கும் நட்சத்திரங்களின் நடுவே சென்று விளையாடத் தோன்றும். இன்னும் சந்திரனுக்குள்ளே போய்ப் பாடிக்கொண்டிருக்கலாமென்றிருக்கும். கொஞ்சம் கொஞ்சமாக நான் கனவைப் புகுத்தும்போதே இவ்வேலைகள் உன் மனதிலே உள்ளுக்குள் நடக்கத் தொடங்கிவிடும்.

பயராட் : பறவைகளும் சதா கனவு காண்கின்றனவா?

முதலாளி : எல்லாச் சமயங்களிலும் இல்லை.

பயராட் : நான் தினமும் என்னுடைய வாழ்க்கையைப் பற்றித்தான் கனவு காண்கிறேன். பிறத்தியாரைப் பற்றித் துளிகூட யோசிப்பதில்லை.

முதலாளி : அதுதான் கூடாது. உலகத்தைப் பற்றியும், மனிதரது ஆசாபாச வெற்றி தோல்விகளைப் பற்றியும், கனவு காணவேண்டும். என் உள்ளத்தில் காலையமைதி குடிகொண்டிருக்கும் நேரத்திலெல்லாம், முத்துப்போல் உதிரும் கண்ணீர்த் துளிகளின் வெகுமதிகளை எண்ணி மகிழ்வேன்.

பயராட் : (நகர்ந்து உட்கார்ந்து) கண்ணீர்த் துளிகளின் வெகுமதியை எண்ணி—அடடா! எவ்வளவு அழகாக இருக்கிறது! நானும் அப்படித்தான். சிதறிவிழும் நீர்த் துளிகள் என் மனதையும்தான் உருக்கி விடுகின்றன.

முதலாளி : சும்மா மனதை உருக விட்டுப் பிரயோஜன மில்லை. அந்தச் சோக இருதயத்தின் உள் நாடகங்களை நோக்கவேண்டும். நான் ரொம்ப வருஷங்களுக்கு முன் சின்னக் குழந்தை யொன்றின் மனதிலே தித்திக்கும் கனவுத் துளிகளை ஏற்றியது, உனக்குத் தெரியாது.

பயராட் : என்னிடம் இவைகளைச் சொல்வதால் ஒரு பிரயோசனமுமில்லை.

முதலாளி : நிறைய இருக்கிறது! ஒரு விதத்தில் உனக்கு அது பொருந்தும். அதே போல் ஒரு சமயத்தில் உன் மனதிலும் அந்த மாதிரியே ஒரு கனவைச் சிருஷ்டித்து விட்டேன்.

பயராட் : அதனால் எனக்கு ஏதாவது நன்மை உண்டா?

முதலாளி : ரொம்ப உண்டு. உன்னை நல்ல அதிர்ஷ்டக்காரனென்றே சொல்ல வேண்டும். அவளை நீ தேடி யடைந்து விட்டால்......

பயராட் : அந்தப் பெண் ஒல்லியாக, உயரமாக, நீண்ட கருங் கூந்.......

முதலாளி : இல்லை, இல்லை.

பயராட் : அப்படியானால் அவள் அல்லவா? இனி, அவளை நான் எங்கே தேடட்டும்?

முதலாளி : அந்த வேலை உன்னைச் சேர்ந்தது. உன்னுடைய முக்கிய காரியம், அவளைக் கண்டுபிடிக்க வேண்டியதுதான்.

பயராட் : சரி, நான் இப்போதே புறப்படுகிறேன். (போவதற்கு எழுகிறான்)

முதலாளி : இன்றைய இரவை இங்கேயே கழிக்க உத்தேசித்து விட்டேன்.

பயராட் : உம், சரி,........நான் சீக்கிரமாகப் போகவேண்டிய தில்லையல்லவா?

முதலாளி : இதைக் கேள், பயராட். ஒரு மனிதன் காளான் பிடுங்கவேண்டுமென்று நினைத்தான்.

பயராட் : என்ன, காளானா?

முதலாளி : ஆமாம். நடு இரவில் குடிசையிலிருந்து புறப்பட்டான். விடியும் வரை தேடினான். ஆனால், ஒன்றுமே அகப்படவில்லை. விடியற்காலையில் கால் ஓய்ந்து திரும்பி வருகையில், குடிசையோரம் காளான் புடைத்திருப்பதைக் கண்டு, சந்தோஷத்தோடு பிடுங்கிக் கொண்டு குடிசை சேர்ந்தான். இதெல்லாம் யார் கண்டார்கள்? இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பார்.

பயராட் : இதுவே உங்களுடைய உபதேசமானால், அதையும்தான் சொல்லி விடுங்களேன். நான் அவளை அடைவேனா, மாட்டேனா?

முதலாளி : அதை எப்படி நான் சொல்ல முடியும்? உன்னை நீயே ஒரு முட்டாள் என்று நினைத்துக் கொள்வாயா?

பயராட் : இல்லை, இவ்வளவு நிச்சயமாக நீங்கள் சொல்கிறீர்கள். அதனால் ......அதனால்.......அடையாளத்தையும் தெரியும்படி சொல்லி......நான் அவளை ......... (தயங்கி நிறுத்துகிறான்)

முதலாளி : (எதையோ யோசித்துக் கொண்டு) ஆம் ஆம்.

பயராட் : நானே சிரத்தை எடுத்துக் கொள்ளவேணும்......

முதலாளி : பின் யார் எடுத்துக் கொள்வார்கள்? சரி, உன்னுடைய

பாடலுக்கு மூன்ருவது அடியாக இதையும் சேர்த்துக்கொள் :

செவ்விதழாள் குரலுக்குச்
செவி சாய்க்க மறுத்து விட்டால்
கவ்வும் பின் னிருட்டினிலே
கண்ணீர் விட் டழவேண்டும்

(முதலாளியின் சன்னமான குரல் பயராட்டை ரொம்பப் பரவசப் படுத்திவிட்டது. வைத்த கண் வாங்காமல் அப்படியே பார்த்துக் கொண்டிருக்கிருன். வறண்ட இலைகள் மிதிபடும் ஓசை கேட்கிறது. பயரெட், கடையிலிருந்து வாங்கிவந்த சாமான்களுடன் கதவைத் திறக்கிருள்.)

பயரெட் : நீங்கள் இன்னும் இங்கிருப்பது பற்றி ரொம்ப சந்தோஷப் படுகிறேன்.

முதலாளி : நான் இப்போது போயாக வேண்டும். என் பிரயாணத்தைத் தொடங்கவேண்டும்.

பயரெட் : (வாசற்படியின் மத்தியில் நின்றுகொண்டிருக்கிருள்; ஆகையால் தன்னை அவர் தள்ளிக்கொண்டு போக முடியாது என்ற எண்ணத்துடன் விஷமமாகச் சொல்லுகிருள்.) உடனே புறப்படுங்கள்.

முதலாளி : என்னை, ஜன்னல் வழியாகவா பறந்து போகச் சொல்கிருய்? எதிர்பாராத சம்பவம் ஒன்றும் அப்படி நடக்கவில்லையே!

பயராட் : (மரியாதையாக, ஆனல் சிரித்துக்கொண்டு) இந்த விருந்தாளியை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள், பயரெட். இப்போது நீ யாருடன் பேசிக் கொண்டிருக்கிருய் என்பது உனக்குத் தெரியாது. ஜீவியத்தின் உயர்ந்த ஆதர்சங்களைக் கடைசல் பிடித்து, ரம்மியமான கனவுகளைத் தமக்குள்ளே இவர் அடக்கி வைத்துக் கொண்டிருக்கிருர்! நான் மானசீகமாகக் கற்பனை பண்ணிக் கொண்டிருந்தவனைக் கூட......(சட்டென நிறுத்தி) எங்கே பார்க்க வேண்டுமென்பது எனக்குத் தெரியும்.

முதலாளி : நான் போவதற்குள் இன்னும் ஒரு வரி சொல்லி விடுகிறேன் :

பெண்கள் பாடம் போதித்தால்
ஆண்கள் அறிவு பெற்றிடுவர்!

(வேகமாக எழுந்து வெளியே போகிருர்)

பயரெட் : (கதவருகே ஓடி நின்று பார்க்கிருள்) இவ்வளவு அவசரமாகப் போய்விட்டாரே! எப்படித்தான் மாயமாய் மறைந்தாரோ?

பயராட் : போனதைவிட்டு இருப்பதைப் பேசு. இங்கே பார், இன்று நாடகம் ரொம்ப விமரிசையாக நடக்கப் போகிறது. என்னுடைய சலவையான வெள்ளைக் கோட்டைப் போட்டுக் கொண்டு, கைத்தடியுடன் புறப்பட வேணும். பயரெட், ஒரு பெண்ணின் காதலை ஏற்க முடியாததால், நான் நிஜமாகவே வருத்தப்படுகிறேன்.

பயரேட் : அதை எண்ணி ஒன்றும் கவலைப் படவேண்டாம். நீ சுகமாக இருப்பதற்கு நான் எப்போதும் பிரார்த்தனை செய்வேன்.

பயராட் : (உருக்கமாகப் பாடுகிருன்)

கனவின் நதியக் ககனமலர்
காமசைத் தென்றும்அழைக்கவில்லை;
நினைவிலூறு மந் நீர்ப்பெருக்கில்
நீந்தித் திளைக்க நான் நடந்தேன்.
உன்னைப் போலொரு படகாக
ஓடி வந்தவள் அடைவனென்ருல்
வன்னப்பூவே வீழ்ந் தமிழ்வாய்;
வகையிலையென்றே சொல்லேனே?

பயரேட் : போகிறது, இன்றையிருந்து நாம் ஏராளமாகப் பொருள் சேர்ப்போம். அதை அவ்வளவும் அவனுக்கு நீ கொடு. என் ஜீவன் உள்ளவும் உங்கள் நல் வாழ்வுக்காகவே நான் பாடுபடுகிறேன். அதற்காக என் சக்தி முழுதும் செலவிடுகிறேன்.

பயராட் : நீ சொல்வது சரி. நான் இப்போதே இதை வசனத்தில் எழுதி வைக்கிறேன். பின்பு கவியாகக் கட்டுகிறேன்.

(பேனு காகிதங்கள் சகிதம் மேஜையருகே உட்காருகிருன். சாந்தமாக எழுதுகிருன்.)

“கடைசியாக இந்த நகரத்துக்கு ஒரு நாடகக் கம்பெனி வந்து சேர்ந்தது. அதில் பயராட் என்பவன் அற்புதமாகப் பாடினதால் ஜனங்கள் ஏராளமாக வரத் தலைப்பட்டார்கள். ஆனல், காட்டின் நடுவே யிருக்கும் ஒரு குடிசையில் பயராட் இன்னும் மிக இனிமையாகப் பாடினன். அந்தக் குடிசைக்குச் சொந்தக்காரி பயரெட் என்பவள்; அவள் நல்ல இளமையும்......எப்படிப்பட்ட கூந்தல் ......?”

பயரேட் : அழகு, ரொம்ப அழகான...

பயராட் : சிரிப்பு வருகிறது. நித்தம் பார்க்கும் ஒரு பெண்ணுடைய...சரி ...கண்கள்...?

பயரேட் : நீலக் கண்கள்.

பயராட் : ‘அழகான கூந்தலும், நீலக் கண்களும்’...அழகு, நீலம்!...... ஆனல், இதெல்லாம் உபயோகமில்லாத சமாசாரந்தானே......இருக்கட்டும்.

பயரேட் : எதை உபயோக மில்லை என்கிருய்?

பயராட் : என்னவோ ஞாபகத்துக்கு வந்தது; எல்லோருக்கும் தானே இந்த அழகுக் கூந்தலும் நீலக் கண்களும் இருக்கின்றன?

பயரேட் : ஆமாம்; ஆனல் எல்லோருமே சுறு சுறுப்புள்ளவர்களாய் இருக்க முடியுமா?

பயராட் : உன்னுடைய குரல், என்ன இவ்வளவு இனிமையாக ஒலிக்கிறது! நான் எப்படி இதை எழுதட்டும்!... இதெல்லாம் சுத்த மோசம்தான்....

பயரேட் : என்ன, அப்படிச் சொல்கிருய்? ஐயோ! சொல்ல மாட்டாயா?

பயராட்; அது இருக்கட்டும்; இந்த வெளிச்சத்தில் வந்து நில்லு.

பயரேட்: எதற்காக? எழுதப் போகிருயா?

பயராட் : அதுதான் எழுதிக் கொண்டிருக்கிறேனே! (அவள் தேகம் ‘முச்சூடும்’ ஒரு தடவை பார்க்கிருன்) இந்தக் கண்கள், ‘உன்னிடம் அன்பாயிருக்கிறேன்’ என்று சொல்லுகின்றன. இந்த உயர்ந்த தோள்கள், ‘ஜீவன் முழுதும் சேவை செய்கிறேன்’ என்கின்றன. சிவந்து குவிந்த இந்த அதரங்கள், ‘என் காலதாமதம் செய்கிருய்?’ என்று துடிக்கின்றன. ஆஹா! இந்தக் கொழிக்கும் அழகை இதற்கு முன் நான் பார்க்கவே யில்லையே!

பயரேட் : நீ என்ன பேசிக் கொண்டிருக்கிருய்?

பயராட் : கடைசியாக நான் கண்டு பிடித்து விட்டேன். இன்னும் நீ புரிந்து கொள்ள வில்லையா? நான், தினம் தினம் உன்னைப் பார்ப்பதினுலேதான் கரை காண வில்லையா? அடடா! என்ன வெல்லாமோ, எப்படி எல்லாமோ இருக்கிறதே!

பயரேட் : நீ சொல்வ தொன்றும் எனக்கு விளங்க வில்லையே?

பயராட் : எனக்குள்ளே இப்போது எப்படி யிருக்கிறது தெரியுமா? ஆஹா! இங்கிருந்து உயரத்தில் பறக்க வேண்டுமென்றிருக்கிறது. பயரெட், வானத்தின் மேற்பரப்பில், தாரகைக் குவியலுக்கு இடையே, கானமிசைத்துக் கொண்டு திரிய நினையாமல், இங்கென்ன செய்கிருய்?

பயரேட் : நாள் பூராவும், தனியாகச் சந்திர வெளிச்சத்திலும், என் அன்பனுடைய வருகையையே எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறேன். பயராட், என்னருகே வந்து சற்றுச் சாய்ந்து கொள்ளு.

(குடிசையின் மங்கின வெளிச்சத்தில் அவளுடைய மடியில் பயராட் தலை சாய்த்துப் படுக்கிருன். வெளியில், நிலவில் மிதக்கும் கிளைகள் மெதுவாக அசைகின்றன. சந்தோஷத்தோடு அவளுடைய கைகளை எடுத்துத் தன் மார்பின் மீது வைத்துக்கொண்டு பாடுகிருன்.)

# சுதேசி மாளிகை

பட்டுப் பட்டாடைகள், தோத்திகள், சீட்டி, வாயில் ரகங்கள், உல்லன் ட்வீட், பிளானல் தினுசுகள், இன்னும் எண்ணி லடங்காத சுதேசி பட்டு, நூல் கம்பளி தினுசுகள், சில்லறை சாமான்கள் யாவும் அடங்கிய மிகப் பெரிய சுதேசி ஸ்டோர்.

உயர்ந்த ரகம், குறைந்த விலை; இவைகளுக்கு உத்தரவாதமும் நாணயமும் நம்பிக்கையும் பொருந்திய இடம்.

சென்னையில் முதலில் தோன்றிய ஓரிஜனல் — சுதேசி ஸ்டோர் — கலப்பற்ற சுத்த சுதேசிச் சாமான்களுக்குப் பெயர் பெற்ற இடம் இதுவே

சுதேசி

விலாசத்தைக் கவனியுங்கள்

## ஜெனரல் சுதேசீஸ்

லிமிடெட்,

(ஹைகோர்ட்டுக்கு எதிர்)

**368, எஸ்பிளனேட், சென்னை.**

## வெளிவரத் தயார்!

ஏ எல். ஆர் எம். கம்பெனியாரின்

புராணச் சித்திரம்

# பிருந்தா

# &

# மைனரின் காதல்

நடிகர்கள் :

கொத்தமங்கலம் சீனு
புலியூர் துரைசாமி ஐயா
என். நாகராஜன்
எம். ஆர். சாமிநாதன்
டி. எஸ். துரைராஜ்
டி. வி. சேதுராமன்
எஸ். வி. வெங்கட்டராமன்
சங்கீதம் சங்கரிபாய்
ஜே. சுசீலாதேவி
டி. ஆர். சாரதா
பி. ஆர். மங்களம்
கே. எஸ். ஆதிலட்சுமி
கே. டி. சக்குபாய்

இன்னும் பலரும்

Tel: 'Filmsing' போன்: 4039

விவரங்களுக்கு:

**ஏ எல். ஆர் எம். கம்பெனி**

வேப்பேரி :: சென்னை

## நியோ ஸில்வர்

[NEO-SILVER]

என்னும் வெள்ளை உலோகத்தைக் கொண்டு தயாரித்த **வெள்ளிக்கு நிகரான**

- கூஜா
- பன்னீர் சொம்பு
- சந்தனப் பேலா
- டம்ளர்
- பல டிசைன் கொண்ட தட்டுகள்
- வெற்றிலைப் பெட்டி

இன்னும் அநேக விதமான சாமான்கள் எங்களிடத்தில் மிகவும் சகாயவிலைக்கு கடைசிவரைக்கும் உத்திரவாதத்துடன் செய்து கொடுக்கப் படும். வியாபாரிகளுக்கும் சப்ளை செய்யப் படும்.

விபரங்களுக்கு

**ஏ. என். கே. ஜுவல்லரி**

பத்ரி வீராசாமி சந்து,

**சைனுபஜார், மதருஸ்.**

---

## DHANALAKSHMI BRAND




**BEST STEEL TRUNKS AND SUIT CASES**

MANUFACTURER

**A. CHELLAPPA NAYAGAR**

No, 319. CHINA BAZZAR ROAD, MADRAS.

ஸ்டீல் டிரங்குகள், காபின்கள் வாங்குகையில், பற்பல சைஸ்களிலும் உயர்தரமான எஃகைக்கொண்டு செய்யப்பட்ட

**தனலட்சுமி**

பிராண்டையே பார்த்து வாங்குங்கள்.

அ. செல்லப்ப நாயகர்

319, சைனு பஜார் ரோட், மதருஸ்

---

எல்லா விதமான

## பழ தினுசுகள்

எங்களிடம் குறைந்த விலையில் கிடைக்கும்

தினந்தோறும் புதிய சரக்குகள் வந்துகொண்டே யிருக்கின்றன

**வெளியூர் ஆர்டர்களே**

எமது முக்கிய வியாபாரம்

வெளியூர் ஆர்டர்கள் பொறுப்பான மேற்பார்வையில் அனுப்பப் படுகின்றன.

விபரங்களுக்கு :

**FANCY FRUIT STALL**

5, CORPORATION FRUIT MARKET

ESPLANADE, MADRAS

---

## கதைக் கோவை

இதுவரை தமிழில் வெளிவராத புத்தம் புது நூல்

**504—பக்கங்கள்**

பிரபல எழுத்தாளர் **40** சிறந்த சிறு கதைகள்

கிளேஸ் பதிப்பு ரூ. **3-0-0**

பெதர் வெயிட் ரூ. **3-8-0**

தபால், ரிஜிஸ்டர் செலவு **0-9-0**

**இந்நூல் உங்களுக்கு ஓர் அழகிய பொக்கிஷமாகும்**

**அல்லயன்ஸ் கம்பெனி**

138, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர், சென்னை

# காலத்தேர்

[சுவாமி சுத்தானந்த பாரதியார்]

## நான்காம் அங்கம்

### ஐந்தாங் காட்சி

[ஜோதியின் தொண்டர் கிராமசேவை செய்கிறார்கள். ஜோதி பொதுநல ஆசிரியர் பதவியை விட்டுக் கிராமசேவை செய்தான்; மதுரைச் சம்பவங்களையும், தன்வீடு தீப்பட்டதையும், மங்களம் ஆற்றில் விழுந்ததையும் பத்திரிகையில் பார்த்து மனக்கலக்க முற்றான்; உலகியல்பை அறிந்தான்; உண்மை ஞானம்பெற ஒரு குருவைத் தேடினான். ஞானபுரியில் யோக முனிவர் இருந்தார். அவரை அடைந்து சாதனம் செய்து, ஜோதி யோகசித்தி பெற்றான். முனிவர் பெரிய ஜமீன்தாரராயிருந்து மனைவிமக்களை யிழந்து வருந்தி, உலகைத் துறந்து தவம் புரிந்து சித்தி பெற்றார். ஞானபுரி அவருக்குச் சொந்தமான கிராமமே. ஜோதியை அவர் தம் ஞானமைந்தனாகவே கருதிப் போற்றினார். அவனிடம் தம் கிராமம் ஆசிரமம் அனைத்தையும் விடுத்து, அவர் கைலாசயாத்திரை சென்றார். ஜோதி, ஞானபுரியை யோகாசிரமம் ஆக்கினான்; உண்மைத் தொண்டர்களைச் சேர்த்தான்; அவர்களுக்குக் கர்ம ஞான பக்தி ராஜயோகங்களைப் பயிற்றினான்; கல்வி தொழில் சன்மார்க்கம் இம்மூன்றையும் பரப்பும்படி நாடெங்கும் அனுப்பினான்; யோகாசிரமத்தில் ஏராளமான கைத்தொழில்களை ஏற்படுத்தி, ஏழைகளுக்கு உழைப்பும் பிழைப்பும் அளித்தான்; மங்கள விலாசம் ஒன்று ஏற்படுத்தி அங்கே அநாதைப் பெண்களை யெல்லாம் வைத்து அறிவும் தொழிலும் ஆத்மஞானமும் அளித்துப் பாதுகாத்தான்; அவர்களைக்கொண்டு பெண்ணுலகிற்கு அரிய நலம்புரிந்தான். ஜோதியின் தொண்டர் ஞானபுரியில் தொண்டுசெய்து, பல ஏழைகளுக்கு வேலை தந்து உடனழைத்துச் செல்கின்றனர். பாதி முழங்கால் மறைய நீண்ட கதர் ஜிப்பா அணிந்து தொண்டர் வீதி பெருக்கியும், அசுத்தங்களை அள்ளியும் தொண்டு செய்துகொண்டே பாடுகின்றனர்.]

#### தொண்டர் பாட்டு

புன்னாகவாளி ராகம் — ஆதி தாளம்

தொண்டுகள் செய்திடுவோம்—பொதுநலத்
தொண்டுகள் செய்திடுவோம்
வண்டுகள் போலச் சுறுசுறுப் பாகவே
வாழப் பயின்றிடுவோம். (தொண்டு)

ஊருக் குழைத்திடுவோம்—உயர்ந்த
உண்மைக் குழைத்திடுவோம்
பேருக்கும் கீர்த்திக்கும் ஆசைப்படாமலே
ஊருக் குழைத்திடுவோம். (தொண்டு)

வீதி பெருக்கிடுவோம்—சாக்கடை
வேகத்தைப் போக்கிடுவோம்
சோதி துலங்கிட வீடுகள் யாவையும்
சுத்தமாய் வைத்திடுவோம். (தொண்டு)

அறிவொளி பரப்பிடுவோம்—பல்
லாயிரந் தொழில்வளர்ப்போம்
வறுமையும் மடமையும் அடிமையும் விலகிநாம்
வளம்பெற வாழ்ந்திடவே (தொண்டு)

அழகினைத் தொழுதிடுவோம்—நெஞ்சில்
அன்பினைத் தொழுதிடுவோம்
மழை,கதிர், கடலெனக் காற்றென ஊற்றென
மகிழ்வுடன் இயல்பாகத் (தொண்டு)

நோய்களைத் தீர்த்திடுவோம்—ஏழைபடும்
நூறு துயர்களைவோம்
சேய்களைப் பேணிடுந் தாய்மனம் போலவே
தெள்ளிய வாஞ்சையுடன் (தொண்டு)

[காஷாய ஜிப்பா அணிந்து
அப்துல்லாகான் வருதல்]

**அப்துல்**

அன்பீர் வணக்கம்!

**தொண்டர்**

அடிகாள் வணக்கம்.

**அப்துல்**

உம்மை நடத்தும் உத்தமர் யாரோ?

**தொண்டர்**

ஜோதியின் அடியவர் யாம்—பரி
சுத்தரின் அடியவர் யாம்
சாதிமத பேதச் சச்சர வில்லாத
சன்மார்க்க நேயர்கள் யாம்.

**அப்துல்**

உமது சன்மார்க்கம் உலகெலாம் பரவுக!
உங்கள் சாமியை எங்கே காணலாம்?

**தொண்டர்**

சாமியென் றவரைச் சாற்றிடின் மறுப்பார்.
சாமி ஒருவனே, சகோதரர் யாவரும்.

கடவுளே சாமி. கருத்தில் அவனையே
வணங்கிர் என்பது ஜோதியின் வாக்கு.

### அப்துல்

ஜோதியைக் காணவே துடிக்குதென் மனதும்.

### தொண்டர்

தியான மந்திரம் சென்றுற் காண்போம்.

### அப்துல்

அங்கே நடக்கும் அருட்பணி யாதோ ?
கருணை ஜோதியின் கடமைகள் யாவோ ?
அன்புடன் சொல்வீர், அருமை நண்பீர் !

### தொண்டர்

ஞான புரியெனும் நல்லூர் ஜமீன்தார்
செல்வ மெல்லாம் தீனர் பணிக்கே
ஈந்தார் ; துறவே ஏந்தி, யோகியாய்
வாழ்ந்தார் ; ஜோதி வந்ததும் அவரைப்
பூரண யோகி யாக்கிப் பொருளெலாம்
கையிற் கொடுத்துக் கைலை சென்றார்.
யோக முனிவர் உதவிய தெல்லாம்
உலகிற் குதவினன் உத்தம ஜோதி.
ஞான புரியை ஞாலம் போற்றும்
அன்புவின் ணுக்கி அருள் விளக்கினன்.
புதுமையும் பழைமையும் போகமும் யோகமும்,
அறிவுங் கலையும், ஆயிரந் தொழிலும்,
சீரும் செல்வமும் தெய்விக வாழ்வும்
செழித்திடச் செய்த தீரன் அவனே.
சிவனும் சக்தியும் சேர்ந்தது போலே
ஆணும் பெண்ணும் அருளமு குடனே
வாழச் செய்த மாதவன் அவனே.
ஏழை யெளியவர் இன்னலைத் தீர்க்க
உழைப்பும் பிழைப்பும் உதவியோன் அவனே.
பிச்சைத் தொழில்களும் கொச்சைத் தொழில்களும்
வேரோ டொழிய வேலைசெய் துண்டு,
பயன்பெற வாழப் பயிற்றினேன் அவனே !
பசியென வந்தவர் பாடுபட் டுண்ணக்
கணக்கறு வழிகளைக் காட்டினேன் அவனே !
மோகதா கங்களை முற்றிலும் வென்று
யோகமே வாழ்வாய், வாழ்வே யோகமாய்,
இன்புறச் செய்த இறைவன் அவனே.
அன்பும் அறிவும் அறமும் அருளும்
பண்பும் பணிவும் பகட்டறு தொண்டும்
கொண்ட ஜோதியைக் குருவென வணங்கி
அன்பு செய்யும் அறவோர் யாமே !

### அப்துல்

அறிந்தேன் ; ஜோதி யடியார் வாழ்க !
அவரிடம் என்னையும் அழைத்துச் செல்வீர் !

### தொண்டர்

வருக வருக !

### அப்துல்லா

வருபவர் யாவர் ?

[யோகாசிரமத்தி லிருந்து தொழிலாளர் சந்தோஷமாகப் பாடிக்கொண்டு வருதல்.]

### தொழிலாளர்

மகராஜன் புண்ணியத்தால்—நாங்கள்
வயிறாரக் கஞ்சி யுண்டோம்.
பகலெல்லாம் பாடுபட்டோம் கடும்
பஞ்சத்தை வென்று விட்டோம்.

### தொண்டர்

தொழி லாளர்காள் சுகமா யிருங்கள் !

### தொழிலாளர்

சோற்றுக்குப் பஞ்சமில்லை—நல்ல
தொழிலுக்குப் பஞ்ச மில்லை
காற்றுட வேலை செய்வோம்—ஜோதிக்
கடவுள் கருணையிலே.

### தொண்டர்

ஜோதி வாழ்க !

### எல்லாரும்

ஜோதி வாழ்க!

[தொழிலாளர் செல்லுகின்றனர்]

### தொண்டர்

இவர்க ளெல்லாரும் எங்கள் ஜோதி.
இட்ட வேலையை இயற்றி வாழும்
கவலை யற்ற கைத்தொழி லாளர்.

### அப்துல்

ஓசையே அவர்கள் உள்ள மொலித்தது.
இனிநாம் செல்வோம்.

### தொண்டர்

இசையுடன் செல்வோம்.

ஊருக்கு நலம் புரிவோம்––கர்ம
யோகப் பலன் பெறுவோம்
யாருக்கும் நலஞ்செயும் அன்பு வரத்தையே
ஆண்டவ னிடம் பெறுவோம்.

பசித்தவர் வாரீர்...பாடுபட் டுண்போம்.
தொழில்கள் உண்டு ; சோறும் உண்டு.
கண்ணீர் துடைக்கக் கருணை யுண்டு.
சோம்ப லொளிப்பீர், துயர மொழிப்பீர் ;
கற்றறி வாளர் கல்வி பரப்புவீர் ;
கைத்தொழி லாளர் கைத்தொழில் புரிவீர் ;
உழவர் முதலாய் ஒட்டர் வரையில்
தொழிலைச் செய்து சுகமுற வாழ்வீர் ;
அறவோர் எங்கும் அறவழி சொல்வீர் ;
புலவோர் எவர்க்கும் பொதுநெறி புகட்டீர் !
உலக மெல்லாம் ஒருகுல மாக
மெய்யறி வின்பம் விளங்கிட வாழ்வோம் !

### அப்துல்

தினமும் இப்படிச் செப்புதல் கடனு ?

### தொண்டர்

ஊர்ப்பணி முடிந்ததும் உரைப்போம் இப்படி
இனிநாம் செல்வோம், இறைவனை வணங்க.

ஜோதியைத் தொழுதிடுவோம்—பரி
சுத்தனைத் தொழுதிடுவோம்
சாதிமத நிற பேதமில் லாமலே
சத்திய வழிநடப்போம்.

[எல்லாரும் செல்லல்]

## ஆறுங் காட்சி

[தியான மந்திரத்தில் நடராஜா திருவடியில் ஜோதி அமர்ந்திருக்கிறான். அப்துல்லா ஒரு பலகையில் அமர்ந்து மதுரைச் செய்திகளைச் சொல்லுகிறான். மங்களம் இருப்பது மட்டும் சொல்லவில்லை.]

### அப்துல்

நண்பரைக் காண நாடி வந்தேன்.
குருவைக் கண்டு கும்பிடு கின்றேன்.
அடிகள் நிலைமை அற்புதம், அற்புதம்!
இகமும் பரமும் இணைந்தசன் மார்க்கம்.
வாழ்வும் யோகமும் சூழ்ந்த சமநெறி.
அலுவல் என்னை அழைக்கா விட்டால்,
யானும் ஜோதி யடியனாய் வாழ்வேன்.
சாதி சமய சாத்திர கோத்திர
பேதமே யின்றிப் பிரிவினை யின்றி
அன்பும், அறமும், அருளும் உண்மையும்
ஆண்டவ னறிவும் ஆருயிர்ப் பணியும்
சேர்ந்தசன் மார்க்கம் செயலிற் கொணர்ந்த
சுவாமிகள் பெருமை சொல்லுதற் கரிதாம்.

### ஜோதி

எல்லாப் பெருமையும் இறைவன் பெருமையே.

மத்துறு தயிரைப் போலே
மயங்கிய மனத்தை வெல்லச்
சித்தம்வைத் தென்னை யாளத்
தேசிக னாக வந்தான்
சத்தியும் தவமும் யோக
சமாதியும் தந்து, தூய
பத்தியும் பணியு மீந்தான்
பதநிழ லிருக்கின் றேனே.

அவனடி நிழலில் அமர்ந்ததே போதும்;
அவனே யாகும் ஆருயிர்க் கெல்லாம்.
அறிவுந் தொழிலும்; அறமும் அன்பும்
உழைப்பும் பிழைப்பும் உதவச் செய்த
யோக முனியருள் ஒன்றே போதும்.
அடிக்கடி மாறும் அரசியற் சுழலில்,
அடங்கா மனத்தின் ஆசைப் புயலில்,
இருவினைக் காட்டில் இடர்மிகப் பட்டேன்.
காலத் தேரின் கதியிலை மாற்றி
நற்கதி சேர்த்த சற்குரு வாழ்க!
யோக நிலய வொளிமணி-போற்றி!

### அப்துல்

யோக நிலயம் ஒருதனி யுலகம்,
உண்ண வுடுக்க, இருக்க, படிக்க,
தெய்வ சாதனம் செய்திட வேண்டும்.
எல்லாம் இங்கே இருக்கக் கண்டு,
பெருமகிழ் வெய்தினேன்.

### ஜோதி

குருவருள் வாழ்க!

அப்துல் லாவிடம் அன்று சொன்ன
சொல்லே செயலாய்த் துலங்கிய தின்று.
வள்ளியும் கண்ணனும் வந்து சேர்ந்தால்,
தந்தையும் வந்தால், தமிழர் இன்புறும்
பணிகள் செய்யலாம்.

### அப்துல்

பணிசெய வருவோம்!

முருகனார் தோட்டம் முற்றிலும் எரிந்ததும்,
கண்ணனும் வள்ளியும் காயப்பட்டு
வைத்திய சாலையில் வசிப்பதும் அறிவீர்!

### ஜோதி

அதெல்லாம் அறிந்தேன்; அன்புடன் சொன்னாய்.
ஆனால் என்னையே ஆவிபோல் விரும்பிய
கற்புத் தெய்வம் கலங்கிடச் செய்தேன்.
காலைப் பதுமமும், மாலை முல்லையும்,
மதிவளர் அல்லியும், மாணிக்க மும்போல்
மாசில் லாத மங்களத் திருவை
ஐயுற் றடாத பொய்களைச் சொன்னேன்,
புலிசூழ் மான்மேற் புன்கணை பாய்ச்சினேன்.
கொல்லும் பகைவர் அல்லலைப் பொறுத்தும்
என்னையே யெண்ணி யின்னலைத் தாங்கியும்
இருந்த சக்தி வருந்திடச் செய்தேன்.
சுந்தரி பொன்னு சுடச்சுடச் செய்த
தந்திரக் கொடுமைகள் தாங்காக் குயிலென்
வனத்தில் புகுந்தும் வழிகா ணமல்,
கற்புயிர் தன்னை வைகையிற் கரைத்தாள்.
பத்தினி வருந்தப் பாவியேன் வாழ்ந்தேன்.

[கண்ணீர் விடுகிறான

### அப்துல்

ஆறுதல் ஈவார் அல்லா!

### ஜோதி

ஆறுதல்?

வாட்புண் ஆறும்; மனப்புண் ஆறுமா?
என்முன் பெண்ணாய் இலகிய பத்தினி
என்னுள் சக்தியாய் இலங்கு கின்றாள்.
உடலே மறைந்தது, உயிரெனுள் உள்ளது.
"ஜோதிக் காதலா, சோதிக்க லாமா,
சாதல் வரினும் காதல் போகுமா?
இடர்கள் சூழ்ந்தும் இச்சை மாறுமா?
உயிர்போ னாலும் உமை மறப்பேனா?
என்னைக் கைவிட் டேகிய தேனே?
கண்ணகி கற்பைக் காட்டிய மதுரையில்,
உயர்குலந் தோன்றிய உத்தமி நானே.
நீரே உயிரென நினைத்திருந் தேனே!
பாம்பும் புலியும் பற்றிய மானை
அன்புக் கலைமான் அலறவிட் டகன்றதே!
பிரிவுச் சுடுசரம் பிளந்தது நெஞ்சை.
வெள்ள மீன்கள் வேதனை யுடலை
உண்ணக் கொடுத்தேன், உயிரால் உம்முடன்
ஒன்றினேன்" என்றென் உள்ளே புகுத்தாள்
கதிரும் மதியுங் கடலும் மழையும்,
மயிலுங் கிளியும் குயிலும் அன்னமும்,
மின்னலும் சுடரும் என்னுயி ரனையாள்
உடலை எழுதினும் உள்ளழ கெழுதுமோ?

### அப்துல்

வனதே வதையினும் வனப்பு மிக்கவள்!
பார்த்திருக் கின்றேன்... பத்தினி யின்றும்
பக்க மிருந்தால் பதின்மடங் கதிகம்
அருட்பணி செய்வீர்!

### ஜோதி

ஆ, அவள் இருந்தால்...!

யோக முனிவர் உரைத்த பெரிய
சாதனம் செய்யத் தக்கவள் அவளே.
பூரண சக்தி பொலிவுறச் செய்வாள்.
மோகம் விடுத்த யோகம் போற்றி!
கதிரவ னுடனே கதிர்களைப் போலே.
உமாபதி போலே சமானமாய் வாழ்வோம்.
அவள் பெயராலே அமைந்து வளரும்,
மங்கள விலாச மாதருக் கெல்லாம்,
யோக நிலய உத்தமர்க் கெல்லாம்
அவளே அன்பின் அன்னை யாவாள்.
அத்தகை யின்பம் அடையா தொழிந்தேன்.
மங்கள விலாச மாதா வாக
இருக்கும் சக்தி இனியார்? அறியேன்.

அப்துல்

மில்லர் வளர்க்கும் செல்வி யொருத்தி...;
கற்பும் பொற்பும் கல்வி கேள்வியும்
கருணையும் மிக்க கன்னி யவளே.
அநாதைச் சிறுவரை அன்புடன் வளர்க்கிறள்.
அவளுன் பணிக்கே அமைந்த தேவதை.
மில்ல ரிடத்தில் சொல்லுவேன் யானும்.
அவரும் உம்மை அடிக்கடி புகழ்வார்.
அவரிட மேஉம் இருப்பிடம் அறிந்தேன்.
விளம்பர மின்றியே வியன்பணி செய்தீர்.
பாதிரி மார்களும் பணியை அறிந்து
மில்லரிடத்திற் சொல்ல நான் கேட்டேன்.

ஜோதி

மில்லர் வளர்த்தது நல்லதா யிருக்கும்.
கிழக்கின் ஞானமும், மேற்கின் கருமமும்
சேர்ந்த வாழ்வே சிறந்ததென் றறிந்தேன்.
அதுவே கொள்கையாய் அருட்பணி புரியும்
இந்த நிலயம் வந்தனத் துடனே
மில்லர் தருவதை மேன்மையாய் ஏற்கும்;
யானும் எழுதுவேன்.

அப்துல்

அதுவே நலமாம்.
இன்னும் பத்துநாள் சென்னையி லிருப்பேன்.

ஜோதி

சென்னையி லென்ன பொன்னு விஷயமோ?
பாதகக் கும்பல் பதுங்கிய தெங்கே...?

அப்துல்

"காதல் உலகம்" என்னும் காட்சியில்,
மூன்று பேரும் தோன்றுவர் காண்பேன் —
ஒலிப்படச் சோதகர் உரைத்த விவரம்.
அதெல்லாம் பிறகே அம்பல மாகும்.
எனது தொழிலே இயல்பாய்ச் செய்து
நல்ல செய்தி சொல்ல வருவேன்.

[மணியடித்தல்]

ஜோதி

தியான வேளை தெய்வந் தொழுவோம்.

அப்துல்

தொழுகை நடத்திச் சுத்தமாய்ச் செல்வேன்.

[தொண்டர் வரிசையாக வந்து
ஜோதியுடன் நின்று எல்லாரும்
தோத்திரம் பாடுதல்.]

எல்லா வுலகினிலும்--வாழும்
எல்லா வுயிர்களிலும்....
எல்லார் உளத்தினிலும்—வளர்
ஏகப்பரம் பொருளே....

உலகமுன் கோயிலென்போம்,—அதில்
உயிர்களுன் மேனியென்போம்
நலமுறச் செய்பணியே-நாம்
நாளுஞ்செய் பூஜையென்போம்.

சாதி மதவெறிகள்--சற்றும்
சாராத சத்தியமே,
சோதி மயமான--பரி
சுத்த சுதந்தரமே.

தியானத்தி லேவளரும்--இன்பத்
தீயென் றுனையறிந்தோம்
மோனத்தி லேவளரும்--ஆத்ம
முக்திநீ யென்றுணர்ந்தோம்.

எங்கெங்கே பார்த்தாலும்--நாங்கள்
எப்பணி செய்தாலும்....
அங்கங்கு நீவிளங்கி--எம்
அன்பைப் பெருக்கிடுவாய்.

சக்தி யளித்திடுவாய்--மனச்
சஞ்சலந் தீர்த்திடுவாய்
சித்தி யளித்திடுவாய்--எல்லாருக்கும்
சேம மளித்திடுவாய்.

சத்திய வாக்கருளாய்--உப
சாந்த நிறைவருளாய்
சித்த ஜயமருளாய்--எம்மைத்
தீரர்க ளாக்கிடுவாய்.

சூது பொறுமைகளை--உடனே
சுட்டுப் பொசுக்கிடுவாய்
மோதும் இடர்க்குலத்தை--வீழ்த்த
மொய்வலி யீந்திடுவாய்.

வீரக்கன லளிப்பாய்--நாளும்
வெற்றித் திறலளிப்பாய்.
ஓர் குலமாகப் புவி--வாழும்
ஒற்றுமை யீந்திடுவாய்.

அச்சம் ஒழித்திடுவாய்--அரக்கர்
ஆட்டம் ஒழித்திடுவாய்
நச்சடிமை யிருளும்—வறுமையும்
நலியச் செய்திடுவாய்.

கல்வி பரவிடவே--நல்ல
கைத்தொழில் ஓங்கிடவே
செல்வச் செழிப்பருளாய்--சொல்லும்
செய்கையும் சேர்த்தருள்வாய்.

கருணைப் பெருங்கடலே--எம்மைக்
காத்திடும் வானமுதே
அருட்சுடரைப் பொழிவாய்--மெய்
அன்பர் குழுவினிலே

[தியான மந்திரத்தில் பளிச்சென்று ஒளி
பரவல்...கற்பூரம் எரிதல். எல்லாரும்
தியானத்தில் ஆழ்தல். மோனம்!]

[திரை]

காலத்தேர் நான்காம் அங்கம் முற்றிற்று.

**Fashion Insists on-**

**Smartness !**

**FOR MODERN SAREES**

**SHOP AT**

# RANGOON HALL

**RANGOON MERCHANT**




அழகு செய்வது தற்கால நாகரீக ஆடைகளே !

உயர்தர ஜவுளிக்கு

உத்திரவாதமுள்ள இடம்

# ரெங்கோன் - - - ஹால்

**கு. அ. அங்கமுத்து முதலியார்**

பட்டு ஜவுளி வியாபாரம்

அம்மன் சன்னதி :: காரைக்குடி



Sure Safe Healer for Family use
Kills Septic Germs, Promotes Growth of
New Skin.

# VANISH

**Ringworm Cure**

# "வானிஷ்"

**சர்மரோக நிவாரணி**

முகப்பரு, வேனல் கட்டி, கக்கூஸ்பத்து, கரப்பான், பித்தவெடிப்பு, தீப்பட்ட புண் மற்றும் எல்லாவித சர்ம ரோகங்களுக்கு சிறந்த ஒளஷதம்.

Prepd. by Dr. V. S. S. MONI & Brother,
National Pharmacy,
KARAIKUDI.





# P. Kothandaram Pillai

உயர்தர மரச்சாமான்கள் வியாபாரம்

HIGH CLASS
CABINET MAKER & UPHOLSTERER

Established in 1854

PONNUSAWMY PILLAI'S BUILDINGS

**39 & 44, ESPLANADE WEST**
(Rattan Bazaar)

**P. T. MADRAS**

விரைவில் வெளிவருகிறது!

# திருவள்ளுவர்

செருகளத்தூர் சாமா

திருநெல்வேலி பாப்பா

M. லக்ஷ்மணன் காளி N. ரத்னம் M. லக்ஷ்மி

T. S. துரைராஜ் T. R. ராமச்சந்திரன் T. V. A. பூரணி

குளத்து மணி

முதலியோர் நடித்தது

*Distributors :*

**FAMOUS TALKIE DISTRIBUTORS**

2/159, MOUNT ROAD :: MADRAS



# வியாபாரத்திற்கு அழகு விளம்பரம் செய்தல்!

லைன் பிளாக்குகள்-
ஹாப்டோன் பிளாக்குகள்-
கலர் பிளாக்குகள்-
கலர்பிரிண்டிங் முதலியவை
செய்யுமிடம்!



டெலிபோன் 3202.

# எம்.சி. அப்பாசாமி செட்டி & கம்பெனி.

14, ஜோன்ஸ் தெருவு, மண்ணடி, மதராஸ்.

# பறித்த பூக்கள்

## மைசூரிலே விமானம்

மைசூர்ப் பாகு, மைசூர் ரஸம், மைசூர்ப் போண்டா, மைசூர்ச் சட்னி, மைசூர்த் தோசை என்று, நாம் சாப்பிடும் போது மைசூரை நினையாமல் சாப்பிடுவதில்லை. மைசூரிலிருந்து ஹோட்டல்கள் கிளம்பி நம் பக்கங்களில் நமக்குப் பேஷான சாப்பாடு சப்ளை செய்கின்றன. ஆகார தினுசுகளில் மைசூர் நல்ல பேர் வாங்கிவிட்டது. இதனால் மைசூர் வாசிகள் யாவரும் சாப்பாட்டுராமர்கள் என்று எண்ணிவிடாதீர்கள். 'வியாபாரி' எழுதுவதைக் கவனியுங்கள்:

விவசாயம், கைத் தொழில்களிலும் மைசூர் மிகுந்த பிரக்யாதி யடைந்திருக்கிறது. இந்தியாவின் நிகரற்ற எஞ்சினியரான ஸர் விசுவேசுவரையாவின் மூளைப் பலத்தாலும் மைசூர் சமஸ்தானத் திவான்களின் நிர்வாகத் திறமையாலும் மைசூர் மன்னர்களின் பெருநோக்காலும், இந்தியக் கைத்தொழில் உலகில் இன்று மைசூர் முதன்மை ஸ்தானம் வகிக்கிறதென்னலாம்.

ஸர் விசுவேசுவரையாவின் பிரசாரத்தின் பயனாகவும் ஸர் வால்சந்த் ஹீராசந்தின் முயற்சியாலும் மைசூர் சர்க்காரின் ஆதரவாலும், இப்பொழுது மைசூரிலேயே மோட்டார்க்கார் செய்யவும் ஆகாய விமானம் செய்யவும் தொழிற்சாலைகள் நிறுவ ஏற்பாடாகி வருகிறது. 'ஹிந்துஸ்தான் ஏர்கிராப்ட்ஸ் லிமிட்டெட்' என, 5 கோடி ரூபாய் மூலதனத்தில் பங்களூரில் ஓர் ஆகாய விமான உற்பத்திக் கம்பெனி நிறுவப்பட்டுவிட்டது. அடுத்தாற் போல், $2\frac{1}{4}$ கோடி ரூபாய் மூலதனத்தில் மோட்டார்க்கார் உற்பத்தி செய்ய ஒரு தொழிற்சாலையும் நிறுவப் போகிறார்கள். இதில் மூன்றில் இரண்டு பங்கு மூலதனம் மைசூர் சர்க்காராலேயே உதவப்படுமாம்.

## முழுக்கட்டியும் தின்றார்!

"சிறைக்குச் செல்லும் ஸத்தியாக்கிரஹிகள் ஸத்தியாக்கிரஹ தத்துவத்தை அறிந்து செல்லவேண்டும். யோகாப்பியாசத்தை முறையுடன் செய்தால் பலன் கிடைக்கிறது. அதுபோலவே ஸத்தியாக்கிரஹ தர்மத்தையும் முறையுடன் செய்தால்தான் பலன் கிடைக்கும்" என்று 'ஹிந்துஸ்தா'னில் ஸ்ரீ கி. ச. எழுதியுள்ளார். அவர் மேலுங் கூறுவதாவது:

சிறைக்குச் சென்று அங்கே கொடுக்கும் சாதத்தைச் சாப்பிட முடியவில்லை யென்று அரைகுறையாகச் சாப்பிட்டு உடல் நலத்தைப் பாழ்படுத்திக்கொள்வது சரியல்ல. அவர்கள் கொடுக்கும் உணவை அமிர்தமென்று நினைக்குமாறு மனதை அப்பியாசப்படுத்திக் கொள்ளவேண்டும். அந்த உணவிலே ருசி யிருப்பதை அறியுமாறு நாவுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். நாங்கள் சிறைக்குச் சென்ற புதிதிலே எங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆகாரம் முழுவதையும் எங்களால் தின்ன முடியவில்லை. என் நண்பர் ஸ்ரீ வி. ஆர். நரசிம்மன் முழு ஆகாரத்தையும் தின்பதற்குப் பயில ஆரம்பித்தார். 'இன்றைக்கு அரைக் கட்டி சோற்றைச் சாப்பிட்டுவிட்டேன்' என்று பெருமையாகச் சொல்லுவார். இதே மாதிரி நாளுக்கு நாள் அவர் சாப்பிடும் உணவின் அளவு விருத்தியாகிக்கொண்டே வந்தது. ஒரு நாள் 'இன்றைக்கு முழுச் சோற்றுக் கட்டியையும் தின்று விட்டேன்' என்று தெரிவித்துக் கொண்டார். சிறையில் கொடுக்கப்படும் சோற்றினிடம் உண்டாகும் அருவையை அவர் அவ்வளவு பிரயாசைப்பட்டு வென்றுவிட்டார். இது யோகாப்பியாசம் அல்லாமல் வேறு என்ன?

## உருளைக்கிழங்குக் கணக்கு

இந்த உருளைக்கிழங்குக் கணக்கைக் 'குமரன்' தருகிறது:

ஒவ்வொரு வருஷமும் 33 லட்சம் ரூபாய்க்கு மேல் பெறுமதியுள்ள $11\frac{1}{2}$ லட்சம் மணங்குக்கு மேல் இந்தியா உருளைக்கிழங்கை இறக்குமதி செய்து வருகிறது. இதில் கிட்டத் தட்ட முக்கால் வாசி பர்மாவிலிருந்துதான் இறக்குமதி யாகிறது. யுத்தத்துக்கு முன் இத்தாலியிலிருந்து விதைக் கிழங்குகள் சுமார் 20 சதமும் கென்யாவிலிருந்து 5 சதமும் இறக்குமதியாகி வந்தன. உள்நாட்டு விளைவுக் காலத்தில் இறக்குமதி குறைவு; இதனால் போட்டி அதிகமில்லை. உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும்படி இந்திய விவசாய மார்க்கட்டிங் ஆலோசனையாளர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். வருஷந்தோறும் இந்தியாவிலிருந்து 94,000 மணங்கு கிழங்கு (2,81,000 ரூ. விலை மதிப்புள்ளது) இலங்கை, பாஹ்ரீன் தீவு, இராக் முதலிய இடங்களுக்கு ஏற்றுமதி யாகிறது. இது பெரும்பாலும் மைசூர், சென்னை, பம்பாய், சிந்துப் பிரதேசங்களில் விளைவது. பர்மாவிலிருந்து ஏற்றுமதியாகும் கிழங்கில் பெரும் பாகமும் இந்தியாவுக்கே வருகிறது.

## அருணாவின் வரலாறு

ஆஸப் ஆலி டில்லியில் ஒரு பாரிஸ்டர். காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர். மத்தியச் சட்டசபைக்கு நடந்த சென்ற தேர்தலுக்கு முன்னால்தான் ஆஸப் ஆலிக்கு மணம் நடந்தது. ஆஸப் ஆலியின் மனைவி பெயர் அருணா. அவளைப்பற்றிய இந்த ரஸமான விவரங்களை 'ஹனுமான்' தந்திருக்கிறது:

ஸ்ரீமதி அருணா வங்காளத்தைச் சேர்ந்தவர். பிரம்ம சமாஜி. அவருக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மீது அதிக வெறுப்பு.

ஸ்ரீமதி அருணாவின் தாயாரைப் பெற்ற பாட்டனார் பிரம்ம சமாஜத்தைப் பற்றி அநேக பாட்டுகள் இட்டுக் கட்டியிருக்கிறார். பிரம்ம சமாஜத்தினர் இன்னும் அந்தப் பாட்டுகளைப் பஜனை செய்துகொண் டிருக்கிறார்கள். அவருடைய மாமாக்களில் ஒருவர் ரவீந்திரநாத தாகூரின் ஒரே புதல்வியை மணந்து கொண்டார். ஸ்ரீமதி அருணாவின் சகோதரி ஸ்ரீமதி பூர்ணிமா பானர்ஜியும் சத்யாக்ரஹத்தில் ஈடுபட்டு மூன்று மாதம் சிறைவாசம் அனுபவித்து வெளி வந்துள்ளார்.

ஸ்ரீமதி அருணா 1930-ஆம் வருஷச் சட்ட மறுப்பியக்கத்தின்போது சிறை சென்றிருந்தார். 1933-ஆம் ஆல் இந்தியா வெங்கும், ஸ்திரீகள் இயக்கம் வலுக்க ஆரம்பித்தது. ஸ்ரீமதி அருணா ஆஸப் ஆலியும் டில்லியில் செஞ்சிலுவைச் சங்கம் உள்படப் பல பொதுநலச் சங்கங்களில் கலந்து ஊக்கத்துடன் வேலை செய்து வருகிறார்.

இப்பொழுது நடக்கும் சட்ட மறுப்பியக்கத்தில், டில்லி மாகாணக் காங்கிரஸ் கமிட்டியில் நிர்மாணத்திட்ட வேலையில் பங்கு எடுத்துக்கொண் டிருக்கிறார். ஹிந்துஸ்தானியில் வெகு அழகாகப் பேசுவார்.

---



# புத்தக உலகம்

## அமூல்யன்

எழுதியவர்: ஸ்ரீ சரத் சந்த்ர சட்டர்ஜி. வங்காளத்தி லிருந்து தமிழில் மொழிபெயர்த்தவர்: ஸ்ரீ த. நா. குமாரசாமி. வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. பக்கம் 160. விலை: அணா 15.

ஒரு குடும்பத்தின் கள்ளங் கபடில்லாத சாமான்ய விவகாரங்களைக் கொண்டு மிக அழகாக இந்த நவீனத்தைச் சரத் சந்திரர் எழுதியிருக்கிறார். ஸ்ரீ த நா. குமாரசாமி அவர்கள், மூலத்தின் சுவை குன்றாது எளிய நடையில் மொழி பெயர்த்திருக்கிறார். தமிழல்லாத சில சொற்களை விலக்கி யிருந்தால் நன்றாயிருக்கும். —கோ.

## அசலா

மொழிபெயர்ப்பு: ஸ்ரீ ஆர். ஷண்முகசுந்தரம். சக்தி காரியாலயத்தாரின் வெளியீடு. சக்தி மலர்-4. பக்கங்கள் 483. விலை: ரூ. 1-8-0.

அகத்திடை நிகழும் உணர்ச்சிகளையும், கருத்துக்களையுஞ் செவ்விதின் ஆராய்ந்து கூறுபடுத்தித் தெளிவுபட விளக்கும் புது முறையைப் பின்பற்றிக் கதை எழுத முன்வந்த இந்தியர்களுள், வங்காட்டைச் சேர்ந்த ஸ்ரீ சரத் சந்த்ர சட்டர்ஜி என்பார் தலைசிறந்தவ ராவர். அப்பேரறிஞர் எழுதிய இத்தகைய நாவல்களுள் அசலா (கிருஹதாஹ்) என்பது மிகவுஞ் சிறந்த தொன்றாகும். அதன் கதைப் போக்கும், அகநிகழ்ச்சி விளக்கமும், சொல்லமைப்பும் யாவராலும் நன்கு போற்றப்பெற்றவை. அக்கதையில் வரும் அசலா, மஹிம், சுரேஷ், மிருணாள் என்ற முதன்மையான பாத்திரங்கள் சட்டர்ஜியின் இயற்கைச் சிருஷ்டிகள் என்றுதான் கூறவேண்டும். அவர்கள் ஒவ்வொருவருடைய அகநிகழ்ச்சிகளும், படம் பிடித்ததுபோல் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

படிக்கப் படிக்கத் தெவிட்டாத இக்கதையைத் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ் நாட்டாருக்குப் பேருதவி புரிந்துள்ளார் ஸ்ரீ ஆர். ஷண்முகசுந்தரம். அறிவில் முதிர்ந்த இவ்விளைஞரின் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. இவருடைய எளிய தமிழ்நடை சிறந்து விளங்குகிறது. சிறுவர்களும் படித்து அறியக் கூடிய எளிய மொழிபெயர்ப்பு இந்நூல் என்பதையும், கதைப் போக்கின் அருமையும் இனிமையும் நன்கு விளங்கும்படி இது திறம்பட மொழிபெயர்க்கப் பட்டுள்ளது என்பதையும், இந்நூலை வாங்கிப் படிப்பவர் ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்வார்களென்று நம்புகிறோம்.

நூல் சக்தி மலர் ஒவ்வொன்றிற்குமுரிய இயல்பான அழகுடன் கட்டடம் செய்யப்பட்டு மிளிர்கிறது. —கா. சிவ. க.

## பாகிஸ்தான்

ஆசிரியர்: வி. மகாலிங்கையர், எம். ஏ. வெளியிட்டோர்: சென்னை நவயுகப் பிரசுராலயத்தார். 152 பக்கங்கள். விலை: ரூ 1-0-0.

அரசியல் அதிகாரம் ஓரளவு இந்தியருக்கு மாற்றித் தரப்பட்டது. அவ்வதிகாரத்தைக் கொண்டு பாமர ஜனங்களுக்கு அதிகமாக எவ்வித நன்மையையும் செய்து விடுவதற் கிடமில்லை என்பது உண்மையே. எனினும், தேசீயத் தொழிலபிவிருத்திக்கு உதவி என்ற வகையில், பெருந்தொழில் முதலாளிகளும், படித்த வகுப்பினரும், அவ்வதிகாரத்தைக் கொண்டு பெரிதும் பயனடையலாம். இந்நிலைமை வந்தபோதுதான், கிடைத்த அதிகாரத்தைப் பங்கு போட்டுக்கொள்ளப் பல்வேறு வகுப்புகளும் தனித்தனியே கிளர்ச்சி செய்கின்றன. இவ்வகுப்பு வாதம் முற்றிப் போய், தனி ராஜ்யங்கள் வேண்டுமென்ற வாதத்தில் முடிகிறது. ஆனால், இது வெறும் பேர முயற்சியேயன்றி வேறல்ல; பதவி மோகம்கொண்ட மேல் வகுப்பினரின் வாதமேயாகும். பாமர மக்களின் நன்மைக்கும், தேச விடுதலை முயற்சிக்கும் இது பெரும் முட்டுக்கட்டையாகவே முடியும்.

இந்தப் பாகிஸ்தான் வாதத்தின் அடிப்படையை, வெட்டிப் பேசும் பாஷையில் ஆசிரியர் வெகு அழகாக எடுத்துரைத்திருக்கிறார். முஸ்லிம்களின் அகில உலக அபிலாஷை, பிற முஸ்லிம் நாடுகளின் போக்கு முதலியவற்றை அலசி ஆராய்ந்திருக்கிறார். இப்புத்தகத்திற்கு 'தினமணி' ஆசிரியர் ஸ்ரீ எ. என். சிவராமன் எழுதியிருக்கும் முன்னுரையே தனி நூல்போல் மிக அருமையா யிருப்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

பாகிஸ்தான் பேச்சு, வெகுவாக அடிபடும் இச்சமயத்தில், இப்புத்தகத்திற்கு நல்ல கிராக்கி இருக்குமென்பதில் ஐயமில்லை. —நீலு ராமஸாமி.

## சுதந்திரத்தின் தேவைகள் யாவை?

ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள் அடங்கிய புஸ்தகம். ஸ்ரீ வெ. சாமிநாத சர்மா மொழிபெயர்த்திருக்கிறார். பிரசுரித்தோர்: பாரத பந்தர், புஸ்தக வியாபாரிகள், இரங்கூன். 336 பக்கங்கள். விலை: ரூ. 1-8-0.

'அமெரிக்கர்களுக்கு வாஷிங்டன் எப்படியோ, அப்படியே சீனர்களுக்கு ஸென்-யாட்-ஸென். 'ஸான்-மின்-ஜீயி' என்ற தலைப்புக் கொடுத்து இங்கே வெளியிடப் பெற்றிருக்கும் பிரசங்கங்கள், இன்றும் சீனர்களால் அரசியல் வேதமாகக் கருதப்படுகிறது."

இவ்விதம் சுதந்திரத்தின் தேவைகள் யாவை என்னும் புஸ்தகத்தின் முன்னுரையில் ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா, குறிப்பிட்டிருக்கிறார்.

என்னுடைய அபிப்பிராயத்தில், ஸன்-யாட்-ஸென், எல்லோராலும் கொண்டாடப்படவேண்டிய ஒரு அறிஞன் என்றே கருதுகிறேன். இன்று, சீனா தனக்கு மிஞ்சிய பெருஞ் சக்திகளை எதிர்த்துப் போராடும் வீரம் ஒன்றே இதற்கு அத்தாட்சி. சீனர்களுடைய உள்ளத்திலே, இவன் இன்றைக்கும் வீரக் கனலாக ஜ்வலிக்கிறான். ஸன், விஷயங்களுக்குள் புகுந்து மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்திருக்கிறான். அவனுடைய ஆராய்ச்சிச் சிறப்புக்கு ஒரு உதாரணம் பார்ப்போம்:

"ஒரு பிரச்னையைப்பற்றி நாம் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்கிறபோது முதலில் ஓர் எண்ணம் உண்டாகிறது. இந்த எண்ணம் தெளிவுபடத் தெளிவுபட, அதில் ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது. அந்த நம்பிக்கையிலிருந்து ஒரு சக்தி பிறக்கிறது. ஆகையால் எந்த ஒரு கோட்பாடும் அல்லது தத்துவமும் ஓர் எண்ணத்தி லிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும்."

அழகான நடையில் தெளிவுபட எழுதியிருப்பதால், யாரும் விஷயங்களைச் சுலபமாக புரிந்துகொள்ள முடிகிறது. ஆசிரியர், இப்புஸ்தகத்தின் கடைசியில் கொடுத்திருக்கும் குறிப்புகள் மிகவும் பயன் தரக்கூடியவை என்பதில் சந்தேகமில்லை. —'ரதி'

## புதிய பத்திரிகைகள்

**வியாபாரி**: நாட்டின் வியாபாரம், தொழில்கள் முதலிடவை சம்பந்தமாக உழைப்பது இந்த வாரப் பத்திரிகை. என்றாலும், இதிலுள்ள கட்டுரைகளும் செய்திக் குறிப்புகளும், வியாபாரிகள் மாத்திரமன்றிப் பிறருமே சுவையுடன் படிக்கக்கூடிய முறையில், மிக ரஸமாய் எழுதப்பட்டிருக்கின்றன. தனிப்பிரதி விலை அரையணா. ஆசிரியர் : எம். நாகலிங்கம். விலாஸம் : 306, லிங்கிச்செட்டி தெரு, சென்னை.

**சித்ரபானு** (ஆங்கிலம்) : கலைக்கும் இலக்கியத்துக்கும் உழைக்கும் மாதப் பத்திரிகை. கண்ணைக் கவரும் அழகிய உருவம் ; நேர்த்தியான புத்தக அமைப்பு ; உள்ளே பல சிறந்த போட்டோப் படங்கள் ; சிறந்த கதைகள் ; அரிய கட்டுரைகள்—இவை யெல்லாம் சேர்ந்தது சித்ரபானு. அற்புதமாய்க் கதைகளும் கவிதைகளும் எழுதக்கூடிய மஞ்சேரி ஈச்வரனும், சங்கீதம் முதலிய கலைகளில் அறிவுமிக்க எ. என். கல்யாணசுந்தரமும் நடத்துவோர்கள் (அதாவது ஆசிரியர்கள்). தனிப் பிரதி விலை அணா ஆறு. விலாஸம் : 9/76, ராயப்பேட்டை ஹைரோட், மயிலாப்பூர், சென்னை.

**இயற்கை வாழ்வு** (ஆங்கிலம்) : இயற்கை வைத்தியம், இயற்கை வாழ்வு முறைகளைத் திறம்பட விளக்கிவருவது இந்த மாசிகை. ஆசிரியர் : ஸர்மா கே. லக்ஷ்மணன். தனிப்பிரதி விலை அணா 4. விலாஸம் : இயற்கை வைத்தியப் பிரசுராலயம், புதுக்கோட்டை.

---

புதிதாய் மணமான ஒரு டாக்டரும் மனைவியும் கடற்கரைக்குச் செல்லும் போது, வழியிலே நின்ற ஒரு பெண், டாக்டரைப் பார்த்து புன்முறுவல் பூத்தாள்.

மனைவிக்குச் சந்தேகம் பிறந்தது : "அவள் யார்?" என்று கேட்டாள்.

டாக்டர் மென்று விழுங்கிக்கொண்டு, "தொழில் சம்பந்தமாய் இரண்டொரு முறை அவளைச் சந்தித்திருக்கிறேன். அவ்வளவுதான். வேறொன்று மில்லை" என்றார்.

"அது சரிதான். ஆனால், யார் தொழில் சம்பந்தமாக? அவள் தொழிலா? உங்கள் தொழிலா?" என்று கேட்டாள் மனைவி!

---

# உடம்பும் மருந்தும்

தேகத்திலே மின்சாரம் பாய்ந்தால் ஆபத்தாய் முடிவதைக் கண்டிருக்கிறோம். ஆனால், அதே மின்சாரத்தை மூளையிலே பாய்ச்சிப் பைத்தியத்தைத் தெளியச் செய்யலாம் என்று, நியூயார்க் ராஜாங்க மனோ வைத்தியசாலை நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். கவை போன்ற இரு கம்பிகளைப் பைத்தியத்தின் தலையில் வைத்து மின்சாரத்தைப் பாய்ச்சுகிறார்கள். அந்த மின்சாரம் மூளையை மாத்திரம் தாக்கும் படியும் தேகத்தில் பாயாதபடியும் ஏற்பாடு செய்கிறார்கள். ஒரு செகண்டில் பத்தில் ஒரு பகுதி நேரம்தான் மின்சாரம் பாயும். 80 அல்லது 90 வோல்ட் சக்தியுள்ள மின்சாரமே பாய்ச்சப்படும். இப்படி இரண்டு மூன்று தடவை செய்து விட்டால், மூளை நல்ல அதிர்ச்சியடைகிறது. குருட்டுக் கனவுகளான உன்மத்த யோசனைகள் அகன்றேடி, மனம் சாதாரண நிலையை அடைந்து விடுகிறது. ஆனால், இந்தச் சிகிச்சையை மிக ஜாக்கிரதையாகச் செய்யா விட்டால், உயிருக்கே அபாயம் நேரிட்டுவிடும் என்பதையும் கவனிக்க வேண்டும்.

### 'பிளேக்' மருந்து

பம்பாய் ஹாப்னினே ஆராய்ச்சிக் கூடத்தில், 'பிளேக்' நோய்க்கு, மிக அருமையான புதிய மருந்தொன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். 'ஸல்பாதியா ஸோல்' என்ற அற்புத மருந்துச் சரக்கு பூராவையும், அதே ஆராய்ச்சிக் கூடத்தாரே தயாரித்து, அதிலிருந்து இந்தப் 'பிளேக்' மருந்தையும் செய்திருப்பதுதான் மேலும் பாராட்டத் தக்கதாகும். பிளேக் மாத்திரமல்ல ; நியுமோனியா, ரத்தத்தில் விஷம் சேர்ந்திருப்பது, மெனிஞ்சிடிஸ், கொப்புளங்கள், கிரந்தி ஆகிய அபாயமான வேறு பல நோய்களும் இந்த மருந்தினால் குணமடைகின்றனவாம்.

### டாக்டர் கட்டணம்

நகரங்களில் சொந்தமாய்த் தொழில் செய்யும் சில டாக்டர்கள் வாங்கும் கட்டணம் சகிக்க முடியாததா யிருக்கிறது. அப்படி வாங்கத்தான் வாங்குகிறார்களே; நோயாவது கட்டாயம் தீருமென்று சொல்ல முடிகிறதா? வைத்தியம் செய்வதை ஏதோ கடன் என்று அவர்கள் எண்ணி விடுகிறார்களே யொழிய, அது ஓர் புனிதமான கைங்கரியம் என்று மதிப்பதாய்த் தெரியவில்லை. அப்படிப்பட்ட டாக்டர்கள், நாலாயிர வருஷங்களுக்கு முன் புராதன பாபிலோன் நகரில் பிறந்திருந்தால், என்ன செய்திருப்பார்களோ? அப்போது பாபிலோனில் வைத்தியக் கட்டணங்கள், இன்னின்ன நோய்க்கு இன்னின்னாரிடம் இவ்வளவுதான் வாங்கலாம் என்று ராஜாங்கத்தினால் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தன. முறிந்த கைகால்களைக் குணம் செய்வதற்கு, ஒரு பணக்காரனிடம் 10 ஷெகெல் வாங்கலாம் ; ஏழையினிடமோ 2 ஷெகெல் தான் வாங்கலாம். ஆனால், வியாதியை வைத்தியர் குணம் செய்யாவிட்டால், அவரது கட்டணம் பறிமுதலாவது மாத்திரமல்ல ; நஷ்ட ஈடும் அவர் கொடுக்கவேண்டும். ரண சிகிச்சையில் ஏதோ துரதிர்ஷ்ட வசமாய் நோயாளி மாண்டு விடுவானானால், வைத்தியரின் இரண்டு கைகளையும் சர்க்கார் வாங்கி விடுவார்கள்!

### ஆரோக்கிய ரகஸ்யம்

உலகத்திலேயே பரிபூர்ண ஆரோக்கியத்துடன் வாழும் ஜனங்கள், மூன்று ஜாதியார் தானாம். (1) வடமேற்கு இந்தியாவிலுள்ள ஹன்ஸா மக்கள் ; (2) சில எஸ்கிமோக்கள் ; (3) செழித்த விவசாயமுள்ள இடத்தில் வாழும் சில சீன மக்கள்—இந்த மூன்று ஜனங்களிடமும் ஒரே ஒரு வழக்கம் மட்டில் பொதுவாயிருக்கிறது. கையில் கிடைத்த பண்டங்களை யெல்லாம் பச்சையாகவோ சமைத்தோ அவர்கள் சாப்பிடுகிறார்கள். இது ஆகாது, அது ஆகாது என்ற ஆகார நியமமெல்லாம் அவர்கள் வைத்துக் கொள்ளவில்லை. எந்தப் பயிரையும் எந்தப் பிராணியையும் சமூலமாய் அவர்கள் தின்று விடுகிறார்கள். ஆரோக்கியம், ஆகார வகைகளிலே யில்லை; அந்த ஆகாரப் பொருள்கள் எப்படி வளர்ந்தன என்பதில்தான் ரகஸ்யமிருக்கிறது. துளியும் நோய் நொடியின்றிப் பயிர்களை அவர்கள் அனைவர்களும் வளர்ப்பதால் தான், அவர்களும் அவர்களுக்கிடையே வாழும் பிராணிகளும் நல்ல உடல் நலத்தோடு வாழ்கிறார்களாம்.

### கீரைத்தண்டின் குணம்

கீரைத்தண்டிலே வெண்கீரை, செங்கீரை என இருவகையுண்டு. கீரையையும் தண்டையும் சமைத்துச் சாப்பிட, பித்தகிரிச்சரம், பிரமேகச் சூடு, இரத்த பேதி, வயிற்றுக் கடுப்பு முதலிய நோய்கள் தீருமென்று, சென்னை சர்க்காரின் பிரசுரமான 'குணபாடம்' கூறுகிறது. இவற்றோடு, வெண்கீரைத் தண்டினால், வெப்பம், வெளி மூலரோகம், பித்த எரிச்சல் ஆகியவை முக்கியமாய் நீங்கும். செங்கீரைத் தண்டினால், தீராத பித்த நோயும், பெண்களுக் குண்டாகும் பெரும்பாடும், பிரலாப சந்நிபாத சுரமும் அகலும்.

---



பாலர் கதை:

# வேலையும் கூலியும்

('மாமி')

ஒரு கோழியும் ஒரு வாத்தும் ஒரு குருவியும் சிநேகமா யிருந்தன.

கோழிக்குச் சில குஞ்சுகளும் இருந்தன.

கோழியும் அதன் குஞ்சுகளுமாய் ஒரு நாள் அங்குமிங்கும் கிண்டிக் கிளறிக் கொண்டு சென்றன. அப்போது கோழியிடம் ஒரு சோளம் அகப்பட்டது.

"இந்தச் சோளத்தை யார் விதைத்துப் பயிர் செய்யப் போகிறீர்கள்?" என்று கோழி கேட்டது.

"நான் மாட்டேன்" என்றது வாத்து.

"நானும் மாட்டேன்" என்றது குருவி,

"நானே செய்கிறேன்" என்ற கோழி, அப்படியே அதைப் பயிர் செய்தது.

பயிர் விளைந்து சோளக் கொண்டைகள் நிறைந்தன.

"யார் இப்போது அறுவடை செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டது கோழி.

"நான் மாட்டேன்" என்றது வாத்து.

"நானும் மாட்டேன்" என்றது குருவி.

"நானே செய்கிறேன்" என்ற கோழி, அப்படியே அறுவடை செய்தது.

"அறுவடையாகிக் கண்டு முதல் செய்த சோளத்தை யார் இப்போது மில்லுக்குக் கொண்டு போய் அரைத்துவரப் போகிறீர்கள்?" என்று கேட்டது கோழி.

"நான் மாட்டேன்" என்றது வாத்து.

"நானும் மாட்டேன்" என்றது குருவி.

"நானே செய்கிறேன்" என்ற கோழி, அப்படியே போய் மாவரைத்து வந்தது.

"இந்த மாவை யார் இப்போது பணியாரமாய்ச் சுடப் போகிறீர்கள்?" என்று கேட்டது கோழி.

"நான் மாட்டேன்" என்றது வாத்து.

"நானும் மாட்டேன்" என்றது குருவி.

"நானே செய்கிறேன்" என்ற கோழி, அப்படியே பணியாரம் சுட்டது.

"இந்தப் பணியாரத்தை யார் இப்போது தின்னப் போகிறீர்கள்?" என்று கேட்டது கோழி.

"நான்" என்று ஓடி வந்தது வாத்து.

"நானுந்தான்" என்று ஓடிவந்தது குருவி.

"இல்லை, இல்லை; விதைத்து, அறுத்து, அரைத்து, சுட்ட நானேதான், இப்போது தின்னவும் போகிறேன். அதை யெல்லாம் உல்லாசமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த நீங்கள், இதையும் அப்படியே பார்த்துக் கொண்டிருங்கள்" என்று சொல்லிய கோழி, பணியாரத்தைத் தானும் தின்று தன் குஞ்சுகளுக்கும் கொடுத்தது.

வாத்தும் குருவியும் தலை கவிழ்ந்து சென்றன.



## கோழி

(வண்ணை நெ. வை. செல்லையா)

கோழி கோழி கொக்கொரொக்கோ!
கூவிக் குஞ்சுகள் கொக் கொக் கொக்!
தாளால் தரையைக் கிளறிக் கொள்;
தவிக்குங் குஞ்சைப் பொறுக்கச் சொல்.

அடைகாத் திருபத் தோரா நாள்
அழகாய்க் குஞ்சுகள் வரச்செய் வாய்.
விஷமுறு ஐந்து சிலந்தி முதல்
மேவிய கறையான் பூமியி லே

இல்லா தொழிய மனிதர்க்கே
இதமே செய்வாய். விடிபொழுது
காட்டச் சிவந்த கொண்டை யுள
கணவன் சேவல் கூவிடுமே!

# கனி & சன்ஸ்

ஹெட் ஆபீஸ் :
**55-57, ராட்டன் பஜார்**

பிராஞ்சு :
**190, B, மவுண்ட் ரோடு**

மதருஸ்






1722

## ரோல்ஸ்

பிரிசிஷன் கடியாரங்கள்

1501—1722

| | | |
|---|---|---|
| ரோல்டுகோல்டு | ரூ. 60 | ரூ. 75 |
| 9 காரட் கோல்டு | ரூ. 85 | ரூ. 125 |
| 18 காரட் கோல்டு | ரூ. 110 | ரூ. 175 |

(மூன்று வருஷ உத்திரவாதம்)



## வெஸ்டுமினிஸ்டர்
சைம்

கால் அரை முக்கால் மணி நேரங்களுக்கு காதிற் கினிமையாக சங்கீதம்பாடி மணி அடிக்கும் கடியாரம். பார்வைக்கு அழகும் சித்திர வேலைப்பாடும் உள்ளது. 8 நாளைக் கொருமுறை சாவி.

15 வருஷ உத்திரவாதம்

| | |
|---|---|
| மீடியம் சைஸ் | ரூ. 105 |
| பெரிய சைஸ் | ரூ. 140 |



**PARKER VACUMATIC PENS**

See our full assortment of these marvelous Pens. Exclusive Laminated Pearl style in lovely new colors.




## பார்க்கர்
## BLUE DIAMOND

ஆயுள் பரியந்தம் உத்திரவாதமுள்ளது.

### புதிய மாடல்
### பவுண்டன்பேனா

| | | |
|---|---|---|
| பெரிய சைஸ் (Oversize) Vacuumatic | | ரூ. 39 8 |
| மேஜர் (Major) | ,, | ரூ. 33 8 |
| ஸ்டாண்டர்ட் (Standard) | ,, | ரூ. 27 0 |
| ஜூனியர் (Junior) | ,, | ரூ. 19 8 |

பேனா, பென்சில் இரண்டும் சேர்ந்து அழகான பெட்டியில் கிடைக்கும்.

**GANI & SONS**

TEL: 3746
GRAM. 'STYLO'

தந்தி: "GOODWILL" த. பெ. நெ. 113 டெலிபோன் : 2724

# ஸௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்

80, செம்புதாஸ் தெரு, ஜியார்ஜ் டவுன், சென்னை

பிராஞ்சுகள்

கல்கத்தா, காரைக்குடி, கோயமுத்தூர், திருச்சினுப்பள்ளி

எம்மிடம் திரணை, சதுரம், பட்டா, இரும்புத் தகடு, கலாய்த்தகடு, கர்டர், கலாய்ப் பைப்பு, கலாய்க் கம்பி, ஆணி வகைகள், பெயிண்டு, சிமெண்டு முதலிய எல்லா விதமான, இரும்பு சாமான்களும் கட்டிட சாமான்களும் கிடைக்கும்.

சினிமா பிடிப்பதற்கு வேண்டிய 2000 பவர் முதல் 5000 பவர் வரையில் பிரகாசமான பல்புகளும் அதைச் சேர்ந்த லைட் பிட்டிங்குகளும்

எலெக்டிரிக் வொயரிங் சாமான்கள், வொயர், பல்பு, விசிறி, எலெக்டிரிக் மோட்டார், பம்பு முதலிய எல்லா எலெக்டிரிக் சாமான்களும் கைவசமிருக்கின்றன.

Sole Distributors for Madras Presidency and States

## BLOOD VITA

பிளட் விட்டா என்பது கல்கத்தா மெடிகல் ரிசர்ச் லபாரட்டரியில் டாக்டர் அத்யக்ஷ மாதூர் பாபு என்பவரால் தயாரிக்கப்பட்ட உயர்ந்த இரத்த விருத்தி டானிக். 8 அவுன்ஸ் பாட்டில் விலை ரூ. 1/4

*

## ASCU WOOD PRESERVATIVE [ஆஸ்கூ]

இது மரப்பலகை, உத்தரம், விட்டம், டெலிபோன், எலெக்டிரிக் கம்பங்கள் முதலிய எல்லாவிதமான மரச் சாமான்களும் உளு, கறையான், மண் இவைகளால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கென்று, இந்திய சர்க்கார் காட்டு இலாகா ஆபீஸராக இருந்த டாக்டர் காமேசம் அவர்களால் கண்டு பிடிக்கப்பெற்ற, ஒரு ரசாயனப் பொருள். உபயோகப்படுத்தும் முறை இவைகளுக்கு, நேரிலோ, கடிதமெழுதியோ தெரிந்து கொள்ளலாம். ஜில்லா ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு எழுதவும்

# சக்தி மலர்கள்

[ சக்தி மலர்ப் பதிப்பு நூல்கள் தமிழ்மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் ஏற்ற உயரிய நற்கருத்துக் களை எளிய நடையில் வெளியிட எழுந்தனவாகும். ]

1. இனி நாம் செய்யவேண்டுவது யாது? (டால்ஸ்டாய்) — ரா. விசுவநாதன் மொழிபெயர்ப்பு
2. உலகம் சுற்றும் தமிழன் — ஏ. கே. செட்டியார்
3. நிர்மலகுமாரி — காழி. சிவ. கண்ணுசாமி
4. அசலா [நிருஷதாஷ்] (சரத் சந்தர சட்டர்ஜி) — ஆர். ஷண்முகசுந்தரம் மொழிபெயர்ப்பு
5. காந்தித் தாத்தா கதை — ஸ்ரீமதி காவேரி வெங்கட்ராமன், எஸ். ஆர். வெங்கட்ராமன்
6. போரும் காதலும் I, II, III, IV (அச்சில்) — பொ. திருகூடசுந்தரம்
7. பழைய கால நினைவுகள் ,, — கி. சடகோபன், உதவி ஆசிரியர், "ஹிந்துஸ்தான்"
8. கூண்டுக் கிளி (ஹரீந்தரநாத் சட்டோபாத்தியாயா) (முதலிய நாடகங்கள்) ,, — தி. ஜ. ர.
9. சரித்திரக் கதைகள் ,, — எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்
10. டால்ஸ்டாய் சிறு கதைகள் I, II, III ,, — கு. ப. ராஜகோபாலன்
11. ருஷிய ஞானி லியோ டால்ஸ்டாய் ,, — ,,

இன்னும் ருஷிய மகான் டால்ஸ்டாய் எழுதிய மற்றெல்லா நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பெறும்.

நவயுக நூல்கள், சைவ சித்தாந்தக் கழக வெளியீடுகள், பிரபஞ்ச ஜோதி வெளியீடுகள், அல்லயன்ஸ் நூல்கள், மற்றெல்லாப் புத்தகங்களும், வெளியீடுகளும் எங்களிடம் கிடைக்கும்.

## சக்தி காரியாலயம்

PUBLISHERS & BOOK-SELLERS

- G. T. MADRAS -

134185




தந்தி: Full Moon　　　　டெலிபோன்: 3725

# சோட்டாபாய் அண்டு கம்பெனி,

நகை, வைர வியாபாரிகள்

191, சைனாபஜார் ரோட்

சென்னை

தந்தி : "கல்ச்சர்" திருச்சி

"பர்மா போட்டோ"

பாக்டரி & பிராஞ்சு : ரங்கூன்

TRADE MARK

நோடு சைஸ்
கல்ச்சர் வைரம்
1-க்கு அணு 8



TRADE MARK

பேசரி சைஸ்
கல்ச்சர் வைரம்
1-க்கு அணு 6

Regd. No. 1983

தங்கமெடலும், சர்டிபிகேட்டும் பரிசுபெற்ற பர்மா போட்டோ மார்க்

**ஒரிஜினல் கல்ச்சர் வைரங்கள்**

போலி கல்ச்சர் வைரங்கள் வாங்கி ஏமாறமல் எமது "பர்மா போட்டோ ஒரிஜினல் கல்ச்சர் வைரங்களை" வாங்கித் திருப்தி அதும்படி கோருகிறேன். எலக்டிரிக் மின்சார சக்தியால் நூதன வைர முறையில் அசல் சீமைக் கமலத்திற்கு சமானமுள்ள பூரிப்பும், பல வர்ணங்களுடன் ஜோலிக்கக் கூடியவை.

**ஒரிஜினல் டைனமோ வைரங்கள்** தோடு சைஸ் வைரம் 1-க்கு ரூ. 1-0-0

"பர்மா ஸ்டார் வைரங்கள்" ரங்கூன் கமலங்களில் எல்லா க்வாலிடிகள், அசல் பவுன் தங்கத்தில் தயார் செய்த கியாரண்டியான கல்ச்சர் வைர நகைகள், லோலக், தோடு முதலியவைகள் விலை சரசமாக கிடைக்கும். அன்பர்கள் ஒருமுறை வாங்கித் திருப்தி அடையவேணுமாய்க் கோருகிறேன். பர்மா போட்டோ மார்க் "ஒரிஜினல் கல்ச்சர் வைரங்கள்" தான் மேலானவை. ஆகையால் அன்பர்கள் பர்மா போட்டோ மார்க்கை கவனித்து வாங்கவும்.

(கேட்லாக் இனும்) **செ. அருணசலம் செட்டி** (ஏஜண்டுகள் தேவை)

ஒரிஜினல் கல்ச்சர் வைர வியாபாரம், பெரிய கடைவீதி, திருச்சினப்பள்ளி.



காக்ஷிக்குத் தயார்!

சென்னையில் ஆரம்ப தேதியை எதிர்பாருங்கள்!



Tara Film Exchange Presents

# துளசி பிருந்தா

தென்னட்டு பதிவிரதா மகிமையை விளக்கும் புராணச் சித்திரம்

கொத்தமங்கலம் சீனு, புலியூர் துரைசாமி அய்யர், என். நாகராஜன், சுப்ரமணிய பாகவதர், சங்கீதவாணி சங்கரிபாய், ஜே. சுசீலா, வி. சுப்புலக்ஷிமி, டி. ஆர். சாரதா, சி. டி. கண்ணபிரான், கே. வி. சொர்ணப்பா முதலியவர்கள் நடித்தது

விபரங்களுக்கு :

**TARA FILM EXCHANGE, [Shimoga & Bangalore City]**

*Camp:* MODERN CAFE, 4, THAMBU CHETTY ST., G. T. MADRAS

**READY FOR BOOKING**

விப்ர நாராயண (Huns Production)
தமிழ்
டி. சூர்யகுமாரி, திருச்சூர் பிரேமாவதி, மதுரம், மீனுக்ஷி
நடித்தது

பாக்தாமண் or THE LOVE
(Krishna Cinetone Production)
வீரா, பாம்பியாரி நடித்தது
கன்ஜிபாய் ராத்தோடே டைரக்ட் செய்தது




Edited, Printed and Published by V. Govindan at Shakti Press Limited